
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
செப்.12-18,1999
ரூபா 12/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 326

## தலைநகரில் புலிகளின் வலைப் பின்னல்

## தமிழ்க் கட்சிகளுக்கு படையினர் நடத்தும் பாடம்



## இலங்கை அரசு விரும்பாத பிரதமர்



## உளவாளிகளும் புலிகளும்

## தமிழ்த் திரையுலகில் மும்பாய் புயல்

# முரசம்

## ஒரே மேடையில்....

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

அம்பாறையில்
கல்லோயா அபிவிருத்தித் திட்ட
ஐம்பதாவது பொன்விழா
அமர்க்களமாக நடந்துள்ளது!

இந்தப் பொன்விழாவின்
உண்மையான அர்த்தம்,
திட்டமிட்ட
சிங்களக் குடியேற்றத்தின்
வெற்றிப் பெருமிதமே!

அம்பாறையிலிருந்துதான்
திட்டமிட்ட குடியேற்றம்
தமிழ் பேசும் மக்களது
தாயகத்தை விழுங்கும்
நோக்கோடு ஆரம்பமானது!

பிரிட்டிஷ்காரர்கள்
சிங்கள ஆளும் வர்க்கத்திடம்
அதிகாரத்தைக் கைமாற்றிய
சூட்டோடு சூட்டாக
அம்பாறை அபகரிப்புக்கு
அடிகோலப்பட்டது.

ஐம்பது ஆண்டுகளில்
செழித்து வளர்ந்து
பெருத்து நிற்கிறது!

இதனைத்தான்
அபிவிருத்தித் திட்டத்தின்
'பொன்விழா'
என்ற அழகான போர்வையோடு
அமோகமாகக் கொண்டாடியுள்ளனர்!

வடக்கு-கிழக்கில்
அபிவிருத்தித் திட்டங்கள்
என்பவை
சிங்களக் குடியேற்றங்களுக்கு
சூட்டப்பட்ட
இன்னொரு பெயர்தான்!

இந்த வெற்றி விழாவில்
கலந்து கொண்டவர்கள்
வீர விதான போன்ற
இயக்கத்தினர் என்றால்
அது வேறு விடயம்!

ஆனால், மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவரும்,
பிரதி பாதுகாப்பு அமைச்சரும்
தமது கட்சி வேறுபாடுகளை
மூட்டை கட்டிப் போட்டுவிட்டு,
விழா மேடையில்
ஒன்றாகத் தோன்றினார்கள்!

கடந்த ஐம்பத்தொரு
ஆண்டுகளாக
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
ஆளும் அணி, எதிரணி
ஒன்றுபட்டதே கிடையாது!

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
ஆளும் அணி
ஒரு யோசனை கூறினால்,
எதிரணியில் உள்ளோர்
வேறொரு யோசனை கூறுவர்!

இதுவும் இன்று நேற்றல்ல,
தொன்றுதொட்டு
நிலவிவரும் வழக்கம்!

ஆனால், பேரினவாதத்தை
திருப்தி செய்கின்ற
திட்டங்களைப் பொறுத்தவரை,
ஆட்சிகள் மாறினாலும்
திட்டங்கள் கைவிடப்படுவதில்லை!

கல்லோயாத் திட்டமும்
டி.எஸ். சேனநாயக்காவால்
தோற்றுவிக்கப்பட்ட திட்டம்தான்!

ஆனால், பண்டாரநாயக்கா உட்பட
இன்றைய ஜனாதிபதிவரை
அம்பாறையை சிங்கள மயமாக்கும்
திட்டத்தை சிரமேற்கொண்டுள்ளனர்!

கல்லோயா பொன்விழாவிலும்
தமது சொந்தத் திருவிழாவாக
எண்ணி இரு தரப்பும்
கலந்து சிறப்பித்துள்ளன!

கடந்த பல வருடங்களாக
தமிழ்க் கட்சிகள்
இந்த இரு கட்சிகளிடமும்
ஒன்றுபட்டுத் தீர்வுகாணுமாறு
இறைஞ்சி வருகின்றன!

கழுவிய நீரில்
நழுவுகிற மீன்களாக
ஒருவர் மற்றவரைச் சாடிவிட்டு
நழுவிக் கொண்டிருப்பதே
இரு தரப்பினதும் வழக்கம்!

அம்பாறை விழாவில்
இரு தரப்பும்
கலந்து கொண்டு
வெற்றி விழாவை
களைகட்ட வைத்துள்ளனர்!

இதுதான் நிலமை!
ஆளும் அணியும், எதிரணியும்
எந்தெந்த சந்தர்ப்பங்களில்
ஒன்றுபட்டுத் தோன்றுகின்றன
என்பது வெள்ளிடைமலை!

கண் இருந்தும்
குருடராய் இவற்றை
காணமறுப்போர் உள்ளனர்!

காதிருந்தும் செவிடராய்
இவற்றைக் கேட்க
மறுப்போரும் உள்ளனர்!

இதன் பின்னரும்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
இரு அணிகளும்
மனப்பூர்வமாக இணையும்
என்று நம்புவோருக்கு
நாம் என்ன செய்வது?!

இனப் பிரச்சனைத் தீர்வுக்கு
இரு அணிகளும்
இணையாது இருப்பதற்கு
வெறும் மனக்கசப்புக்கள் மட்டும்
காரணமல்ல என்பது
இப்போதாவது புரியாதா?

எனவே, இனப்பிரச்சனைத்
தீர்விற்கு இவர்களிடையே
இணக்கப்பாடு காண்பது
நடக்கக் கூடியதுமல்ல,
அது நம் பணியுமல்ல!

தமிழ் பேசும் தரப்பு
ஒன்றுபட்டு ஒரே குரலில்
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
கோருவதே ஒரே வழி!

கல்லோயாப் பொன்விழா
கற்றுத்தரும் பாடமும்
அதுதான்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்***

# ஆன்மீகம்

## முக்தியை நல்கும் பணி

ஆன்மீக இலட்சியத்தை அடைவதற்கு செய்யும் சாதனைகளில் ஜீவ சேவை முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஜீவசேவையையோ, அன்றி ஆன்மீக இலட்சியத்தையோ நாம் புறக்கணிக்க முடியாது.

ஜீவ மகிமை ஆன்மீகத்தில் அடங்கியுள்ளது. ஆன்மீகக் கண்ணோட்டம் இல்லாத மனித சேவை பயனளிக்காது. மக்கள் பணியையும் கடந்த நிலையில் ஆன்மீக அனுபூதி வாய்க்கப் பெறுகிறதேயன்றி ஜீவசேவையைப் புறக்கணிப்பதன் வாயிலாக அன்று.

அதனால் தியாகமும் சேவையும் உள்நோக்கும் கர்மமும், தம் பண்பாட்டிலும் சமயத்திலும் ஒருங்கிணைந்துள்ளன. சேவை இல்லாத தியாகம் எதிர்மறை மதிப்பையே பெறுகிறது. தன்னலமற்ற சேவையை ஊக்குவிக்கும் பொழுதுதான் இது உடன்பாட்டு மதிப்பைப் பெறுகிறது.

இறைவனின் பொருட்டு செய்யப்படும் தியானம் சமூக சேவையின் வாயிலாக நிறைவு பெறுகிறது. தன்னலத் தியாகமின்றி செய்யப்படும் சேவை சுமையாகவும், தயையாகவும் இருக்கும். ஆனால் இறையன்பினால் தூண்டப்பட்டு புரியும் சேவை நம்மை சீலத்தில் உயர்த்தி முக்தியை நல்குகிறது.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்-சேனையூர்-06, மூதூர்.



## புன்முறுவல் செய்வதும் ஓர் அறமே

இறை நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படும் ஒவ்வொரு நற்செயலும் வணக்கமே. தொழுகையும், நோன்பும் வணக்கமே. அது போன்றே இல்லற வாழ்வும் வணிகமும், சமூக சேவையும் வணக்கங்களே ஆகும். அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் வணக்கமாக மாற்றும்போது மனம் நிம்மதியடைவதோடு ஈருலக வெற்றியும் கிடைக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

ஒவ்வொரு நற்செயலும் ஓர் அறமே (நூல்: புகாரி; முஸ்லிம்)

கதிரவன் எழும் ஒவ்வொரு நாளிலும் உடம்பின் ஒவ்வொரு பாகமும் ஓர் அறத்தைச் செய்யவேண்டும். இருவருக்கிடையில் நீதியுடன் நடந்துக் கொள்வதும் அறமே.

ஒருவருக்கு வாகனத்தைக் கொடுத்து உதவுவதும், வாகனத்தில் ஏற உதவுவதும், சரக்குகளை வாகனத்தில் ஏற்ற உதவுவதும் நற்செயல் மொழிவதும் அறமே.

தொழுகையை நோக்கி எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியும் அறமே. பாதைகளில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் அறமே. (நூல்: புகாரி; முஸ்லிம்)

மிகச் சிறிய நற்செயலையும் அற்பமாகக் கருதாதீர்கள். உங்கள் சகோதரனை புன்முறுவலுடன் சந்திப்பதும் ஓர் அறமே. (நூல்: முஸ்லிம்)

தொகுப்பு: மருதமுனை மினாலேன் அபூக்ஷோர்.

# கவிதைப் போட்டி இல. 323

### பரிசுக்குரிய கவிதை

## அஞ்சலி

உதிர்ந்த
மலருக்காய்
உருகும்
மொட்டு இது!

சிவராம்-வவுனியா.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### சாதனை

ஐந்தாண்டு
ஆட்சி சாதனையில்
இதுவும் ஒன்று!

கலை'தேவ்'வி-
லிண்டுலையூர்

### யார் அழுவார்?

அப்பாவோ வெலிக்கடையில்
அப்போது நீ அழுதாய்!
அம்மா நீ செம்மணியில்
இப்போது நானழுவேன்!
எனக்கெங்கு புதைகுழியோ
எனக்காக யார் அழுவார்?

சி. தருமலிங்கம்- ஆரையம்பதி.

### இழக்க மாட்டேன்

உன் மேல்
சத்தியம்
இதய
உறுதியை
இழக்க
மாட்டேன்...!

வே. பேள் எமிலிய-
வவுனியா.




### ஞானம்

இனிமேல் அழுது
இலாபமில்லை;
என்னுயிர் தவிர
இழப்பதற்கு இனி
ஏதுமில்லை!

மட்டுநகர் நர்மி-
மட்டக்களப்பு.

# கவிதைப் போட்டி இல.326



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.09.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.326
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கொண்டாட்டம்

நாடு முழுவதும்
ஐந்தாண்டுக் கொண்டாட்டம்
இந்த ஐந்து வயதுக் குழந்தைக்கு
தாயை இழந்த
திண்டாட்டம்!

ஜோசப் தேவநாயகம்-கொழும்பு-14.

### கொத்திக் கொண்டதோ!

தத்தித் திரிந்திடும்
தங்கக் கொடியிதன்
பற்றிப் படர்ந்திடும்
பாசத் தாயினைக்
கொத்திக் கொண்டதோ
கோரப் போரது!!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-2.

### யாருமேயில்லை

தாய்க்காக அழ
நீ இருக்கின்றாய்;
உனக்காக அழ
யார் இருக்கின்றார்?

எஸ். றகுமத்துல்லா-சவளக்கடை.

### அழுகுரல்!

அம்மாவைக் காணாத பிஞ்சு
அழுகுரல்கள் கேட்கின்றன...!
ஆண்டவனின் செவிகளிலே
அவைகளும்தான் கேட்கலையோ??

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

### யுத்தமேகம்

முடம் ஆனார் அப்பா,
படம் ஆனார் அம்மா,
இடம் பெயர் வாழ்வுடன்
ஜடம் ஆனேன் நான்!

கே. சசிப்பிரியா-காக்கையன்குளம்
மகாவித்தியாலயம்.

### சீரழிந்த நாடு!

சீரழிந்த நாட்டினிலே
சீராட்ட நீயில்லை!
பரிதவிக்க விட்டுவிட்டு
பறந்தாயே என்னம்மா!

டி. விஜயபாரதி-3ம் கட்டை,
பசறை.



# வாசக(ர்)சாலை

## எழுப்ப முடியாது

முரசே! பொ.ஜ.முன்னணியின் ஐந்து வருட ஆட்சி நிறைவுக்கு தமிழ்க் கட்சிகளை அழைக்காதது பற்றி அதிரடியாரும் கிண்டல் பண்ணியிருந்தார். தூங்குவதுபோல நடிப்பவர்களை ஒரு போதும் எழுப்பவே முடியாதய்யா.

பி.சுரேந்திரன், கொழும்பு-06.

## அவளும், அவனும், ஜெயகாந்தனும்...

முரசில் வெளியான சிறந்த கதையொன்றை ருசித்த பெருமை என்னைச் சாரும்; என் மனதையும் சாரும். 'கோகிலா என்ன செய்து விட்டாள்..' தொடர் கதையின் முடிவில் இருவரும் பிரிந்தே போவார்கள் என நினைத்திருந்தேன். (எனக்கேயுரிய கவலையில்) ஆனாலும்... ஜெயகாந்தன் இணைத்துவிட்டார். அடுத்த அசத்தலை முரசின் திரையில் காண்பதற்கு விழியைத் தூசி தட்டித் துடைத்து விட்டுக் காத்திருக்கிறேன்.

கே.எஸ்.புவன், அக்கரைப்பற்று-07.



## பொதி வர வேண்டாம்

அன்பு முரசே!

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு திட்டம் தீட்டி பொத்தி வைத்துள்ள பொதி, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை தமிழ்க் கட்சிகள் எதிர்க்கவன்றோ வேண்டும்! அதை விடுத்து இதோ வருகிறது. அதோ வருகிறது என்ற ஜோசியங்களை நம்பி இவர்களும் கருத்துக்கள் கூறுவது சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது. ஐக்கியதேசியக் கட்சி பொதியை எதிர்ப்பதை சில பத்திரிகைகளும் பெரிதாகக் கூறுகின்றன. தமிழ்க் கட்சிகள் செய்ய முடியாத பணியை எதிர்க்கட்சி செய்யட்டும். யார் தடுத்தால் நமக்கென்ன? அரைகுறையான பொதி சபைக்கு வந்து உலகை ஏமாற்றாது இருந்தால் சரிதான்.

வி.தங்கராஜா, மட்டக்களப்பு.

## அவமானம்

அன்பு முரசுக்கு,

அரசின் ஐந்தாண்டு சாதனை பற்றிய ஆசிரியர் கருத்து அருமை. தமிழ்க் கட்சிகளை கொண்டாட்டத்துக்கு அழைக்காது, சந்தேகப் பட்டியலில் சேர்த்து, அரசு செய்த அவமானமும் அருமை. தமிழ்க் கட்சிகள் உள்ளே அழுதிருப்பர். வெளியே தோதாக விளக்கம் உரைத்திருப்பர்.

ஆர்.பாக்கியநாதன்,
திருக்கோணமலை

அன்பு முரசே!

முரசு தரும் செய்திகள் யாவும் தித்திப்பானவை! 'சினி விசிட்' பகுதியில் வெளியான தமிழ் திரைப்படத்தின் விமர்சனங்களும், செய்திகளும் அருமையாக உள்ளன. மேலும் விளையாட்டு வீரர் ஸ்டீவ் வோவ் செய்யும் சமூக சேவை பாராட்டத்தக்கது! தொடரட்டும் முரசின் தமிழ்ப் பணி!

வெ.ரா்ம்குமார், துபாய்.

## எச்சரிக்கை மணி

வன்னியில் நில உருமாற்றம் பற்றிய இராஜதந்திரியாரின் அலசல் உரிய நேரத்தில் ஒலித்துள்ள எச்சரிக்கை மணியாகும். குடாநாட்டிலும், வன்னியிலும் படையினரால் பிடிக்கப்பட்ட பகுதிகள் நிலை ஒரே விதமாக உள்ளன. அங்கு இடம் பெயர்ந்தோர் குடியேற முடியாத நிலை உருவாக்குவது, நாளை புதிய குடியேற்றங்களை நிறுவும் திட்டப்படியே நடக்கிறது.

எஸ்.பூவராகவன், வவுனியா.

## எதிர்ப்பதால் மட்டும்

முரசுக்கு

ஆளும் கட்சி தமிழ் மக்களுக்கு எலும்புத்துண்டுகளை வீசினால்கூட, அதுவே அதிகம் என்ற எதிர்ப்பதே எதிர்க்கட்சியின் வழக்கம். எக் கட்சி எதிர்க்கட்சியாக இருப்பினும் இது நடைமுறையில் கடந்த 51 வருடங்களாக நாம் கண்டுள்ள உண்மை. இராஜதந்திரியார் சுட்டிக் காட்டியது போன்று, எதிர்க்கட்சி எதிர்க்கிறது என்பதால் தற்போதைய அரசின் பொதி உயர்ந்ததோ, சிறந்ததோ அல்ல.

ஆர்.வில்சன், கொழும்பு-07.

## மகிழ்ச்சிக்கு ஈடில்லை

என் அன்பின் முரசுக்கு

நீ சுமந்து வருகின்ற அனைத்து அம்சங்களும் சுப்பர். அதிலும் 'கோகிலா என்ன செய்துவிட்டாள்' அருமையான தொடர். ஜெயகாந்தன் நாவல்களை ஒரே மூச்சில் படித்து முடிப்பவன் நான். அனைத்தையும் படிக்க கிடைக்காதது பெரும் மனக்குறையே! முரசில் ஜெயகாந்தன் 'கோகிலா' இடம்பெற்றது மகிழ்ச்சி.

இ.உமாசங்கர், மகிழூர்-01,
களுவாஞ்சிக்குடி.

நான் நினைக்கவில்லை. 'கோகிலா என்ன செய்து விட்டாள்' என்ற தொடரை இவ்வளவு சீக்கிரமாக முடிப்பீர்கள் என்று.

உண்மையில் வாழ்க்கையின் யதார்த்தத்தில் நடக்கும் பல விடயங்களை பட்டவர்த்தனமாக ஆசிரியர் ஜெயகாந்தன் தந்தார். தொடர்ந்தும் இவ்வாறான சிறப்பான தொடர்கதைகளை முரசு தர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

நிஹார அஸீஸ், புத்தளம்.

## வெற்றி வேட்டுக்கள்

இனிய முரசுக்கு,

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழ்க் கட்சிகள் அடங்கியே நின்றன. வவுனியாவில் புளொட் தாக்கப்பட்டது. பின்னர் இப்போது ரெலோ தாக்கப்படுகிறது. இக்கட்சிகளுக்கு இன்றே இந்த நிலையானால், இராணுவம் வெற்றிகளை குவித்திருந்தால் வெற்றி விழா வேட்டுக்கள் இவர்கள் மீதே தீர்க்கப்பட்டிருக்கலாமோ?

மா.உதயரவி, வவுனியா.

## இங்கும் புதை குழிகள்

முரசுக்கு

எத்தனையோ புதை குழிகள் தோண்டியும் தோண்டாமலும், அத்துடன் மண்டைதீவிலும் பல தண்ணீர்க் கிணறுகள் மனித உடல்களால் நிரப்பப்பட்டு மூடிக் கிடக்கின்றன. இதை யார் கவனிப்பார்?

மண்டைதீவு மோகன்,
கொழும்பு.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பரிலும் சூப்பர். அதிலும் 'கையில் சிக்கிய மின்னல்' தொடரை மிகவும் சிறப்பாக வழங்கும் ராஜேஸ்குமாருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இத்தொடரைச் சுமந்து வரும் முரசுக்கு எனது பாராட்டுக்கள்.

ரா.ப.அருஸ்,
கிண்ணியா-03.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# கொழும்பில் புகுந்துள்ள புலியணி
# இலக்குகள் நோக்கிக் காத்திருப்பு

**கொ**ழும்பு நகரில் புலிகளது செயற்பாடுகள் பல ரூபங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

சமீபத்தில் கொழும்பில் வைத்து ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே வெள்ளவத்தையில் உள்ள தனியார் தொடர்பு நிலையத்திலும் சில இளைஞர்கள் கைதாகினர்.

எனினும் இக் கைதுகள் மூலமாகவும் புலிகளது கொழும்பு வலைப் பின்னல் பற்றி புலனாய்வுத் துறையினரால் கண்டறிய முடியவில்லை.

எரிக் சுந்தரநாயகம் என்னும் இளைஞர் புலிகள் இயக்கத்தின் கொழும்பு நடவடிக்கைகள் சிலவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

இவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விடுதலையானவர். தமிழ் கட்சி ஒன்றுடன் நெருக்கமாக இருந்தவர். அக் கட்சியினருக்கு இவர் புலிகளது தொடர்பாளர் என்பது தெரிந்திருக்கவில்லை.

நீலன் கொலையோடு தொடர்புடைய சில ஏற்பாடுகளையும் எரிக் சுந்தரநாயகம் மேற்கொண்டதாக புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

### தப்பினார்

எரிக் கைதானால் நீலன் கொலை தொடர்பான முழு விபரங்களும் கிடைக்கலாம் என்பதால், புலனாய்வாளர்கள் அவருக்கு வலை விரித்தனர். அவரோ இந்தியாவுக்கு விமான மார்க்கமாக தப்பிச் சென்றுவிட்டார்.

எரிக் வாடகைக்கு பயன்படுத்திய வாகன சாரதியும் கைதானார். அந்த சாரதி எரிக் சென்றுவந்த இடங்களை காண்பித்தாராம். அதில் ஒன்றுதான் கல்கிசை மறைவிடம். அங்கிருந்த வெடி பொருட்கள் சில கைப்பற்றப்பட்டன.

அந்த வெடிபொருட்களை கொண்டு வந்து சேர்ந்தவர் மன்னார் அரச அதிபரது சாரதி என்று கூறப்படுகிறது. அரச அதிபருக்கே தாம் கூறித்தான் இந்த விபரங்கள் தெரியும் என்று முன்னர் பொலிசார் தெரிவித்திருந்தனர். ஆனால் தற்போது அரச அதிபரையும் கைது செய்துள்ளனர்.

எரிக் மூன்று இடங்களில் தங்கியிருந்துள்ளார். ஆனால் எங்கும் பொலிஸில் பதிந்ததாகத் தெரியவில்லை என்றும் ஒரு தகவல் கூறுகிறது.

வெள்ளவத்தையில் கைதான இளைஞர்கள் எரிக்குக்கு நண்பர்கள். புலிகள் இயக்க உறுப்பினர்கள் அல்ல என்றும் கூறப்படுகிறது.

### விருந்து

நீலன் கொல்லப்படுவதற்கு முன்னர், அத் தாக்குதலில் ஈடுபட இருந்த கரும்புலிக்கு வத்தளை கடற்கரையில் வைத்து பிரியாவிடை நடைபெற்றதாம். விருந்தும் நடந்துள்ளது.

கரும்புலியாக செல்பவர் தாக்குதலுக்கு முதல் நாளன்று தனது சகாக்களுடன் விருந்துண்டுவிட்டுச் செல்வது வழக்கம். விருந்தில் எரிக்கும் கலந்து கொண்டாராம்.

கொழும்பில் பல்வேறு ரூபங்களில் புலனாய்வுத் தகவல்களை திரட்டுவதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

தாக்குதல் இலக்குகளுக்காக கரும்புலிகள் சிலரும் வந்து தங்கியுள்ளனர். வெவ்வேறு வழிகளில் வெடி பொருட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஒருவர் கைதானால்கூட ஏனையோர் பற்றிய விபரங்கள் தெரியாதளவுக்கு புலிகள் இயக்க உறுப்பினர்கள் கொழும்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனராம். அதனால் புலி ஒருவர் கைதானால்கூட, அதனை வைத்து புலிகளது செயற்பாடுகளை கண்டறிவது இயலாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தல்கள் நெருங்கி வருவதால் முன் கூட்டியே புலிகள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு இலக்குகளுக்காக காத்திருக்கப் போகிறார்களோ என்றும் புலனாய்வாளர்கள் அஞ்சுகின்றனர்.

---

## 'புதைக்கப்பட்டவை மறைக்கப்பட்டன!
## குடாநாட்டில் பரவலான சந்தேகம்'

**யா**ழ் குடாநாட்டில் பல மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு தடயங்கள் அகற்றப்பட்டுள்ளதாக ராஜபக்ஷ கூறியுள்ளார். அதற்கான அறிகுறிகளும் தெரிந்துள்ளன.

புதைகுழிகள் தோண்டப்படாது நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட்டபோதே, செம்மணியில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் தொடர்பாக 'முரசு' தகவல் வெளியிட்டிருந்தது.

தற்போது அச் சந்தேகங்கள் வலுப்பட்டுள்ளன. குழி ஒன்றுக்குள் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு மட்டும் காணப்பட்டது.

இலக்கத் தகட்டை மறைக்க வேண்டுமானால், அந்த வாகனத்திற்கு உரியவர் கொலை செய்யபட்டிருக்க வேண்டும். எனவே அவரது உடல் எங்கே போனது? என்று சந்தேகம் எழுந்துள்ளது.

உடலை அகற்றிவிட்டு, மண் தோண்டப்பட்டதா என்று சந்தேகம் வராமல் இருப்பதற்காக இலக்கத்தகட்டை மட்டும் விட்டு வைத்தனரா? என்றும் காணாமல் போனோரின் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காணாமல் போனோர் சங்கத்தைச் சேர்ந்த செல்வராசா என்பவர் படையினரால் கைதானது, புதைகுழி தோண்டப்பட்டு விசாரணைகள் சீராக நடப்பதற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருதப்படுகிறது.

கைக்குண்டை அவரது வீட்டில் மறைத்து வைத்துவிட்டு கைது செய்த சம்பவமானது மிகப் பாரதூரமான விடயமாகும்.

இவ்வாறு செய்யத் துணியும்போது புதைகுழிகளுக்கு படையினரோ பொலிசாரோ வழங்கிய பாதுகாப்புக்களை நாம் எப்படி நம்பமுடியும்? என்று காணாமல் போனோர் சங்கத்தினர் கேட்கின்றனர்.

---

## தாசன் மீதான தாக்குதல்
## புலிகளின் செய்திக் குறிப்பு

**மா**ணிக்கதாசன் பலியானது தொடர்பாக புலிகள் விடுத்த செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:

"சிறீலங்கா படையுடன் சேர்ந்து தமிழின அழிப்பிலும், தமிழீழ விடுதலைக்கு எதிரான செயற்பாட்டிலும் முக்கிய பங்கெடுத்து, தீவிரமாகச் செயற்பட்டுவந்த புளொட் குழுவின் உபதலைவரும் அதன் இராணுவப் பொறுப்பாளருமான மாணிக்கதாசன் வவுனியாவில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளார்.

சிங்களப் படைத் தலைமையையும், புளொட்டினரையும் குழப்பத்திற்கும், கலக்கத்திற்கும் உள்ளாக்கும் விதமாக இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மிகவும் நுண்ணிய முறையிலும் லாவகமாகவும் எதிரியின் கூடாரத்திலேயே வெடிகுண்டு பொருத்தி வைக்கப்பட்டு றிமோட் கொன்றோல் மூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இரகசிய தடுப்பு முகாம்களை நடத்தி, கடத்தல்கள், மர்மக் கொலைகள், கொடூர சித்திரவதைகள் என்பவற்றை தமிழர்களுக்கு எதிராக நடத்தியதில் மாணிக்கதாசன் முன்னிலை வகித்து வந்தார். இராணுவத்தின் ஒரு அங்கமாகவே புளொட் செயற்பட்டு வருகிறது" இவ்வாறு புலிகளது செய்திக் குறிப்பு தெரிவித்திருந்தது.

---

## இறுதிச் சடங்கில் மோதல்
## சித்தார்த்தன் அணி வாபஸ்

**பு**ளொட் மாணிக்கதாசனின் இறுதிச் சடங்கில் உள் மோதல் வெடித்தது. இதனால் சித்தார்த்தன் அணியினர் வவுனியாவை விட்டு உடனடியாக வெளியேறினார்கள்.

மாணிக்கதாசனின் இறுதிச் சடங்கு நடப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் புளொட் முக்கியஸ்தர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

### அடுத்தது யார்?

அக் கூட்டத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தன் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். பலியான மாணிக்கதாசனின் இடத்துக்கு யாரை நியமிப்பது? என்று அக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அப்போது சித்தார்த்தன் அணியினருக்கும், தாசன் அணிக்கும் இடையே காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

இதனையடுத்து சித்தார்த்தன் அணியினர் கூட்டத்தில் இருந்து வெளியேறியதுடன், தமக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கருதி இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளாது கொழும்பு திரும்பினார்கள்.

சித்தார்த்தன் எம்.பி., வவுனியா முன்னாள் நகர சபைத் தலைவர் லிங்கநாதன், புளொட் முக்கியஸ்தர்களான மோகன், ஆர்.ஆர். ஆகியோரே கொழும்பு திரும்பியோராவர்.

இறுதிச் சடங்கில் நூற்றுக்கணக்கானோரே காணப்பட்டனர். அதிலும் பெரும்பாலானோர் புளொட் உறுப்பினர்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பவில்லை.

### உட்பூசல்

கடைகளும் புளொட்டின் பயமுறுத்தலுக்கு பயந்தும், மோதல்கள் நடக்கலாம் என்று கருதியுமே மூடப்பட்டிருந்தன. வெள்ளைக் கொடிகள் புளொட் உறுப்பினர்களால் கட்டப்பட்டிருந்தன.

ஏற்கனவே பலியான சண்முகநாதன் எம்.பி., தாஸ் போன்றோரின் மரணச் சடங்குகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. புளொட் உட்பூசலும் மரணச் சடங்கு அரை குறையாக நடப்பதற்கு முக்கிய காரணமாக பேசப்படுகிறது.

---

## தளபதி ஹரிபாபு—வன்னி புளொட் அறிவிப்பு

**மா**ணிக்கதாசன் பலியாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் புளொட் சித்தார்த்தன் அணியும், தாசன் அணியும் இணைந்து செயற்பட முடிவு செய்திருந்தனர்.

மாணிக்கதாசனின் மறைவை அடுத்து மறுபடி புளொட் இரு பிரிவாக நிற்கிறது.

மாணிக்கதாசனுக்கு பதிலாக ஹரிபாபுவை புளொட் இராணுவத் தளபதியாக நியமிப்பதாகவும், புளொட் உபதலைவரும் அவரே என்றும் வவுனியா புளொட் அறிவித்துள்ளது.

மாணிக்கதாசனின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் வைத்து அந்த அறிவிப்பு வெளியானது. இதனை சித்தார்த்தன் அணியினர் ஏற்க மறுத்துள்ளனர்.

ஹரிபாபு மாணிக்கதாசனின் வலது கரமாக இருந்தவர். மாணிக்கதாசன் போன்றே புலிகளுக்கு எதிராக படையினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கக்கூடியவர்.

இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய ஹரி பாபு, "பதவிக்கு ஆசைப்பட்டு நாம்தான் கொலை செய்ததாக அரசியல் ஆசை உள்ளவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அந்த அரசியல் வாதிகள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளாமல் சென்றுள்ளனர். எனவே சதி செய்தது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்" என்று கூறினார்.

---

## பொதிக்குள் சைக்கிள்—யாழ் அனுப்ப உத்தி

**கொ**ழும்பிலிருந்து யாழ் குடாநாட்டு தபால்மூலம் அனுப்பப்பட்டு வரும் பொதிகள் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் பொதியிடப்படுவதாக தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட நிறைக்கும் நீள அகல உயரப் பிரமாணங்களுக்கும் உட்பட்ட வகையில் பொருட்கள் பொதியிடப்பட வேண்டும் என்பதும், உள்ளிருக்கும் பொருட்கள் தடை செய்யப்படாத வகையைச் சார்ந்ததாகவும், ஏனைய தபாற் பொருட்களுக்கு ஊறு விளைவிக்காததுமாக அமைய வேண்டும் என்பதும் அஞ்சற் திணைக்களத்தின் நிரந்தர விதியாகும்.

எனினும் கொழும்பில் உள்ள சில முகவர் தபால் நிலையங்கள் பொதி செய்யும் கூலியாக நூற்றுக் கணக்கான ரூபாயை அறவிட்டு லாபம் காண்பதற்காக பொதியிடும் விதிமுறைகளையெல்லாம் மீறிச் செயல்படுகின்றன.

இதனால் பொதியை ஏற்று விநியோகிக்கும் கடமையைச் செய்யும் திணைக்களத்துக்கு ஒரு பொதியால் கிடைக்கும் வருமானத்தை விட முகவர் தபால் நிலையங்கள் இருபது முப்பது மடங்கு வருமானத்தை பொதி கட்டும் கூலி என்ற போர்வையில் பெற்று விடுகின்றன.

குடா நாட்டுக்குச் செல்லும் கடிதங்கள் பொதிகள் உட்பட எல்லாப் பொருட்களும் திருக்கோணமலை அஞ்சல் நிலையத்தில் வைத்து கடற்படை அதிகாரிகளால் பரிசீலிக்கப்படுகின்றன. இவ்வாறு பரிசீலிக்கும் போது கடந்த வாரம் ஒரு பொதியில் பி.எம்.எக்ஸ் சைக்கிள் ஒன்று கழற்றி அடுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. ஒரு மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாச்சிப் பகுதி வேறொரு பொதியில் இருக்கக் கண்டுபிடிக் கப்பட்டது.

சாராயப் போத்தல்களைப் பொதி செய்து ஒருவர் அனுப்பியிருக்கிறார். உயர்ரக சிகரட் அடக்கிய பெட்டிகள் நிறைந்த பொதியொன்றும் காணப்பட்டது. ஒரு பொதியில் தோய்த்து உலர்த்தப்படாத ஆடைகளும் பழைய செருப்புகளும் காணப்பட்டன. என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

---

## மக்கள் எழுப்பும் சந்தேகம்

**ம**ன்னார் அரசாங்க அதிபர் எஸ்.எம்.குரூஸ் கடந்த 04.09.99 அன்று விசாரணைக்காக சென்றபோது கல்கிசை சீ.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை குறித்து மன்னார் மக்கள் பெரும் துயரமடைந்துள்ளனர்.

இவரின் சாரதி உதயன் கடந்த 27.08.99 அன்று மன்னாரில் வைத்து கைது செய்யப்பட்ட பின்னர் மேல் விசாரணைக்காக கல்கிசைப் பெலிசில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

உதயனைக் கைது செய்து 3 நாட்களின் பின்பே மன்னாரிலும் ஆயுதங்கள், வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அரச அதிபரின் பஜேரோ வாகனம் நிறுத்தும் கராஜில் இருந்துதான் வெடி பொருட்கள் எடுக்கப்பட்டன.

'அரச அதிபர் சம்பந்தப்பட்டிருந்தால் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்குமா? அவரால் அது மறைக்கப்பட்டிருக்குமே' என்று மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர்.

---

## கிழக்கில் இராணுவ நகர்வு!
## புலிகளை முடக்கும் நிலப்பிடிப்பு!

**வ**டக்கிலிருந்து கிழக்கிற்கும்-கிழக்கிலிருந்து வடக்கிற்கும் புலிகள் போக்குவரத்துச் செய்யும் தரை வழி, கடல் வழிப் பயணத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் கிழக்கில் படையினர் நகர்வொன்றை ஆரம்பித்து சில பகுதிகளைக் கைப்பற்றி நிலை கொண்டுள்ளனர்.

### முதற்கட்டம்

மட்டக்களப்பிலிருந்து-திருக்கோணமலை நோக்கிய கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றும் படை நகர்வொன்றை இராணுவத்தினர் கடந்த ஒருமாத காலத்திற்கு முன்னரே திட்டமிட்டிருந்தனர்.

மட்டக்களப்பு இராணுவத் தலைமையகத்திற்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை விஜயத்தை மேற்கொண்டார். கிழக்கில் கை ஓங்கியுள்ள புலிகளின் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

அப்போதே இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் மட்டக்களப்பு-திருக்கோணமலை கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதன் முதற் கட்டமாக 01.09.99 அன்று வாகரையிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்த படையினர் கண்டலடி, பால்சேனை, கதிரவெளி ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றி அங்கு நிலைகொண்டுள்ளனர்.

தற்சமயம் வம்மிவெட்டுவானிலும், கதிரவெளி பழைய தபால் கந்தோர் நிலையக் கட்டடத்திலும் நிலை கொண்டுள்ளனர். 1995 ஆண்டுக்கு முன்னர் படையினர் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டபோது இருந்த அதே இடங்களிலேயே தற்போதும் முகாம் அமைத்துள்ளனர்.

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலை வழியே இருந்த 14வது இலங்கைத் தேசிய காலாட்படை இராணுவ முகாம்கள் ஆறு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே 12வது பீரங்கிப் படைப்பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த முகாம்களிலிருந்து 14வது (14 SLNG) தேசிய காலாட் படையினர் படை நகர்வொன்றுக்காக வாகரையில் குவிக்கப்பட்டிருந்தனர்.

அச்சமயம் வாகரைப் பகுதி முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த 2வது இலகு காலாட் படையின் ஆணையிடும் அதிகாரியான மேஜர் கருணாநாயக தற்கொலைக் குண்டுதாரியான கரும் புலியின் இலக்கில் மாட்டினார். 09.08.99 அன்று பகல் அந்தத் தாக்குதல் நடந்தது.

இந்த இராணுவ நடவடிக்கை பற்றி 03.09.99 அன்று அரச வானொலி அதன் முதலாவது தலைப்புச் செய்தியில் "கதிரவெளியைப் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து இராணுவம் விடுவித்துள்ளது. மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. பயங்ரவாதிகளின் ஆறுமுகாம்கள் அழிக்கப்பட்டன." என்று தெரிவித்தது.

### முகாம்கள் இல்லை

வாகரையில் இருந்து துவங்கிப் படையினர் கதிரவெளியைச் சென்றடையுமட்டும் புலிகள் எதுவித எதிர்ப்பையும் காட்டவில்லை என்பதும், புலிகளின் எந்தவொரு முகாம்களும் அப்பகுதியிலிருந்து அழிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் திருமலையில் இருந்து தொடங்கும் தென் கிழக்குப் பகுதியில் சுங்கான்குழி, வெருகல், கதிரவெளி, கண்டலடி, பால்சேனை வரையான 16 1/2 கி.மீ. தூரம் இதுவரை படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியாக இருந்து வந்தது.

கிழக்கில் புலிகளின் சுதந்திர நடவடிக்கைப் பகுதியாகப் பரந்து கிடக்கும் மட்டக்களப்பு-பதுளை வீதிப் பிரதேசம் மீதும் படையினரின் அடுத்தகட்ட நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது

---

## இலண்டனில் துப்பாக்கிச் சூடு
## இலங்கை அரசுக்கு பலத்த ஏமாற்றம்!

**இ**லண்டன் மாநகரில் கிரிக்கெட் போட்டி ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டை பெரிதுபடுத்த இலங்கை வெளிவிவகார அமைச்சு பலத்த முயற்சி செய்திருந்தது.

பிரிட்டனில் புலிகளை தடை செய்யுமாறு கோருவதற்கு இது தக்க தருணம் என்று வெளிவிவகார அமைச்சு தீவிரம் காட்டியது.

புலிகளே சம்பந்தப்பட்டதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், பெயர் விபரங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியிருந்தது.

வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும் இச் சிறிய விவகாரத்தில் நேரடியாக கருத்துக் கூறி பிரிட்டிஷ் அரசுக்கும் அறிவுறுத்தல்கள் விடுத்திருந்தார்.

ஆனால் பிரிட்டிஷ் அரசு இலங்கை வெளிநாட்டமைச்சரின் கருத்துக்கு பதில் அளிக்காது அலட்சியம் செய்துள்ளதுடன், நடைபெற்ற சம்பவம் சட்டம் ஒழுங்கு பிரச்சனையே தவிர, பயங்கரவாதப் பிரச்சனையல்ல என்று தெரிவித்துவிட்டது.

ஏற்கனவே கனடா போன்ற நாடுகளிலும் இலங்கைத் தமிழ்க் குழுக்களிடையே மோதல்கள், துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன. அவற்றில் இவ்வாறு அக்கறை காண்பிக்காத இலங்கை அரசாங்கம், பிரிட்டனில் நடந்த சம்பவம் குறித்து இத்தனை அக்கறைப்பட்டது குறித்து பிரிட்டிஷ் இராஜதந்திர வட்டாரங்களும் வியப்பு தெரிவித்துள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சு பிரிட்டன் தொடர்பாக அமெரிக்காவிடம் முறையிட்டதால் பிரிட்டனுக்கு ஏற்கனவே கசப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது அங்கு நடந்த துப்பாக்கிச் சூடு ஒன்றை புலிகளது பயங்கரவாதச் செயலாக அவசரப்பட்டு இலங்கை அரசு பெரிதுபடுத்தியதால் பிரிட்டிஷ் அரசு மேலும் கசப்படைந்துள்ளதாக தெரிகிறது.

---

## படையினருக்கு போதை பொருள்
## புலிகள் திட்டம் என்று சந்தேகம்

**யா**ழ்ப்பாணத்திலுள்ள படையினருக்கும் பொலிசாருக்கும் போதைப் பொருட்களை வழங்கி அவர்களைப் போதைப் பொருளுக்கு அடிமையாக்க புலிகள் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது.

பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் ஹெரோயின் என்ற போதைப் பொருளை வழங்குவதற்காகக் கொண்டு சென்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மையில் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏடு ஒரு தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த மாத ஆரம்பத்தில் சாவகச்சேரியிலுள்ள ஒரு சோதனைச் சாவடியில் 48 கிராம் ஹெரோயின் கடத்த முயன்ற 37 வயதுடைய ஒரு பெண்ணை படையினர் கைது செய்தனர். இவரிடம் போலி அடையாள அட்டையும் சைனைட் குப்பியும் இருந்துள்ளதாம்.

அதற்கடுத்த நாளன்று அதே தடை முகாமில் 38 வயதுடைய ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவரிடம் 80 கிராம் ஹெரோயினும் சையனைட் வில்லையும் காணப்பட்டதாம்.

இவர்களைத் தனித்தனியே படையினர் விசாரித்துள்ளனர். படையினருக்கும் பொலிசாருக்கும் கொடுக்கவே இவற்றைத் தாம் எடுத்துச் சென்றதாக இருவரும் தெரிவித்துள்ளனர். இதனையிட்டு பூரண விசாரணைகள் தொடர்கின்றனவாம்.

---

## கொழும்பு முரசு முகவர்
## கனி காலமானார்

**கொ**ழும்பு நகரின் தினமுரசு முகவரான ஜனாப் கச்சி மொஹிடீன் அப்துல் கனி அவர்கள் கடந்த 5ம் திகதி ஞாயிற்று கிழமை காலமானார்கள் என்ற துயரச்செய்தி அறிந்து துயருற்றோம்.

இவர் தமிழ்நாடு ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரில் 1933ம் ஆண்டு பிறந்தவர். இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் விற்பனை-விநியோகத்தராக பல்லாண்டு காலம் இருந்திருக்கிறார். அன்னாரின் ஜனாசா 06.09.1999 திங்கட்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் குடும்பத்தாருக்கு முரசு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# செஞ்சிலுவைச் சங்க பணி

## திருமலை கிளை அறிக்கை

(திருமலை நிருபர்)

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருக்கோணமலைக் கிளை ஆகஸ்ட் 24ந் திகதி செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, 1999ல் முதல் அரையாண்டுக்கான தனது நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

திருக்கோணமலைப் பணிமனையின் பொறுப்பாளர் திரு.லூயிஸ் கிராஸ் வெல்ட் சுகாதார நடவடிக்கைகளுக்கான பிரதிநிதி திரு.கிறிஸ்டோபர் கிளிவ், தகவற் துறையாளர் திரு.ஹர்ஷா குணவர்தன திருக்கோணமலை இணைப்பாளர், திரு.புஷ்பராஜா ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இவ்வறிக்கையின் பிரகாரம் திருகோணமலைத் தலைமைப் பொலிஸ் நிலையம் துறைமுகப்பொலிஸ் நிலையம், உப்புவெளி, கந்தளாய் பொலிஸ் நிலையங்கள், தடுப்புக் காவற்கூடம் என்பவற்றில் ஜனவரி தொடக்கம் ஜூன்மாதம் வரை 76 கைதிகள் பார்வையிடப்பட்டுள்ளனர். 16 பேர் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு குடும்பத்தாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 செய்திகளைக் கைதிகளுக்கும் 34 செய்திகளை குடும்பத்தாருக்கும் விநியோகித்து தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட மூன்று பேர் குடும்பத்தவர்களிடம் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரச் சேவையைப் பொறுத்த மட்டில், அரச கட்டுப்பாடற்ற பாட்டாளிபுரம், நல்லூர், இலங்கைத்துறை, முகத்துவாரம் வாழைத்தோட்டம், கூனித்தீவு, ஆடைக்குடா, ஈச்சிலம்பற்றை, ஆனைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 12,500 நோயாளிகளுக்கு நடமாடும் சேவைமூலம் சிகிச்சையளிக்கப்பட்டதோடு 41 நோயாளர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கான கப்பல் தொடர்பின் மூலம் 927 நோயாளர்களும் 591 துணையாளர்களும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுள்ளார்கள். 653 மெட்ரிக்தொன் சரக்குகளும், 4504 தபாற் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டு கலைச் செல்வங்கள்

## ஈழத்து எழுத்தாளரின் கைவண்ணத்தில்



ஒப்பற்ற கலைச் செல்வங்களின் உறைவிடம் தமிழ்நாடு. பண்டு தொட்டு இன்றுவரை அங்கு கலைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஓவியம், சிற்பம், இசை, நடனம் போன்ற கவின் கலைகள் அன்றுபோல் இன்றும் சிறப்புற்றுச் செழுமையாக வளர்ந்து வருகின்றன.

முடியுடை மூவேந்தர் காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகில் மேற்கூறிய கலை அம்சங்கள் புதுப்பொலிவுடன் வளரத் தொடங்கின. இக்காலங்களில்தான், காலத்தால் சிதைவுறாத கலைக்கோயில்கள் எங்கும் எழுந்தன.

தலைசிறந்த சிற்பாசாரியர்களின் கைவண்ணத்தில் காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் எண்ணற்ற கற்கோவில்கள் உருவாக்கப்பட்டன. இன்றும் அவை உலகத்தாரனைவரது கவனத்தையும் ஈர்த்து வியப்பூட்டுகின்றன.

தேவமணி ரஃபேல் என்ற பெயருடைய ஒருவர் ஓர் எழுத்தாளர் மட்டும்தான் என்பது நம்நாட்டு வாசகர்களுக்குத் தெரிந்த செய்திதான். சிறுகதைகள், நாடகங்கள் ஆகியவற்றை மட்டுமே எழுதிவந்த திரு. ரஃபேல், புராதன கலைச்செல்வங்கள் நிறைந்த-இருண்ட குகைக்குள் புகுந்து ஆய்ந்து, அவற்றின் சிறப்பினை இத்துணை சிறப்பாக- நூலுருவில் தருவார் என்று எவரும் எதிர்பார்த்ததில்லை.

'தமிழ் நாட்டுக் கலைக்கோயில்கள்' என்ற தனிச்சிறப்பான-விலைமதிப்பற்ற ஒரு நூலை எமது கைகளில் தேவமணி ரஃபேல் தவழவிட்டிருக்கிறார். சிற்பங்களை நேரில் காண்பது போலவே துல்லியமான நிழற்படங்கள் நூலின் முக்கிய சிறப்பம்சம்.

இந்நூலைப் புரட்டும்போது, இதனை நவீன அச்சுக்கலை வளர்ந்துள்ள மேலைத்தேயமொன்றிலேயே அச்சுவாகனமேற்றிருப்பார்களோ என்ற எண்ணம்தான் மனதில் எழுகிறது.

ஆனால் இதனை இலங்கையில்-கொழும்பிலுள்ள 'ஃபாஸ்ட் பிரிண்ட் சேர்வீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்' நிறுவனம்தான் அச்சிட்டு வெளியிட்டுள்ளது என்று தெரிந்ததும் வியப்பு மேலோங்குகிறது.

தேவமணி ரஃபேல் அவர்கள் எடுத்துக் கொண்ட பொருளுக்கும் கச்சிதமான நிழற்படங்களுக்கும் ஏற்றாற்போல் உயர்தரமான முறையில் நூல் வெளியாகியிருக்கிறது.

உலகம் எங்குமுள்ள நூலகங்களில் இந்நூலும் இணைந்து பண்டைத் தமிழனின் கலைத்திறனை பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை.

விளம்பரப் பகுதி


**மலையாள மாந்திரிகம்**





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

# திலகவதியார் மகளிர் இல்லம்

**THILAKAVADIYAR GIRLS HOME**
**THIRUPPALUGAMAM, BATTICALOA, SRILANKA.**
**Regd. No: NEP/PCC/30**



**அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!**
**எமது வாழ்வு வளம்பெற நிதி உதவி கோரல்**

நாங்கள் எதுவும் அறியாத சின்னஞ் சிறுவர்கள். எங்கள் அம்மாவுடனும், அப்பாவுடனும் இன்பமாக இருக்க வேண்டிய காலத்தில், வன்செயல் காரணமாக-பிறருக்கு எந்த தீமையும் செய்யாத அப்பாவிகளான எங்கள் அன்புக்குரிய தாயையும், தந்தையையும் சிறுவயதிலே இழந்து சொல்லமுடியாத, மிகவும் துயரமான நிலையில் வாழ்ந்தோம். இன்நிலையில் திருப்பழுகாமம், விவேகானந்த நலன்புரிச் சங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்ட திலகவதியார் மகளிர் இல்ல நிருவாகிகள் எம்மைப் பொறுப்பேற்று, பாடசாலைக்கு அனுப்பி, எமக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் வழங்கி தங்களது உடன் பிறப்புக்களாக எம்மை நேசித்து அன்புடன் வழிநடத்துகின்றனர்.

உலகெங்கிலும் வாழ்கின்ற எம் தமிழ் உறவுகள் பலர் தங்கள் இறந்த ஆத்மாக்களின் நினைவாகவும், பிறந்த தின நினைவாகவும், வேறு சில நினைவாகவும் எமது வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி, உணவு வழங்குகின்றனர். பலர் எமது தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் நிதி உதவி செய்கின்றார்கள். அவர்களது உதவிகளாலும், ஒத்துழைப்புக்களாலுமே எமது சீரற்ற வாழ்வு வளம்பெறுகின்றது.

எமது இல்லத்தில் நாட்டின் பல இடங்களையும் சேர்ந்த 42 சிறுமியர்கள் தற்போது தங்கியுள்ளோம். எமது இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற மிகவும் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளன.

எனவே எமது வாழ்வு வளம்பெறுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வசிக்கின்ற எம் தமிழ் உறவுகளாகிய உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தங்களால் இயன்ற நிதி உதவியினை சிறுவர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாள் உணவுச் செலவிற்காக ரூபா 3,000 தேவைப்படுகின்றது.

நன்றி

'தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் உயிர்காக்கும்'

**A/C No: 20135,**
**People's Bank,**
**Kaluwanchikudy (E.P)**

இவ்வண்ணம்,
நிருவாகிகள் சார்பாக,
இல்லச் சிறுமிகள்.

# SPOKEN ENGLISH

## By K.M.N. NALRAVI

**யாருக்காக?**

- தொழில் புரிபவர்களுக்காக.
- 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
- இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி. ● அடிப்படையிலிருந்து இலக்கணம்
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். ● Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி ●வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்
- 3 அல்லது 6 மாத கால்ப் பாடத்திட்டம்
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பு:
- பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்
- அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
- புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

**NALRAVI**
**ENGLISH LANGUAGE CENTRE**
527, First Floor, Galle Road, Wellawatta,
Colombo-06.(Hotel Ceylon Innsக்கு அருகில்)

TNT GRAFIX

# மாஸ்ரர் மரீஜ் சேவிஸ்

துரிதமாக திருமணங்கள் செய்து கொள்வதற்கு உடன் 'மரீஜ் சேவிசை' நாடுங்கள்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சகல தரத்திலுமுள்ள மணமகன், மணமகள் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.

ஜாதகங்களுடனும், புகைப்படப் பிரதியுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

90 A, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13, மே/பா
'யசோ பன்சி ஹவுஸ்'
240, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
தொலைபேசி: 075-336917,8
ஃபக்ஸ்: 075-350106.

கொழும்பு மாநகரில் பாதுகாப்பானதும், கண்ணியமானதுமான தங்குமிட வசதிகளுக்கு

**THAMPI'S BOARDING HOUSE**
177, 2/1, 3/1, OLD MOOR STREET,COLOMBO-12.
TEL:341272-3-4,343125 (AUTO LINES)

வடமாகாணத்திலுள்ள உங்கள் உறவினர்களுக்கு இலவசமாக தகவல்களை அனுப்பி தொடர்பு கொள்வதற்கும் மிக மலிவு விலைகளில் தொலைப்பேசித் தொடர்புகளை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்வதற்கும்

**THAMPI COMMUNICATIONS**
90, KANTHAPPASEGARAM ROAD, JAFFNA.(NEAR SAMPANTHAN CLINIC)
TEL : 021-2504, 2040, 2823 FAX : 0094-21-2040
177,1/3, Old Moor Street, Colombo -12.
Tel : 343125 (Auto Lines) Fax :337465, E-mail: thampi@sltnet.lk

சகல நாடுகளுக்குமான விமான டிக்கட்டுக்களை -மலிவு விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு

**THAMPI AIR TOURS (PTE) LTD.**

தொலைத்தொடர்பு நிறுவன உரிமையாளர்களுக்கு- சகல தொடர்புகளையும் பதிவு செய்து இலக்கம், கட்டணம், திகதி, நேரம் முதலியவற்றுடன் கடந்த 250 நாட்களுக்குரிய தகவல்களுடனான, பலதரப்பட்ட PCO MONITORS எம்மிடம் மலிவு விலைகளில் உண்டு.

100 ACCOUNTS CAN BE MAINTAINED, WARRANTY & AFTER - SALE SERVICE, APPROVED BY FORIEGN & SRI LANKA TELECOM AUTHORITIES.

**THAMPI HOLDINGS (PTE) LTD**
**"THAMPI BUILDING"**
177, OLD MOOR STREET, COLOMBO-12.
Tel: 343125 (AUTO LINES) FAX: 337465 E-mail: thampi@sltnet.lk

# மாபெரும் இசை நிகழ்ச்சி

உங்கள் தினமுரசின் அனுசரணையுடன்
அறிவிப்பாளர் சீதாராமன்–இக்பால், ஜெகனுடன் வழங்கும்

## சித்தாரின் இசைமாலை

பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்

நீர்கொழும்பு இந்து இளைஞர் மண்டபத்தில் 26.09.1999
ஞாயிறு மாலை 3.30க்கும் / 6.30 க்கும்

இரண்டுகாட்சிகள் | டிக்கட் : 100/- 150/- 200/-

இணை அனுசரணை:- பிரீமியர் டின்மீன்களை வழங்கும் ஞானம் இம்போட்ஸ், ஸ்டார் லைட் சலவைத்தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஸ்டார் இண்டஸ்ரீஸ், மீவோன் சுவையூட்டிகளை விநியோகிக்கும் பீகொம்பூட்ஸ் நிறுவனம், நீர்கொழும்பு கிரீன் வீதி புஷ்பா ஜுவலர்ஸ்.

என்றும் முதல் தரம். 'சன்வே' கிரஃபிக்ஸ்

**Sunway GRAPHICS**

Photographer, Videographer, Wedding Album Makers, Laminating and Duragard

Contact: **K.S. JAYAKODI (MANI)**
25/1A, Sagara Road, Bambalapitiya. Colombo-04.
Tel: 597879 Hot Line: 0722-72119.

# சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
**48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.**
**T.P.: 723646.** நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

# மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் செப்டெம்பர் 20 முதல் 28 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனை ஒக்டோபர் 02,03ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் செப்டெம்பர் 11, 12ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

# SCHOLARSHIP

250 விசேட சலுகை அனுமதிகள் மட்டுமே.


- DIPLOMA IN COMPUTER STUDIES
- CERTIFICATE IN MICROSOFT OFFICE
- CERTIFICATE IN DESKTOP PUBLISHING
- CERTIFICATE IN COMPUTERISED ACCOUNTING
- CERTIFICATE IN VISUAL BASIC / VISUAL C++
- CERTIFICATE IN WINDOWS NETWORKING
- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- CERTIFICATE IN INTERNET APPLICATIONS
- ACCPAC / C Language / PASCAL / FOXPRO

புதிய பிரிவுகள் ஆரம்பம் Sept 11 , 13 , 16 , 1999.

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் எக் கற்கைநெறியானாலும்
**ரூபா 3,500/= மட்டுமே.**

**INSTITUTE OF INFORMATION SYSTEMS (PVT.) LTD.**
( AFFILIATED TO IMIS-U.K )
(AUTHORISED DEALERS FOR COMPUTERS NSK. SINGAPORE)
379, 1st Floor, Galle Road, Colombo-06.
Tel : 074-517390, 077-319426

# மாணிக்கதாசன் மரணமும் மர்மமான நிகழ்வுகளும்



புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் பலியானதை அடுத்து பல்வேறு சந்தேகங்கள், ஊகங்கள் கிளப்பியுள்ளன.

அவற்றை முதலில் ஆராய்ந்துவிட்டு நமக்கு கிடைத்த தகவல்களுக்கு செல்லலாம்.

மிகப் பாதுகாப்பான 'லக்கி முகாமில்' கிளைமோர் குண்டு எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது? என்பது வியப்புடன் கூறிய கேள்வியாக பரவலாக உலாவியது.

எட்டத்தில் இருந்து நோக்கும்போது ஏற்படும் பிரமையே இது. உண்மை நேர்மாறானது.

'லக்கி முகாம்' என்பது முன்னர் புளொட்டின் முக்கிய முகாம்களில் ஒன்றாக இருந்தது உண்மைதான். புலிகள் என்று கைதான இளைஞர்களும் இங்கு வைத்து வதைக்கப்பட்டதுண்டு.

ஆயினும் வவுனியாவில் புளொட்டின் பிரபல வதைமுகாமாக மலர் மாளிகை முகாமும் இயங்கி வருகிறது.

1999 மார்ச் மாதம் ஏழு தமிழ் இளைஞர்கள் லக்கி முகாமில் இருந்தே புளொட்டினால் விடுதலை செய்யப்பட்டனர். அதன் மூலம் தமது 'லக்கி முகாம்' தடுப்பு முகாம் என்பதை புளொட்டே உறுதி செய்திருந்தது.

எனினும் சமீபகாலமாக லக்கி முகாம் தடுப்பு முகாமாக இல்லாது, புளொட்டின் அரசியல் வேலைகளுக்கான அலுவலகம் போல செயற்பட ஆரம்பித்தது.

இதனால் இங்கு இரவு நேர காவலும் போடப்படுவதில்லை. பகலில் கூட மாணிக்கதாசன் போன்ற முக்கியஸ்தர்கள் முகாமுக்கு வந்தால் மட்டுமே உறுப்பினர்கள் உஷார்படுத்தப்பட்டு காவல் பணி (சென்றி) செய்வார்கள்.

அதிலும் மாணிக்கதாசன் சமீபத்தில் வெளிநாடு போயிருந்தபோது 'லக்கி முகாம்' மட்டுமல்ல, வவுனியாவில் புளொட்டின் ஏனைய முகாம்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்ந்து போயிருந்தன. லக்கி முகாமில் காவலே இருந்ததில்லை. யாரும் இல்லாத வெறுமையாக இருந்ததும் உண்டு.

மாணிக்கதாசன் திரும்பிவந்த பின்னர் மறுபடி லக்கி முகாமை புனரமைத்து, தனது பாவனைகளுக்கு மாற்ற விரும்பினார்.

முன்பு மாணிக்கதாசன் வவுனியாவில் தங்குவது குறைவு. திடீர் திடீர் என்று இடம்மாறுவார். ஆனால் வவுனியாவில் மாணிக்கதாசனது முக்கிய சகாக்கள் பலர் புலிகளால் ஒவ்வொருத்தராக கொல்லப்பட்டுவிட்டனர்.

இதனால் தானே நேரில் நின்றுதான் சில வேலைகளை பார்க்க வேண்டும். உறுப்பினர்களை உஷார்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் தாசனுக்கு ஏற்பட்டது.

படையினருடன் உறவை சீரமைத்து வவுனியாவை தனது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும் தாசனின் அவசர திட்டமாகும்.

இந்தக் காரணங்களால் வெளியாரைச் சந்திக்கும் மையமாக 'லக்கி முகாமை' புனரமைத்தார் தாசன். அங்கு மாணிக்கதாசன் தங்குவ தில்லை. இதனால் மாணிக்கதாசன் முகாமுக்கு வந்துபோன பின்னர் போதிய கண்காணிப்போ, பாதுகாப்பு உஷாரோ இருப்பதே கிடையாது.

இதுதான் 'லக்கி முகாமின்' சமீபகால நிலவரம். கடும் பாதுகாப்பு என்பதெல்லாம் கற்பனை.

அடுத்த ஊகம் யாதெனில், மாணிக்கதாசனை புலிகள் அழித்தனரா? அல்லது உள்வீட்டு வேலையா?

புளொட்டிற்குள் உள்ள மாணிக்கதாசனின் விசுவாசிகளுக்கே உள்வீட்டு வேலை என்றுதான் சந்தேகம். அதனால்தான் மாணிக்கதாசனின் இறுதிச் சடங்கில் சித்தார்த்தன் அணியினரை அவமானப்படுத்தி அனுப்பியதோடு, சித்தார்தன் இறுதி அஞ்சலி உரையாற்றக்கூட அனுமதிக்கப்படவில்லை.

மாணிக்கதாசனை அழிக்க வேண்டும் என்று புளொட்டிற்குள் ஒரு பிரிவினர் பல காலமாக பலத்த முயற்சி செய்து வந்தனர்.

இவர்களுக்கு சித்தார்த்தனின் ஆசிர்வாதம் இருந்ததாகக் கூறமுடியாது. ஆனால் சித்தார்த்தன் மீது அந்த பிரிவினருக்கு ஒரு மரியாதை இருந்தது.

புளொட்டுக்குள் இருந்த சிறந்த போராளிகளை மாணிக்கதாசன் அழித்துதான் அந்த பிரிவினருக்கு ஏற்பட்ட கோபத்துக்கு காரணம். திருமலையைச் சேர்ந்த புளொட் முக்கிய பிரமுகரான அர்ச்சுனாவும் தாசனால் கொல்லப்பட்டதால் பிரச்சனை பெரிதானது.

தாசன் உயிரோடு இருந்தால் புளொட்டில் முற்போக்கான சக்திகள் எதுவும் உயிர் தப்ப முடியாது என்று தீர்மானித்து, தாசனை தீர்த்துக் கட்ட சில தயாரிப்புக்களைச் செய்தனர்.

இவர்கள் சக தமிழ்க் கட்சிகள் இரண்டிடம் அதற்கான உதவியும் கோரினார்கள். ஒரு கட்சி ஆயுதம் கொடுத்தது. இன்னொரு கட்சி வெடிமருந்துகள் கொடுத்து உதவியது. அவற்றை வவுனியாவுக்கு பத்திரமாக கொண்டு போய்ச் சேர்த்தனர்.

அதே நேரம் மாணிக்கதாசனும் சித்தார்த்தனின் மெய்க்காப்பாளராக இருந்த ஒருவரை வவுனியாவில் வைத்து மறைந்திருந்து தாக்கிக் கொல்ல ஏற்பாடு செய்தார். அதன்படி துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. அந்த மெய்க்காப்பாளர் வாகனத்தில் சென்றதால் குறிதவறியது. உயிர் தப்பினார். பின்னர் புளொட்டை விட்டே ஒதுங்கினார்.

வவுனியாவில் தனக்கு எதிரான புளொட்டினர் எவரையும் பொறுப்புக்களில் வைத்திருக்காது தாசன் களையெடுத்ததோடு, கொழும்பில் பம்பலப்பிட்டி ஹேக் வீதி அலுவலகத்தையும் கைப்பற்றினார். அங்கு சித்தார்தன் பிரிவினர் கடந்த இரு வருடங்களாக செல்ல முடியாதிருந்தது.

அந்த அலுவலகத்தில் இருந்த சித்தார்த்தனின் விசுவாசி ஒருவரை தாசன் அனுப்பிய ஆட்கள் மரண அடி அடித்து துவைத்துப் போட்டனர். பலமாதங்களாக அந்த உறுப்பினர் கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியிருந்தது.

மட்டக்களப்பில் மாணிக்கதாசனுடன் முரண்பட்ட புளொட் முக்கியஸ்தர்களை தீர்த்துக்கட்டவும் ஆட்கள் அனுப்பப்பட்டனர். அதனால் அவர்கள் ஈ.பி.டி.பி.யிடம் புகலிடம் தேடினார்கள்.

ஆக, புளொட்டுக்குள் தாசனுக்கு பரம வைரிகள் இருப்பதும் உண்மை. தாசனை தீர்த்துக்கட்ட ஏற்பாடுகள் செய்ததும் உண்மை. உள் இயக்க மோதல்கள் நடந்துவந்ததும் உண்மை.

ஆனால் லக்கி முகாமுக்குள் சென்று குண்டுவைக்குமளவுக்கு தாசனின் உள் இயக்க எதிரிகள் அங்கு செல்ல சந்தர்ப்பமே இல்லை.

புளொட்டின் நீண்டகால உறுப்பினர்களுடன் தான் தாசனுக்கு பிரச்சனை. எனவே தன்னைப் பிடிக்காதவர்கள் யார் என்பது தாசனுக்கு தெரியும். தாசனது விசுவாசிகளுக்கும் தெரியும்.

எனவே தாசனை தீர்த்துக்கட்டுவது என்றால்கூட உள்ளிருந்தே கொல்வதற்கு அவர்களால் முடியாது. ஏனெனில் அவர்களை தாசன் கிட்டத்தில் எடுக்கமாட்டார்.

தாசனின் வெளிநடமாட்டங்களை கவனித்துத் தீர்த்துக்கட்டவே உள் விரோதிகள் நினைத்தனர். தனது நடமாட்டங்களை தாசன் மர்மமாக வைத்திருந்தமையால்தான் அவர்களது திட்டம் நிறைவேறாது போய்கொண்டிருந்தது.

எனவே உள்வீட்டு வேலை என்ற சந்தேகம் வலுவிழக்கிறது.

வெளியே இருந்து வந்து இரவு நேரத்தில் கிளைமோரை பொருத்தியிருக்க முடியுமா?

அதற்கும் சாத்தியமில்லை. பாதுகாப்பு இல்லாத முகாமாக இருந்தாலும், வெளியே இருந்து ஒருவர் உள்ளே அனுமதி இன்றிப் புகமுடியாது.

கிளைமோருடன் சென்று, கூரையில் ஏறி பொருத்துவது மட்டும் வேலை அல்ல. படிக்கட்டு வழியாக மாணிக்கதாசன் இறங்குவதை கண்ணுக்கு எட்டும் தூரத்தில் நின்று அவதானித்து ரிமோட்கொன்ட்ரோலை அழுத்தவும் வேண்டும். எனவே இரவோடு இரவாக வைத்துவிட்டுப் போகும் வேலை மட்டுமல்ல.

ரிமோட் கொன்ட்ரோலை அதிக தூரத்திற்கு அப்பால் நின்று அழுத்தினாலும் வெடிக்காது. குறுக்கே தடைகளும் இருக்கக்கூடாது. எனவே மிகவும் கிட்டத்தில் நின்று, அதாவது லக்கி முகாம் பகுதிக்குள் நின்றுதான் ரிமோட் கொன்ட்ரோல் இயக்கப்பட்டுள்ளது.

இயக்கிய நபர் மாணிக்கதாசனுக்கும் முகாமில் உள்ளோருக்கும் பரிச்சயமானவர் என்பதால் தான் கிட்டத்தில் நின்று செயற்பட முடிந்திருக்கிறது. அவர் ரிமோட்கொன்ட்ரோலை காற்சட்டை பொக்கற்றுக்குள் வைத்திருந்தும் நைசாக அமுக்கியிருக்கலாம்.

எனவே உள்வீட்டு வேலை அல்ல, ஆனால் ஊடுருவல்காரர் ஒருவரது வேலை என்பது தெளிவு.

உள்வீட்டு வேலை என்பது, குறிப்பிட்ட இயக்கத்தின் உட்பிரச்சனை காரணமான சதியைக் குறிக்கும்.

குறிப்பிட்ட இயக்கத்தின் எதிரி ஒருவர் உள்ளிருந்து செயற்படுவதை ஊடுருவல் என்றுதான் குறிப்பிடலாம்.

இன்னொரு இயக்கத்துக்குள் ஊடுருவும் ஒருவருக்கு துணிச்சல் அதிகம் வேண்டும். அதுவும் இலக்கு ஒன்றை உள்ளிருந்தே அழிக்க செல்லும்போது மாட்டிக்கொண்டால் விளைவைச் சந்திக்கும் தைரியம் வேண்டும். உயிரை துச்சமாக மதிக்கும் ஒருவரே இக் காரியத்தில் ஈடுபடமுடியும்.

வவுனியாவில் புளொட், ரெலோ மோதலும் இருக்கிறது. ஆனால் ரெலோ திட்டம் போட்டும், துல்லியமாகவும் செயற்பட முடியாததால்தான் புளொட்டுடனான மோதலில் பின்னடைந்தது. மற்றப்படி ஆள்பலம், ஆயுதபலத்தில் வவுனியாவில் புளொட்டுக்கு சமமாகவே ரெலோ இருந்தது.

எனவே ரெலோவில் இருந்து ஒருவர் புளொட்டில் ஊடுருவி, கச்சிதமாக அழித்தொழிப்பு நடத்தியிருப்பார் என்பதும் நிராகரிக்கப்பட வேண்டிய ஊகம்தான்.

படையினருக்கும் புளொட்டுக்கும் கசப்பு இருந்ததா?

வவுனியாவில் எண்ணெய் விநியோகத்தை படையினர் கட்டுப்படுத்தியதை எதிர்த்து புளொட் ஹர்த்தால் செய்தபோது முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டது. பின்னர் சிங்கத்தை புலி குதறும் படம் போட்ட நாட்காட்டி வெளியிட்டபோதும் இராணுவத்தினரால் புளொட் உறுப்பினர்கள் வவுனியாவில் நையப்புடைக்கப்பட்டனர்.

ஆனால் இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். படையினரில் கீழ்மட்டத்தினர்தான் புளொட்டுடன் முரண்பட்டனரே தவிர, உயர்மட்டத்தினர் தாசனுடன் நட்பையே பேணியிருந்தனர். அந்தளவுக்கு தாசன்மேல் அவர்களுக்கு நம்பிக்கையும், தொடர்புகளும் இருந்தன.

மேலோட்டமாகப் பார்க்கும்போது ஏதோ புளொட்டுடன் படையினர் முழுவதும் கசப்போடு நடந்துகொண்டமாதிரியும், உறவு முறிவு போலவுமே தெரிந்தது. உண்மை அதுவல்ல. புளொட்டின் ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டதாக வெளியே கூறப்பட்டபோதும், புளொட் முகாமுக்குள் ஆயுதங்கள் இருந்தன. வெளியே கொண்டு திரியவே தடைபோட்டிருந்தனர்.

குறிப்பிட்ட ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டது கூட கொழும்பில் இருந்து சென்ற உத்தரவுப் படித்தான். வவுனியா நிலை பற்றி கொழும்பில் உள்ள தூதரகங்களும் குடையத் தொடங்கியதால், ஆயுதப் பறிப்பு செய்திகளை வெளியாக வைக்கவேண்டியிருந்தது. ஆகவே உத்தரவு பறந்தது.

கொழும்பில் வைத்து ரெலோ பிரமுகர் குகன் உட்பட மூவரை தீர்த்துக்கட்டியது புளொட் என்பதும், உத்தரவிட்டது தாசன் என்பதும் அரசாங்கத்திற்கும், படையினருக்கும், புலனாய்வாளருக்கும் நன்கு தெரியும். மடக்க நினைத்திருந்தால் 24 மணி நேரம் அதிகம். மாணிக்க தாசனை விசாரிக்கப்போவதாக கூறினார்களே தவிர, குடையவில்லை.

தாசனை ஏன் விசாரிக்கவில்லை என்ற கேள்வி எழாது இருப்பதற்காக, அந்த கொலைச் சம்பவத்தின் சூடு ஆறும்வரை வெளியே எங்காவது போய்விட்டு வருமாறு ஆலோசனை கூறியதே சீருடை வட்டாரம்தான். ஆனால் தாசன் அரசாங்கத்திற்கு பயந்து ஓடிவிட்டதாகவும், திரும்புவது சந்தேகம் என்றும் புரளிகள் கிளம்பியதுதான் வேடிக்கை.

சிங்கப்பூருக்கு சென்ற மாணிக்கதாசன் அங்கு முதலீடுகள் சிலவற்றை போட்டுவிட்டு, இந்தியா சென்று குடும்பத்தினரையும் பார்த்துவிட்டு நாடு திரும்பினார்.

இதற்கிடையே தாசன் தமிழ்நாட்டில் நிற்பதை அறிந்த முன்னாள் உறுப்பினர்கள் சிலர், தமக்குத் தெரிந்த பத்திரிகையாளர்கள் சிலர் மூலம் புரளிகளைக் கிளப்பினார்கள்.

தமிழக சஞ்சிகைகள் சிலவற்றிலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் மாணிக்கதாசனை பயங்கரமாக சித்தரித்து தகவல்கள் வெளியாகின. ஆனால் அச்செய்திகள் வெளியானபோது தாசன் நாடு திரும்பிவிட்டதால், அங்கு விசாரணைகளில் சிக்கவில்லை.

நாடு திரும்பிய தாசன் வவுனியா படையினருடன் புலிவேட்டை தொடர்பான உடன்பாடு ஒன்றுக்கு வந்திருந்தார். அதனையடுத்து பகிரங்கமாக மீளப்பெற்ற ஆயுதங்கள் இரகசியமாக திரும்பக் கொடுக்கப்பட்டன. மீளப்பெறப்பட்டவையோடு மேலதிகமாகவும் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டனவாம்.

வவுனியாவில் ரெலோமீது படையினருக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நகரில் புலிகளது ஊடுருவலும் அதிகமாகியுள்ளது. எனவே வவுனியாவில் தமது கட்டுப்பாட்டை நிலை நாட்ட மாணிக்க தாசனையே அங்குள்ள படைத்தரப்பு மலையாக நம்பியிருந்தது.

மறுபடி புளொட்டுக்கு ஆயுதங்கள் கிடைத்ததும் வவுனியாவில் ஆட்கடத்தல் செய்திகளும் வெளியாகின. ரெலோ முகாம் அதிரடிப்படையால் தாக்கப்பட்டபோது புளொட் உறுப்பினர்களே முகமூடிகளுடன் துணையாக சென்றுமுள்ளனர்.

எனவே படையினருக்கும், புளொட்டுக்கும் இடையே கீழ் மட்டத்தில் நிலவிய கசப்பும் அண்மையில் மறைந்துவிட்டது. மறுபடி நல்லுறவும், கூட்டுச் செயற்பாடுகளும் ஆரம்பமாகியிருந்தன.

எனவே நடந்ததுதான் என்ன?

நடந்திருப்பது விடுதலைப் புலிகளின் தாக்குதல்.

புளொட்டுக்குள் குறிப்பிடத்தக்களவு புலிகள் ஊடுருவியுள்ளனர். வவுனியாவில் புதிய உறுப்பினர்களை புளொட் திரட்டியது. அந்த ஆட்திரட்டல் புலிகளுக்கு ஊடுருவப் பயன்பட்டுள்ளது.

'லக்கி முகாமில் இருந்த புளொட் உறுப்பினர்களுக்குள்தான் தாக்குதல் நடத்திய புலியும் இருக்கிறார். ஆனால் கண்டுபிடிப்பது சுலபமல்ல. கண்டுபிடிப்பதானால் அனைவரையும் சந்தேகப்பட்டுத் தீர்த்துக்கட்டவேண்டியிருக்கும்.

புளொட் எம்.பி. வசந்தன்மீதான கிளைமோர் தாக்குதல், வீரமக்கள் தினத்தில் நடந்த சைக்கிள் குண்டுத்தாக்குதல் போன்ற பல சம்பவங்கள் புளொட் உறுப்பினர்கள் அதிகம் நடமாடுகின்ற, புளொட்டின் கோட்டை என்று கருதப்படும் பகுதிகளிலேயே நடந்துள்ளன.

அழுத்தி வெடிக்க வைத்தவர்கள் யார் கண்ணிலும் படவில்லை. சுலபமாகத் தப்பியுள்ளனர். எனவே புளொட் முகாமுக்குள் இருந்தபடிதான் காரியம் பார்க்கப்பட்டிருக்கலாம்.

அழுத்தி வெடிக்க வைத்தவர் முகாமுக்குள் சென்ற புளொட் உறுப்பினர்களோடு தானும் ஒருவராக நின்று தலையில் அடித்துக் கதறியிருக்கலாம்.

சம்பவம் நடந்தபோது காவல்பணியில் நின்ற தமது உறுப்பினர்களை புளொட் பிடித்து வைத்து விசாரிக்கிறது. வவுனியா நகரிலும் பல இளைஞர்களை பிடித்துப்போய் துவைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் புளொட்டிற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

இதே நேரம் லக்கி முகாமில் இருந்துவிட்டு சம்பவம் நடந்த பின்னர் கொழும்பு செல்ல முயன்ற புளொட் உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவரில் ஒருவரது பெயர் தவம். இவர் முன்பு புலிகளில் இருந்தவராம். தாசன் கொலை தொடர்பாக இருவர் கைது என்று இதைவைத்தே செய்திகள் வெளியாகின.

அந்த உறுப்பினர்களுக்கு உண்மையாகவே சம்பந்தம் இருந்தால், அவர்கள் ஏன் கொழும்புக்கு வந்து சிரமப்பட வேண்டும்? தப்பிச் செல்ல நினைத்தால் வன்னியில் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எந்தத் தடங்கலும் இல்லாமல் பொடி நடையாகவே போய்ச் சேர்ந்திருக்கலாம்.

இதேபோலவே லக்கி முகாமுக்கு முன்னாலுள்ள வீட்டில் இருந்தவரும் கைதாகியுள்ளார்.

அவர் வவுனியாவில் இருந்து கொழும்பு வந்திருந்தார். கொழும்பில் தங்கியிருந்த வீட்டில் வைத்து பிடித்துள்ளனர்.

தப்பிச் செல்பவராக இருந்தால் கொழும்பில் தான் தங்கப்போகும் முகவரியை வவுனியாவில் உள்ள உறவினர்களுக்கு ஏன் கூறிவிட்டு வரப் போகிறார்?

எனவே மாணிக்கதாசன் அழிப்புத் தொடர்பான கைதுகள், காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதைதான்.

ராசிக் மற்றும் சிலர்மீதான தாக்குதல்கள் குறித்து உரிமை கோரிய புலிகள், மாணிக்கதாசன் மீதான தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை. ஏன்?

புளொட்டுக்கும் படைத்தரப்புக்கும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு புலிகள் வேடிக்கை பார்க்கிறார்கள். இந்தக் குழப்பம் புலிகளுக்கு பல விதத்தில் இலாபம். இதன் பலன்கள் எதிர்காலத்தில் புலிகளுக்கு பெரும் சாதகமாகப் போகின்றன.

தங்களுக்குள் ஊடுருவல் இருப்பதாக புளொட் தலைவர் சித்தார்த்தனே கூறிவிட்டார். தங்கள்மீது சந்தேகம் வந்து தன் தலை உருளப் போகிறதே என்ற பதற்றத்தில் ஊடுருவலை ஒப்புக்கொண்டுவிட்டார் சித்தார்த்தன்.

எனவே இனிமேல் புளொட் உறுப்பினர்களை பொலிசார் கைதுசெய்தாலோ, தப்பித் தவறி சுட்டுக்கொன்றாலோ புளொட் அதனை கண்டிக்கமுடியாது.

தமக்குள் ஊடுருவல் இருப்பதாக சித்தார்த்தன் கூறிய சூட்டோடு சூடாக, பொலிஸ்மா அதிபர் அறிக்கை விடுத்திருக்கிறார். தமிழ்க் கட்சிகளுக்குள் எல்லாம் புலிகள் பெருமளவில் ஊடுருவிவிட்டனர். தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

எனவே இனிமேல் தமிழ்க்கட்சி உறுப்பினர்களும் கைதாவர். தாக்கப்படுவர். இதனால் அந்த உறுப்பினர்கள் தமது தலைமைகளை மட்டுமன்றி அரசாங்கம், படையினர் ஆகியோர்மீதும் கசப்புக் கொள்ளுவர். இதனால் தமிழ்க் கட்சிகளுக்குள் பலத்த உள்நெருக்கடி ஏற்படப்போகிறது.

மறுபுறம் புளொட் உறுப்பினர்கள் தமக்குள் முட்டி மோதுவதால் அந்த இயக்கத்தை பொறுத்தவரை புலிகளது வேலையும் சுலபமாகும்.

புலிகளின் மௌனத்தின் காரணம் அதுதான். ஆனால் தாம் செய்யாத ஒன்றை தம்மீது போட்டு புளொட் தப்பிக்க முயன்றிருந்தால் புலிகள் பார்த்துக்கொண்டு இருந்திருக்கமாட்டார்கள்.

மூன்றுமாத காலத்திற்குள் அரசசார்பு தமிழ்க் குழுக்களை அழித்தொழிப்போம் என்று வன்னியில் புலிகள் கூறியிருந்ததையும், அவர்களது தாக்குதல் பட்டியலில் மாணிக்கதாசன் பெயர் இருப்பதையும் 322 வது முரசில் வெளியிட்டிருந்தோம்.

தற்போதுள்ள தமிழ்க் கட்சிகளுக்குள் புலிகளுக்கு இராணுவ ரீதியாக சவாலாக இருந்தவர் மாணிக்கதாசனே.

உறுப்பினர்களை நன்கு கவனித்து விசுவாசமானவர்களாக மாற்றக்கூடிய தன்மையும் தாசனிடம் இருந்தது. அதனால்தான் அவர்களை வைத்து தாசனால் பல காரியங்களை செய்யக் கூடியதாக இருந்தது.

வவுனியாவில் புலிகளது நடவடிக்கைகளை புளொட்டால் தடுக்கமுடியாது போனாலும், இடையூறுகள் செய்ய இயலும். புலிகளது ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களைப் பிடித்து மண்டையில் போட்டு அச்சுறுத் தலை ஏற்படுத்தவும் முடியும். ஆகவே மாணிக்கதாசனை தீர்த்துக் கட்டுவது என்பது புலிகளால் நீண்டகால இலக்கு.

1987 மேமாதம் 20ம் திகதி வவுனியா முள்ளிக்குளத்தில் புளொட் முகாம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. 42 புளொட்டினர் பலியாகினர். சித்திரவதைகளுக்கு பெயர் பெற்ற சங்கிலி என்பவரும் பலியானார். அந்த முகாமிலிருந்த தாசன் எப்படியோ தப்பிவிட்டார்.

வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் புலிகள் என்ற பெயரில் புளொட்டினால் கொல்லப்பட்டவர்கள் பலர் அப்பாவிகளே.

ஆனால் யாழ்ப்பாணத்தில் புளொட்டினால் தலை வெட்டப்பட்டவர் புலிகளுடன் தொடர்பானவர்தான். இந்த தலை வெட்டல் விவகாரத்தின் பின்னரே தாசனை தீர்த்துக்கட்டும் திட்டம் முனைப்பாக்கப்பட்டதாம். 'இனிமேலும் விட்டு வைக்கக்கூடாது' என்று பிரபாகரனே கூறிவிட்டாராம்.

ஆனாலும் தாசன் புத்திசாலித்தனமாக நடமாடியதால் இலக்கு வைப்பது தள்ளிப்போனது. கொழும்பில் நிற்கும்போது தனியாக நடமாடுவதும், மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்றவற்றில் மாறி மாறிப் பயணம் செய்வதும் தாசனின் வழக்கம். வவுனியாவிலும் எந்த முகாமில் எப்போது தங்குவார்? எப்போது வருவார் என்பதெல்லாம் மூடுமந்திரமாக இருக்கும்.

ஆனால், தனது வலதுகரமான உறுப்பினர்கள் பலியானதால் தாசன் முன்னர்போல தனது பாதுகாப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. தாஸ், வசந்தன், கண்ணாடிக் குமார் போன்றோர் பலியானதுடன், வீரமக்கள் தினத்தன்று டுமால் கொல்லப்பட்டது தாசனுக்கு பேரிழப்பு.

தாசன் என்ன சொன்னாலும் கண்ணை மூடிக் கொண்டு செய்பவர் டுமால். அப்படியான கிளைகள் ஒடிந்ததால், தனிமரமாக நின்று புதிய கிளைகளை வளர்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்தக் கட்டாயம் புலிகளுக்கு இலக்கை சுலபமாக்கியது.

சம்பவதினம் காலை முதல் லக்கி முகாமுக்குள் தான் இருந்திருக்கிறார். வவுனியாவில் புலி வேட்டை தொடர்பாக பொலிஸ் அத்தியட்சகருடன் அன்று சந்திப்பு ஒன்று வெளியே நடக்க இருந்தது.

அதற்காக ஆயத்தமாவதற்கே மேல்மாடியில் இருந்து இறங்கியுள்ளார். மாடியைவிட்டு இறங்க முன்பாக மொட்டை மாடிக்குச் சென்று நின்று சூழலை நோட்டமிட்டுள்ளார். பின்னர்தான் இறங்கிவந்தார். அப்போது சாரம் அணிந்திருந்தார்.


மாடியில் உள்ள குளியலறைக்கு சமீபமாகவே சீலிங்குக்குள் கிளைமோர் இரைதேடி ஒளிந்திருந்தது. குளியலறைப் பகுதியை தாசன் தாண்டும்போது கவனித்துக் கொண்டிருந்த ஊடுருவல்காரர் ரிமோட் கொன்ட்ரோலை அழுத்த கிளைமோர் வெடித்தது.

தாசனின் கதை முடிந்தது.

வவுனியா மின்மாற்றிகளை பாதுகாக்க படையினரிடம் சில நாட்களுக்கு முன்னர் ஆயுதம் கேட்டிருந்தார் தாசன்.

அதே தாசனுக்கு தன்னைப் பாதுகாக்கவே முடியாமல் போனதுதான் துரதிஷ்டம்.

## அதிரடி அய்யாத்துரை



***உள்வேலையாக*** இருந்தால் குடைந்து சிக்கலாக்க வேண்டாம். விசாரணையில் தீவிரம் தேவையில்லை என்று மாணிக்கத்தார் விவகாரத்தில் சீருடைத் தரப்புக்கு மேலிட உத்தரவாம். ரெண்டு எழுத்தாராக இல்லாமல் உள்வேலையாக இருக்கலாம். சமாதானம் பேசுவதுபோல அவருடன் இணைந்த மறுதரப்பு வேலையைக் காட்டிவிட்டதோ என்றும் சீருடைத் தரப்பில் சிலருக்கு சந்தேகம் இருக்கிறதாம். அந்தச் சந்தேகம் மேலிடத்திற்கும் தெரியப் படுத்தப்பட்ட பின்னரே அந்த உத்தரவு வந்ததாகத் தகவல்.

***பலியாவதற்கு*** சில மணிநேரங்களுக்கு முன்னர்தான் வவுனியாவில் உள்ள ஜனநாயகக் கட்சி அலுவலகத்திற்கு கழக மாணிக்கம் தொடர்பு கொண்டு எச்சரித்தாராம்!

***கழகத்தின் போட்டி*** இயக்கம் வவுனியாவில் சொக்லேட், குளிர் பானம் என்று கொடுத்துக் கொண்டாட்டம் நடத்தினார்கள். தங்கள் தலைவருக்கு பிறந்தநாள் என்றும், தங்களுக்கு பிள்ளை பிறந்துள்ளது என்றும் ஒவ்வொரு விதமாகக் கூறிக் கூறி, குளிர்பானம் கொடுத்தனர். கழக ஆதரவாளர்கள் சிலருக்கும் மிரட்டிக் கொடுக்கப்பட்டதாம். இதனையறிந்த கழகத்தினர் குளிர்பானம், சொக்லேட் வழங்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களில் சிலரை வெளுத்துக் கட்டி யிருக்கிறார்கள். "சொக்லேட் சாப்பிட்டீர்களா, குளிர்பானம் குடித் தீர்களா?" என்று கேட்டுக் கேட்டு வெளுத்து வாங்கினராம்.

***காணி சுவீகரிப்புக்கு*** எதிராக தலைநகரில்கூட போராட்டம் நடந்திருக்குது. வடக்கில் உள்ள டமில் கட்சிகள் ஏன் மௌனம் சாதிக்கினம்? என்று ஆர்ப்பாட்டத்தை எட்டிப்பார்த்தபோது நண்பர் ஒருவர் கேட்டார். நான் பதில்கூற முன்னரே அருகில் நின்ற பொதுமகன் ஒருவர் பொட்டென்று என்ன கூறினார் தெரியுமோ? "அவை புலிகள் சுவீகரித்திருந்தால்தான் போராட்டம் நடத்தியிருப்பினம்!"

***தலைநகரில் உள்ள*** அயலகத் தூதரகத்தில் உள்ள அதிகாரிகளுக்குள் அதிகாரப்போட்டி கொடிகட்டிப் பறக்குதாம். அதனால் அவர்களுடன் அலுவலக ரீதியாகத் தொடர்பு கொள்வோரும் சிரமப்படுகிறார்கள். விசா விவகாரத்தின் குளறுபடிகளால் அதிகாரி ஒருவர் தூக்கியெறியப்பட்டும் உள்ளாராம்.

***கண்டியில் மறைந்த*** பச்சை அணிப் பிரமுகருக்கு அனுதாப அலையாக மக்கள் தலைகள். ஆனாலும் கடைசிக் காலத்திற்குள் தனது அணிக்குள் ஓரம் கட்டப்பட்டு மனம் நொந்து போய்த்தான் இருந்தாராம். முன்னாள் தலைவர்கள் அவரை மதித்தது போன்று, இந்நாள் தலைவர் மதித்தது இல்லையாம்.

***அம்பாறையை அபகரித்த*** கொண்டாட்டத்தில் கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவர் கலந்து கொண்டது அவர் சார்ந்த மக்களிடையேயும் முணுமுணுப்புக்களைக் கிளப்பியுள்ளதாம்.

***நிலத்துக்குப் பொறுப்பான*** அதிகாரத் தரப்புக்காரர், நாட்டின் இன்றைய போக்கு தொடர்ந்தால் சிங்கள மக்களையும், பௌத்தத்தையும் மியூசியத்தில்தான் தேடவேண்டியிருக்கும் என்று வீரவிதான ரேஞ்சில் முழங்கியிருக்கிறார். அறிந்தும் அறியாதமாதிரி இருக்கினம் சிலர். யாரென்று தெரியும்தானே?

**இந்தவாரம் குறும் கவிதை:**

**கதவு**

**"மனிதன் மீது**
**நிறைவேற்றப்பட்ட**
**முதல் நம்பிக்கையில்லாத் தீர்மானம்!"**

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## உளவாளிகளும் புலிகளும்

யாழ் குடாநாட்டில் புலிகளது முகாம்கள், "புலிகளது நடவடிக்கைகள் பற்றி தகவல்களைத் திரட்டுவதில் படையினர் மும்முரமானார்கள்.

இராணுவ உளவுத்துறையும், தேசிய புலனாய்வுத்துறையும் போட்டி போட்டுக்கொண்டு தகவல்களைத் திரட்டின.

இதனை அறிந்த புலிகளது புலனாய்வுத்துறையினரும் உஷாரானார்கள். கொழும்பில் எவ்வாறு தகவல் திரட்டப்படுகிறது. யாரெல்லாம் படைத்தரப்போடும், உளவுப் பிரிவுகளோடும் தொடர்புகளை வைத்துள்ளனர் என்பதை ஆராயத் தொடங்கினார்கள்.

புலிகளது உளவுப் பிரிவினர் சிலரே கூட படையினருக்கு தகவல் கொடுப்பவர்கள் போல நடந்துகொண்டு, ஏனைய தகவல் கொடுப்பாளர்களைப் பற்றி அறிந்து கொண்டனர்.

இதனையடுத்து வடபகுதியில் இருந்து வந்து கொழும்பிலும், வவுனியாவிலும் தகவல் கொடுத்துவிட்டு திரும்பிச் சென்றவர்கள் புலிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

தம்மால் பிடிக்கப்பட்ட சிலரை தொடர்ந்து படையினரோடும், புலனாய்வுத் துறையினரோடும் தொடர்பு வைத்திருக்குமாறும் செய்தனர்.

அவர்கள் இரட்டை ஏஜண்டுகளாகச் செயற்பட்டனர். படையினருக்கு உதவுவதாக காட்டிக்கொண்டு புலிகளுக்கு உதவுவதே அவர்களது வேலை.

இவர்களது குடும்பத்தினர் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தமையால், புலிகளிடம் மாட்டிக்கொண்ட பின்னர் புலிகளது கட்டளைப்படி இயங்கும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறான டபுள் ஏஜெண்டுகளை பயன்படுத்தி வெடிமருந்துகள் உட்பட ஆயுதங்களையும் கொழும்புவரை புலிகள் கடத்தியிருக்கின்றனர்.

அதேபோன்று தமக்கு தேவையான தகவல்களையும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து இவர்கள் ஊடாகப் பெற்றுக்கொண்டனர்.

### விளக்கம்

இக்கட்டத்தில் புலிகள் அமைப்பினர் உளவாளிகள் தொடர்பாகவும் பிரசாரங்களை மேற்கொண்டு, மக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தவும் முயன்றனர்.

உளவாளிகள் எப்படி உருவாகிறார்கள்? உருவாக்கப்படுகிறார்கள்? என்ற தலைப்போடு விபரமான விளக்கம் ஒன்றை 92ம் ஆண்டின் ஆரம்பத்தில் புலிகள் வெளியிட்டிருந்தனர்.

அந்த விளக்கத்தில் பல தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அதனை இப்போது பார்க்கலாம்.

"தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்த மிகப்பெரும் சவால்களுள் ஒன்று துரோகம். இது மிக ஆபத்தானது.

எதிரியின் மாபெரும் சேனைகளால் செய்ய முடியாததை ஒரு துரோகி சில வேளைகளில் செய்துவிடுவான்.

இங்கே நாங்கள் துரோகிகள் என்று அழைப்பது இந்த மண்ணின் குடிமக்களாகவே இருந்தபடி எதிரிக்கு செயற்பாட்டு ரீதியில் துணைபோகிறவர்களையும், அச்செயற்பாடுகளால் மக்களுக்கும், போராளிகளுக்கும் கெடுதல் விளைவிப்பவர்களையுமேயாகும்.

எமது மக்களின் விடுதலைக்காக அளப்பரிய தியாகங்கள் புரிந்து, தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து, ஒரு தேசியத் தலைமையின் கீழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், துரோகம் இழைப்பதை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.

தமிழ்க் கட்சிகள், தமிழ்க் குழுக்கள் மூலமும் அவர்களது செயற்பாடுகள் மூலமும் எதிரி பலன் பெற்றுவரும் அதே நேரத்தில், தனது சொந்தக் கட்டுப்பாட்டிலும் தமிழ் உளவாளிகளை வைத்திருக்கிறான்.

இந்த உளவாளிகளில் சிலர் சிறீலங்கா உளவு நிறுவனத்தின் முகவர்களாகவும், கூட்டுப் படை தலைமையக முகவர்களாகவும் செயற்படுகிறார்கள்.

இவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன், ஏற்கனவே பெற்ற தகவல்களையும் உறுதி செய்து கொள்ளுகின்றனர்.

இன்று ஏதோ ஒரு காரணத்திற்காக, அது வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் கதைப்பதற்கோ, அல்லது வெளிநாடு செல்வதற்கோ, வர்த்தக நோக்கத்திற்காகவோ தினமும் ஏராளமான தமிழீழ மக்கள் வவுனியாப் பாதை ஊடாக கொழும்பு செல்கிறார்கள்.

அங்கே விடுதிகளில் தங்கும் இவர்களுடன் சிறீலங்கா படைகளது நேரடி உளவாளி ஒருவர் ஏதோ ஒருவகையில் சிநேகம் கொள்வார்.

சில சமயம் அந்த உளவாளி புலிகளை ஆதரித்துக் கதைத்தபடியே தனது வேலையைத் தொடங்குவார்.

அவர் எப்படி தன் வேலையைச் செய்வார் என்பது, அவர் சந்திக்கும் ஆட்களது மனநிலையைப் பொறுத்திருக்கும்.

திடீரென்று ஒருநாள் அந்த விடுதி சிறீலங்கா காவல் துறையினரால் சுற்றிவளைக்கப்படும். தமிழர்கள் கைது செய்யப்படுவார்கள். அதற்குள் உளவாளிகள் கண்வைத்த நபரும் சிக்குவார்.

இரண்டொரு நாளில் குறிப்பிட்ட நபர் உளவாளியால் 'கஷ்டப்பட்டு' விடுவிக்கப்படுவார். அத்துடன் உதவி என்ற பெயரில் செலவுக்காக குறித்த தொகைப் பணமும் வழங்கப்படும். இத்துடன் குறித்த நபருடன் உளவாளி நெருங்கிவிடுவார்.

தகவல் சேகரிப்பு வேலை இரகசியமாகவும் சாதுரியமாகவும் தொடங்கும். மென்மேலும் பணம் தள்ளப்படும்.

குறித்தநபர் இடைக்கிடையே யாழ்ப்பாணம் வந்து கொழும்பு செல்வார். அவருடன் தகவல்களும் வரைபடங்களும் செல்லும்.

இதேபோன்று விடுதிகளில் உள்ள சிலரது பணம் திடீரென்று யாரோ ஒருவரால் களவாடப்படும். அல்லது வழிப்பறி செய்யப்படும். அவருக்கும் உதவி சென்றடையும். அவரும் சிலவேளைகளில் தகவல் கொடுப்பவராக மாறுவார்.

இவ்விதமான உளவாளிகளுக்கு உதாரணமாக கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த மனுவேல் மரியகென்ராட் என்ற நபரை எடுக்கலாம். இவருக்கு 41 வயது.


வெளிநாட்டிலிருக்கும் இவரது சகோதரி அனுப்பிய பணத்தை எடுக்க கொழும்பு சென்று ஒரு விடுதியில் தங்கியிருந்தார். அப்போது இவர் உளவாளியாக மாற்றப்பட்டார்.

இவர் இரண்டுமுறை கொழும்பு சென்று தகவல்களை வழங்கியுள்ளார். இதற்குப் பிரதி உபகாரமாகப் பணமும் பெற்றுள்ளார்.

வடபகுதி மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளால் சிறீலங்கா அரசு தான் எதிர்பார்த்தபடி ஏதாவது அரசியல், இராணுவ நோக்கங்களை நிறைவேற்றியதோ இல்லையோ, ஆனால் உளவாளிகள் சிலரை உருவாக்கியுள்ளது.

இத்தகைய உளவு நடவடிக்கையை கூட்டுப் படைத் தலைமையகமே நேரடியாகக் கையாண்டது.

வடபகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கூட்டுப் படை தலைமை அலுவலகமே வழங்கிவந்தது.


OPERATIONAL HEADQUARTERS, MINISTRY OF DEFENCE

No. 80, Sir Ernest de Silva Mawatha, Colombo 07

1577

1991 ஜூ 17

Staff Officer, Operational Headquarters, Ministry of Defence

இராணுவம் வழங்கிய அனுமதிப்பத்திரம்

அந்த அனுமதிப்பத் திரமுறை வடபகுதி மக்களுக்கு மண்ணெண்ணெய் அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் செய்யப் பட்டதில்லை. அது ஒரு தூண்டிலாகவே பயன்படுத்தப்பட்டது.

யாரோ சிலர் இலவச அனுமதிப் பத்திரத்துக்காக, இலட்சக்கணக்கான ரூபா வருமானத்திற்காக தகவல் கொடுப்போராக மாறினார்கள்.

இவ்விதமான உளவாளிகளுக்கு உதாரணமாக கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் மகேஸ்வரன் என்ற நபரை எடுக்கலாம். இவருக்கு 54 வயது.

இவர் இரண்டுமுறை கொழும்பு சென்று தகவல்களை வழங்கியுள்ளார். எமது இயக்கத்துடன் ஒன்றியிருந்து ஒரு தேசப்பற்றாளர்போல நடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உறவுமுறை

உறவினர்களைச் சந்திக்க கொழும்பு சென்று உளவாளிகளாக மாறும் ஒருவகையினரும் உள்ளனர்.

துரோகக் குழுக்களில் அங்கம் வகிக்கும் உறவு முறையான ஒருவரை கொழும்பில் சந்தித்து உறவு முறைக்காகவோ, சுயநலனுக்காகவோ தகவல்களை வழங்கி நிரந்தர உளவாளிகளாக மாறியவர்களும் உள்ளனர்.

இதற்கு உதாரணமாக பன்னங்கண்டி வட்டக்கச்சியைச் சேர்ந்த அந்தோணி பிரகாசம் என்பவரை எடுக்கலாம். இவருக்கு 42 வயது.

இவரது ஒன்றுவிட்ட அண்ணன் முறையான ஒருவரின் மனைவியினது தம்பி சிறீலங்கா இராணுவத்தில் ஒரு சிப்பாயாக இருக்கிறார். இவரது தொடர்புகளால் பிரகாசம் ஒரு முக்கிய உளவாளியாக மாறினார்.

கொழும்பில் இருந்து விற்பனைப் பொருட்களை சுலபமாக கொண்டுவந்து சேர்ப்பதற்கு உதவியாக இராணுவம் இவருக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்கியிருந்தது.

அதன் உதவியுடன் இவர் பொருட்களைக் கொண்டுவந்து சேர்த்தார். பிரதியுபகாரமாக வன்னி மாவட்டத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட முகாம்களது விபரங்களையும், வரைபடக் குறிப்புக்களையும் இவர் இராணுவத்துக்கு வழங்கியுள்ளார்.

இவரது வரைபடக் குறிப்புக்களது உதவியுடன் எமது முகாம்கள் சில விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகின.

உத்தியோகம் காரணமாக இருந்த பழைய தொடர்புகளை மீண்டும் கொழும்பில் புதுப்பித்துக்கொள்ள நேரும்போது ஒரு உளவாளி உருவாக்கப்படலாம்.

கணேசபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த 48 வயதுடைய முருகேசு தர்மராஜன் இந்த வகையினருக்கு ஒரு உதாரணமாவார்.

இவர் 1965ம் ஆண்டுக் காலப்பகுதியில் இராணுவத்தில் கடமையாற்றியுள்ளார். பின்னர் இராணுவத்தைவிட்டு விலகி இ.போ.ச நடத்துனராக இருந்தார்.

1987ம் ஆண்டுக் காலகட்டத்தில் கிளிநொச்சியில் வேலைபார்த்தபோது, கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்த முன்னர் இவருக்குத் தெரிந்த சிப்பாய் ஊடாக தொடர்பு கொண்டு இவர் தகவல்களை வழங்கினார்.

அண்மையில் இவரது தொடர்பாளரான சிப்பாய் ஊடாக கொழும்புக் கூட்டுப்படை தலைமையகத்துக்கு தகவல்களை அனுப்பிக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். இவர் ஒரு முக்கியமான உளவாளி.

### உடனுக்குடன்

ஆனையிறவு முகாமை நாம் தாக்கத்திட்டமிட்டு, அதற்குரிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தபோது, ஆனையிறவு முகாமின் பரந்தன் பக்கமாகவுள்ள பகுதிகளில் எமது செயற்பாடுகளை அறிந்து, உடனுக்குடன் கூட்டுப்படை தலைமையகத்திற்கு அனுப்பியிருந்தார்.

அத்துடன் ஏனைய உளவாளிகள் மூலம் கூட்டுப்படை தலைமையகத்திற்கு கிடைக்கும் தகவல்களையும், வரைபடங்களையும் இவர் உறுதிப்படுத்தியும் கொடுப்பார்.

இதற்கு சன்மானமாக கூட்டுப்படை தலைமையகம் இவருக்கு 25 ஆயிரம் ரூபா கொடுத்து வந்தது.

1987ம் ஆண்டுக் காலப்பகுதியில் கிளிநொச்சி இராணுவத்தினர் பொதுமக்களிடமிருந்து பறித்த பொருட்களில் சிலவற்றை இவருக்கு சன்மானமாகக் கொடுத்துள்ளனர். அத்தகைய பொருட்களில் உழவு இயந்திரம் ஒன்றும் அடங்கும்.

இவ்விதமாக உதவியின் பின்னாலும், உறவு முறையின் பின்னாலும், பழைய தொடர்புகளின் பின்னாலும் உளவாளிகள் உருவாக்கப்பட்டனர்.

இவ்விதமாக சிறீலங்கா அரசு வைத்த பொறிகளில் சிக்கி சிலர் துரோகிகளாகவும், உளவாளிகளாகவும் மாறியுள்ளனர் என்று புலிகள் விளக்கம் அளித்திருந்தனர்.

கைதான உளவாளிகள் விசாரணையின் பின்னர் புலிகளால் மரண தண்டனைக்கு உள்ளானார்கள்.

பொதுமக்கள் மத்தியில் குற்றங்களை ஒப்புக் கொள்ளச் செய்துவிட்டும் புலிகள் தண்டனை கொடுத்தனர்.

புலிகளது கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து வவுனியா வருவதற்காக காத்திருக்கும் மக்கள் முன்பாகவும் மரணதண்டனைகள் நிறை வேற்றப்பட்டன.

உளவு செல்ல முனைவோரை அச்சுறுத்துவதற்காகவே அவ்வாறு பகிரங்க தண்டனை வழங்கினார்கள்.

### படை பலம்

1991ம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பின்படி இலங்கை அரச படைகளது எண்ணிக்கை வெளியாகியிருந்தது.

அந்தக் கணக்கெடுப்பின்படி இராணுவத்தினரின் எண்ணிக்கை 80 ஆயிரம். கடற்படை 14 ஆயிரம். விமானப்படையில் 6 ஆயிரம். மொத்த ஆயுதப்படையினரின் எண்ணிக்கை ஒரு இலட்சம் (தற்போது 1999 இல் இந்த எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது).

பொலிஸ் படை ஆயுதப்படை என்ற வகைக்குள் அடங்காது. பொலிஸ் படைக்குள்தான் ஐயாயிரம் பேர் கொண்ட விசேஷ அதிரடிப்படை அடங்கியது.

இவற்றுடன் ஊர்காவற்படை மற்றும் துணைப்படை றிசேவ் படை போன்றவையும் ஆயுதப்படைக்குள் சேராதவை. இவற்றை 'பரா துருப்புக்கள்' என்று அழைப்பர்.

எனினும் இலங்கையில் போர் நடை பெறும் பகுதிகளில் பொலிஸ்படை, ஊர்காவற்படை போன்றவையும் ஆயுதப்படைகள் போன்றே பயன்படுத்தப்படுகின்றன.

1991ம் ஆண்டுக் கணிப்பின்படி பொலிஸ் படையில் 28 ஆயிரம் பேர் இருந்தனர். தேசிய துணைப்படை என்ற பெயரில் பத்தாயிரம் பேர் இருந்தனர்.

ஊர்காவற்படையில் 1991இல் 18 ஆயிரம் பேர் இருந்தனர்.

எனவே, ஆயுதப்படைகள் என்ற வகைக்குள் அடங்கும் ஒரு இலடசம் படையினருடன் அந்த வகைக்குள் அடங்காத சட்டபூர்வ ஆயுதபாணிகளான 56 ஆயிரம் பரா துருப்புக்கள் இருந்து ஆயுதப் படைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

1983ம் ஆண்டு சுமார் 15 ஆயிரம் பேருடனும், சாதாரண எஸ்.எல்.ஆர், 303 ரக கரிகுழல் துப்பாக்கிளுடன் இருந்த சிறீலங்கா ஆயுதப்படை 1991ம் ஆண்டு ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆட்பலத்துடனும், நவீன ரக ஆயுதத் தளபாடங்களுடனும் பலமிக்க இராணுவ இயந்திரமாக மாறி நின்றது.

1987ம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை தரைப் படையை கட்டியமைப்பதிலேயே சிறீலங்கா அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்தது.

இந்திய, புலிகள் போர் முடிவுற்று, மறுபடி சிறீலங்கா அரசும், புலிகளும் போரில் குதித்தபின்னர் புலிகளை எதிர்கொள்ள கடற்படை, விமானப்படை இரண்டும் மேலும் விரிவுபடுத்தப்பட்டன.

1988-89ம் ஆண்டுகளில் கடற்படையில் 5 ஆயிரத்தி 500 பேர் இருந்தனர். விமானப் படையில் 3 ஆயிரத்தி 700 பேர் இருந்தனர்.


1988-89ம் ஆண்டுகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கை 40 ஆயிரமாக இருந்தது. 1991இல் இருமடங்காக உயர்ந்து 80 ஆயிரத்தைத் தாண்டியது. ஆயினும் இந்த விரிவுக்குரிய பலன்கள் 1991இல் படையினருக்கு கிட்டவில்லை.

(தொடர்ந்து வரும்)

---

# மறுபிறவி

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.




**மீ**ண்டும் நீதிபதி முன் ஆஜராகியிருந்தோம். 26 பேர் மீதான குற்றச்சாட்டுகளையும் வாசித்த நீதிபதி, "என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?" என்று ஒவ்வொருவராகக் கேட்டார்.

தீர்ப்புகள் தீர்மானிக்கப்பட்ட பின் என்ன சொல்வது? ஆனாலும் சட்டத்தின் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கு கட்டுப்பட்டுத்தானே ஆக வேண்டியிருக்கிறது!

ஏ-1 குற்றவாளியான நளினிக்குத்தான் முதல் வாய்ப்பு வழங்கப்பட்டது.

"மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார் நீதிபதி. நான் நளினியைப் பார்த்தேன்.

தனது குழந்தையின் எதிர்காலத்தை நினைத்து நளினியின் மனம் போராடிக் கொண்டிருப்பதை முகம் பிரதிபலித்தது.

அதிகாலையில் விநாயகர் படத்தின் முன்பு தன் குழந்தைக்காக மனமுருக அவர் வேண்டியது என் மனக் கண்ணில் தோன்றியது.

அந்தக் குழந்தையின் நலனுக்காக அநேக நாட்கள் அவர் விநாயகர் படத்தின் முன்பு பக்திச்சிரத்தையுடன் மந்திரங்கள் ஜெபித்திருக்கிறார். நளினியின் கண்களிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது.

தனக்கு அதிகபட்ச தண்டனை வழங்கினால் தனது குழந்தை அனாதையாகிவிடும் என்று நளினி கூறியதை நீதிபதி பதிவு செய்து கொண்டார்.

விக்கியும் ஆதிரையும் சிறைப்பறவைகளாக இருந்தாலும் காதல் பறவைகள். அவர்கள், ஒருவரையொருவர் விரும்புவதை எடுத்துக் கூறி, தாங்கள் திருமணம் செய்து கொண்டு வாழ விரும்புவதால் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்றனர்.

செல்வலட்சுமி தனது குழந்தையின் வாழ்வுக்காக தனக்கு தண்டனையை குறைக்க வேண்டும் என்றார் பரிதாபமான குரலில்.

தீர்ப்புகள் திருத்தப்படமாட்டாது என்பதை அறிந்தோ என்னவோ, ரவிச்சந்திரனும் சுசீந்திரனும் வேண்டுகோள் எதையும் முன்வைக்கவில்லை. "நீதிமன்றம் என்ன தீர்ப்பு சொல்கிறதோ, அதை ஏற்கிறோம்" என்றனர்.

எனக்கா வாய்ப்பு வந்தது. எப்போதும் இல்லாத அளவில் உரத்த குரலெடுத்துச் சொன்னேன். "நான் நிரபராதி. இந்த வழக்கிற்காக ஆறரை ஆண்டுகள் நான் சிறையில் இருந்திருக்கிறேன். எனது குடும்ப சூழ்நிலை கருதியும் எனது உடல்நலம் கருதியும் குறைந்த தண்டனை கொடுக்க வேண்டும்" என்றேன், நம்பிக்கை இருந்தும் இல்லாமலும்.

வழக்கறிஞர் துரைசாமி அழுததை அன்றுதான் நான் பார்த்தேன். அவரது கண்ணீரின் காரணத்தை என்னால் யூகிக்க முடிந்தது.

தலைக்கு மேல் வெள்ளம் போகும் போது, கடைசி முறையாக கையை உயர்த்தி ஆபத்பாந்தவனை தேடுவதுபோல், இறுதி நம்பிக்கையில் நீதிபதி முன் எங்கள் வேண்டுகோள்களை அடுக்கியிருந்தோம். அதைவிட கனமாக அங்கே அடுக்கப்பட்டிருந்தன தீர்ப்பின் பக்கங்கள்.

மாலை 5.30 மணிக்கு தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார் நீதிபதி. நெஞ்ச சுவற்றுக்குள் ஒரு பந்து முட்டி மோதிக் கொண்டிருப்பது போல் இருந்தது.

வழக்கத்தைவிட சற்று அதிகமாகவே இருந்தது நீதிபதியின் குரல். ஏ-1 குற்றவாளியான நளினி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதையும், அவருக்கு தூக்குத்தண்டனையும், ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டிருப்பதையும் அவர் வாசித்தபோது நெஞ்சுக்குள் மோதிக் கொண்டிருந்த பந்தின் வேகம் அதிகரித்தது.

ஏ-2 குற்றவாளி முருகன், ஏ-3 குற்றவாளி சாந்தன் ஆகியோர் மீதான குற்றங்களும் நிரூபிக்கப்பட்டு அவர்களுக்கும் மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக வாசித்தார் நீதிபதி.

அதன்பின், ஏ-4 சங்கர், ஏ-5 விஜயானந்தன் ஆகியோர் மீது, நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை வாசித்து அவர்களுக்கும் தூக்கு தண்டனை என்று நீதிபதி தீர்ப்பு வழங்கியதை கேட்டபோது, காதுக்குள் கருநாகம் கொத்தியதுபோல் இருந்தது. அடுத்தடுத்து, ஒவ்வொருவருக்கும் மரண தண்டனை என தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது, 26 பேருக்கும் இதே தண்டனைதான் என்பது புரிந்துவிட்டது.

நெஞ்சுக்குள் மோதிக் கொண்டிருந்த பந்தின் வேகம் மெல்ல மெல்ல குறைந்தது. நமக்கும் அதே தீர்ப்புதான் என்பதை எதிர்பார்த்து என்னை நானே தேற்றிக்கொண்டிருந்தேன்.

நீதிபதி எனது பெயரை (சுபாசுந்தரம்) வாசித்துவிட்டு தண்டனையை அறிவிக்கத் தொடங்கினார். தேற்றி வைக்கப்பட்டிருந்த மனசு, கட்டுப்பாட்டை இழந்தது.

அவரது குரல் உயர்ந்து கொண்டே போனது. "உங்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. உங்களை சாகும்வரை தூக்கிலிட வேண்டும் என தீர்ப்பளிக்கிறேன்" என்று நீதிபதி வாசித்தபோது, நெஞ்சுக்குள் மோதிய பந்து மீண்டும் வேகமெடுத்து, இருதயத்துடன் சேர்ந்து வெளியே வந்து விழுந்து விடும் போல் இருந்தது.

தீர்ப்பு தினத்திற்கு முதல்நாள்வரை 'தூக்குத்தண்டனை' என்ற சொல் பொழுது போக்கிற்கும் நகைச்சுவைக்கும் மட்டுமாகவே பயன்பட்டு வந்தது. ஆனால் தீர்ப்பு வாசிக்கப்பட்ட அந்த நொடியில்,சப்த நாடிகளும் ஒடுங்கி மீண்டும் உயிர்பெற்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

தீர்ப்பினால் ஏற்பட்ட அச்சமும் பதட்டமும் எங்கள் 26 பேருக்கும் ஒருசில நிமிடங்கள்தான் நீடித்தன. இந்தத் தீர்ப்பு நிச்சயமாக மேல்முறையீட்டில் அடிபட்டுவிடும் என்று முழுமையாக நம்பினோம்.

எங்களைப்போலவே நம்பிக்கை மிகுந்திருந்தாலும், '26 பேருக்கும் தூக்கு' என்ற தீர்ப்பைக் கேட்ட வழக்கறிஞர்கள் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. வழக்கறிஞர் துரைசாமி நெஞ்சுவலியால் சரிந்துவிட்டார்.

### சுபா சுந்தரம்

அவருக்கு மாத்திரைகள் கொடுத்து ஓய்வெடுக்கச் செய்தோம். அவரது ஜூனியர் இளங்கோ கதறிக் கதறி அழுதபடி இருந்தார். எங்களைத் தேற்ற வேண்டிய அவர்களை நாங்கள் தேற்றிக்கொண்டிருந்தோம்.

எங்களுடன் பாதுகாப்புக்கு [illegible] வந்திருந்த பெண் காவலர்கள் இருவர், துக்கம் தாங்கமுடியாமல் உடுப்பு அணிந்தபடியே அழுதது இன்னமும் என் கண்களில் தேங்கி நிற்கிறது.

(தொடர்ந்து வரும்)

# இரண்டில் ஒன்று தமிழ்க் கட்சிகளின் முடிவு என்ன?

**அலசுவது - இராஜதந்திரி**

புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் வவுனியாவில் வைத்து கிளைமோர் தாக்குதலில் பலியாகியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக சித்தார்த்தன் அணி, தாசன் அணி என்று இரு பிரிவாக செயற்பட்ட புளொட் இயக்கத்தினர் அண்மையில்தான் மறுபடி ஒன்றாகச் செயற்பட இணங்கினார்கள்.

<u>புளொட் உபதலைவர் என்று மாணிக்கதாசன் அழைக்கப்பட்டபோதும், புளொட் அமைப்பின் முழுக்கட்டுப்பாடும் அவரிடமே இருந்தது.</u>

'இராணுவப்பிரிவு செய்யும் செயல்களுக்கும் எனக்கும் தொடர்பில்லை. அது பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம்' என்று புளொட் தலைவர் சித்தார்த்தனே பேட்டி ஒன்றில் பகிரங்கமாக கூறியுமிருந்தார்.

ஆயுதமேந்திய போராட்டம் சுயநிர்ணய உரிமைக்காக நடத்தப்படும்போது, அதுவும் ஜனநாயகப் போராட்டமேயாகும்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் தாம் இப்போதுதான் ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளதாக அர்த்தங்கள் புரியாது கற்றுக்குட்டித்தனமாக கூறிவருகின்றன.

இக் கட்சிகளது கூற்றுப்படி ஆயுதத்தை கைவிடுவதே ஜனநாயகப் பாதை என்று அர்த்தமாகிறது. அவ்வாறு நோக்கினால் எந்தவொரு முன்னாள் போராளி அமைப்புக்களும் தற்போதும் ஜனநாயக அமைப்புகள் அல்ல என்றுதான் கொள்ளவேண்டும்.

முன்னாள் போராளிக் கட்சிகள் ஒவ்வொன்றும் ஆயுதங்களையும், அதற்கான அமைப்புக்களையும் தற்போதும் கொண்டுள்ளன.

தமது உறுப்பினர்களது மரணச் சடங்குகளில் இராணுவத்தினர் அணியும் அதே சீருடைகளையே இக் கட்சிகளது ஆயுதம் தாங்கிய உறுப்பினர்களும் அணிந்து நடமாடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதனைவிட மிக முக்கியமான விடயம் யாதெனில், இக் கட்சிகளில் உள்ள ஆயுதம் தாங்கிய உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சகமே துணைப்படை என்ற பெயரில் மாதாந்த ஊதியத்தையும் வழங்கி வருகிறது.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு மாதாந்த நிதி வழங்கப்படவில்லை. பொ.ஜ.முன்னணி ஆட்சி பதவிக்கு வந்ததும், தமது முன்னைய ஆதரவு நிலைப்பாட்டைக் கூறி மாதாந்தம் நிதி பெற்று வருகின்றனர்.

<u>ஆயுதக் கலாசாரத்திற்கு தாம் எதிரானவர்கள் என்று வெளியே பிரசாரம் செய்துவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆயுதம் ஏந்திய துணைப்படைக்குரிய நிதியைத்தான் மாதாந்தம் பெற்றுவருகிறது.</u>

எனவே, முன்னாள் போராளிகளான இந்நாள் தமிழ்க் கட்சிகள் தம்மை அரசியல் கட்சிகள் என்று அழைத்துக் கொள்வது பொருத்தமானதாக அமையவில்லை.

சில நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள், உள்நாட்டுக் கிளர்ச்சிகள், கெரில்லா போர்கள் போன்றவை நடைபெறும்போது, அவற்றை ஒடுக்க ஆட்சியாளரே சில இயக்கங்களை உருவாக்குவார்கள்.

அந்த இயக்கங்களுக்கு நிதி உதவி முதற்கொண்டு சகல பின்பலமும் ஆட்சியாளரிடம் இருந்தே கிடைத்து வரும்.

ஆயினும் மக்களை ஏமாற்றுவதற்காக ஆட்சியாளருக்கு எதிரானவர்கள் போன்று அந்த இயக்கங்கள் போக்குக் காட்டும். அதன் மூலம் மக்களை நம்பவைத்து படிப்படியாக போராட்டம்மீது நம்பிக்கையீனங்களை ஏற்படுத்த முனைவர். போராட்ட இயக்கங்கள் பற்றிய தகவல்களை திரட்டி ஆட்சியாளருக்கு உதவுவார்கள்.

வேலை வாய்ப்புக்கள் போன்ற சலுகைகளாலும் பணத்தாலும் தமக்கு ஆதரவாளர்களை உருவாக்கிக் கொண்டு, போராட்டத்துக்கு எதிரான அரசியலை நாசூக்காக நடத்துவார்கள். இத்தகையவர்களையே எதிர்ப்புரட்சியாளர்கள் என்று போராட்ட இயக்கங்கள் பிரகடனம் செய்வதோடு, அவர்களுக்கு கடுமையான தண்டனைகளையும் வழங்கி வந்துள்ளன.

இங்கு அவ்வாறானவர்களை 'துரோகிகள்' என்று கூட்டணி முதற்கொண்டு புளொட் உட்பட புலிகள்வரை அழைத்தனர்.

தண்டனைகளும் தந்துள்ளனர்.

<u>சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களது போராட்டத்தை திசை திருப்ப, வேலை வாய்ப்பு ஆசை காட்டுதல், அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய ஆரவாரங்கள், பட்டம் பதவிகள் என்பன ஆளும் கட்சி முகவர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.</u>

அந்த முகவர்களான துரையப்பா, அருளம்பலம், தியாகராசா, குமாரசூரியர், ராசன் செல்வநாயகம் போன்றோர் துரோகிகள் என்று அழைக்கப்பட்டு போராளிகளால் குறிவைக்கப்பட்டனர்.

அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்ட போது புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் புலிகள் இயக்கத்திலேயே இருந்தார்.

துரையப்பா கொலை உட்பட புலிகளது தாக்குதல்கள் தொடர்பாக முதன் முதலில் உரிமை கோரி 1978 இல் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகள் சார்பாக உமாமகேஸ்வரனே கையொப்பமிட்டிருந்தார்.

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட பொத்துவில் கனகரட்னம் கூட்டணியில் இருந்து விலகி ஐ.தே.கட்சி அரசாங்கத்தோடு ஐக்கியமானார்.

அதனையடுத்து கூட்டணியின் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினராக அன்றிருந்த அமரர் துரைரத்தினம் அவர்கள், 'போகாதே போகாதே என் கனகா, பொல்லாத சொப்பனமும் நானும் கண்டேன்' என்று பொதுக்கூட்டங்களில் பாடி எச்சரித்தார்.

அரசாங்கத்துடன் இணைந்திருந்தால்தான் வேலை வாய்ப்புக்கள் பெற்றுத்தர முடியும். பொத்துவிலை பொன்செழிக்கும் பூமியாக மாற்றமுடியும் என்றெல்லாம் தன் குத்துக்கரணத்தை கனகர் நியாயப்படுத்திமிருந்தார்.

<u>கனகரத்னத்துக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை விதித்தனர். கொழும்பில் வைத்து அவரைத் தீர்த்துக்கட்ட யாழ்ப்பாணத்திலிருந்து பிரபாகரன் கொழும்பு வந்திருந்தார்.</u>

அப்போது பிரபாகரன் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த நேரம். கொழும்பிலும் அப்போது கைதாகும் வாய்ப்புக்கள் அதிகமாகவிருந்தன. அவ்வாறிருந்தும் துரோகம் செய்தவருக்கு தண்டனை கொடுத்தேயாக வேண்டும் என்ற பிடிவாதம் காரணமாக பிரபாகரன் நேரடியாக கொழும்பு வந்திருந்தார்.

பிரபா கொழும்பில் தங்குவதற்கான ஏற்பாடுகள் உமாமகேஸ்வரனால் செய்யப்பட்டிருந்தன. பிரபாவும், உமாவும் இணைந்து சென்றே கனகரைச் சுட்டனர். அவர் மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார்.

பின்னர் புலிகள் அமைப்பைவிட்டு தனியாகி புளொட் அமைப்பாக இயங்கிய உமாமகேஸ்வரன் அணியினரும் துரோகிகள் ஒழிப்பில் குறியாக இருந்தனர்.

<u>வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜாவை புளொட் அமைப்பினரே சுட்டுக்கொன்றனர். அதேபோல வவுனியா மாவட்ட ஐ.தே.கட்சி அமைப்பாளர் புலேந்திரனும் புளொட்டினராலேயே கொல்லப்பட்டார்.</u>

அதேபோல ரெலோ இயக்கத்தில் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரும் துரோகிகள் ஒழிப்பில் வெகு தீவிரம் காட்டினார்கள். அருளம்பலம் ரெலோவினால் சுடப்பட்டார். அவரது செயலாளரும், பொலிசாருக்கு தகவல் கொடுப்பவருமான தாடித் தங்கராஜாவும் ரெலோ இயக்கத்தினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

எனவே, போராளி அமைப்புக்களைப் பொறுத்தவரை அவர்கள் துரோகிகள் என்று பிரகடனம் செய்வதற்கு பின்வரும் விடயங்களே காரணங்களாக இருந்தன.

(1) தென்னிலங்கை கட்சிகளது முகவர்களாக இருப்பது. (2) போராட்டத்தை திசைதிருப்பும் சலுகைகளை பெரிதாக விளம்பரப்படுத்துவது. (3) போராட்ட அமைப்புக்கள் பற்றிய தகவல்களை தமது எதிரிகளுக்கு தெரிவிப்பது போன்றவையே முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன.

போராளி அமைப்புக்களது வேட்டைகளால் வடக்கு-கிழக்கில் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளது முகவர்களின் பாத்திரம் மறைந்து போனது.

ஆனால் அக்கால முகவர்களது பாத்திரங்களே முன்னாள் போராளிக் கட்சிகளுக்கு தற்போது ஆட்சியாளரால் வழங்கப்பட்டுள்ளன.

இன்னமும் சொல்வதானால், துரையப்பா காலத்தைவிட தற்போதுதான் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் கூர்மை பெற்றுள்ளன. இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்து, நிலம் இழந்து, சொத்திழந்து, தினம் உயிர்ப்பலி கொடுத்து நிற்கின்றனர்.

தற்போதைய காலகட்டத்தில் ஆட்சியாளருடன் ஒத்துழைப்பது என்பது, முன்னைய காலங்களில் ஒத்துழைப்பதைவிட பாரதூரமான நிலைப்பாடேயாகும்.

<u>தாம் யாரை துரோகிகள் என்றனரோ, அவ்வாறு கூறி அவர்களை அழித்தொழித்தனரோ அவர்களது பணியைத்தான் இன்று தமிழ்க் கட்சிகள் செய்வனே செய்து வருகின்றன.</u>

சமீபத்தில் புளொட் அமைப்பினர் வவுனியாவில் ஹர்த்தால் அனுஷ்டித்தனர். பொது மக்கள்மீது படையினர் தாக்குதல் நடத்தியதைக் கண்டிப்பதற்காகவே இக் ஹர்த்தால் நடப்பதாக கூறப்பட்டது.



இக் ஹர்த்தாலுக்கு படையினரும் மறைமுகமாக ஆதரவளித்தனர். இது தொடர்பாக இன்னொரு தமிழ்க் கட்சி பிரமுகர் படை உயர் மட்டத்தோடு தொடர்பு கொண்டு கேட்டிருக்கிறார்.

<u>"சும்மா அரசியலுக்காக தாசன் செய்கிறார். அவர் எங்களோடுதான்" என்று அந்த அதிகாரி அலட்சியமாக கூறினாராம்.</u>

ஆனால் ஹர்த்தாலுக்கு படையினர் ஒத்துழைத்தனர் என்பது மக்களுக்கே நன்கு தெரிந்துவிட்டதால், உள்நோக்கம் பற்றியும் பல ஊகங்கள் கிளம்பியிருந்தன.

வவுனியாவில் படையினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி, மறுபடி முன்புபோல புளொட் அங்கு செயற்படத் தொடங்கியிருந்தது.

இந்த செயற்பாட்டுக்கு ஒரு மூடுதிரை போன்றே, தாம் படையினருக்கு எதிரானவர்கள் போல ஹர்த்தால் ஒன்றை அனுஷ்டித்திருந்தார் மாணிக்கதாசன். இது வவுனியாவில் படையினருக்கும், புளொட்டுக்கும் இடையிலான உடன்பாட்டுடன் நடந்த ஹர்த்தாலாகவே இருந்தது.

புளொட் வவுனியா மக்களிடையே நற்பெயர் எடுத்தால், புலிகள் பற்றிய தகவல்களும் ஏராளமாகக் கிடைக்கும். புலி வேட்டை சுலபமாக நடக்கும் என்பதே படைத்தரப்பின் உடன்பாட்டுக்கு காரணமாக இருந்திருக்கும்.

பொதுமக்களை படையினர் தாக்கியதற்காகவே ஹர்த்தால் அனுஷ்டிப்பதாகக் கூறிய புளொட்டினர், மாணிக்கதாசன் மறைவின் பின்னர் வைரவப் புளியங்குளம், பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களை தாக்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமது சொந்த நலன்களுக்கு ஏற்ப நிலைப்பாடுகளை மேற்கொண்டபடி, அவற்றை மக்கள் நலனாக சித்தரிக்கும் போலித்தனமே தமிழ்க் கட்சிகளிடம் இப்போது மேலோங்கியுள்ளது. பொது மக்களை தாக்கியதைக் கண்டித்து ஹர்த்தால் என்று கூறியதும், பின்னர் தாமே பொதுமக்களை தாக்கியதும் அதற்கு துல்லியமான ஓர் எடுத்துக்காட்டாகும்.

யாழ் குடாநாட்டில் திருநெல்வேலியில் தமது பிரதேச சபை உறுப்பினர் பலியானபோது ஈ.பி.டி.பி.யினரும் சந்தையில் நின்ற பொதுமக்களை தாக்கியிருந்தனர்.

இந்தியப்படை காலத்தில் புலிகளது தாக்குதலுக்கு பதிலடியாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொதுமக்களை தாக்கியிருக்கிறது.

'முன்னாள் போராளி அமைப்புக்கள்' மக்கள்மீது சந்தேகம் கொள்ளுமளவுக்கும், தமக்கு எதிரிகளாக நினைக்குமளவுக்கும் உள்ளூர குற்ற உணர்ச்சி கொண்டுள்ளன. அந்தக் குற்ற உணர்ச்சியானது மக்கள் தங்களை இளக்காரமாக நினைக்கிறார்களோ என்ற உணர்வை ஏற்படுத்துவதால், பதிலடியாக மக்களைத் தாக்கி மிரட்டி தங்கள் பலத்தை காண்பித்து குரூரமான திருப்தியடைகிறார்கள்.

<u>இப்போக்குக்கு எவ்வித குறிக்கோளுமற்ற செயல்களால் ஏற்பட்டுவரும் மனச் சிதைவுகளே காரணமாகும்.</u>

எனவே, போலித்தனங்கள், மனச்சிதைவுகள், உறுதிப்பாடின்மை போன்றவற்றின் கூட்டுச் சேர்க்கைகளாகவே தமிழ்க் கட்சிகள் குணாம்சரீதியான சரிவைச் சந்தித்துள்ளன.

புலிகளுக்கு எதிராக தற்காப்புக்கே ஆயுதங்கள் வைத்திருப்பதாக கூறிக்கொண்டு, இராணுவப் பிரிவு, இராணுவத் தளபதி போன்றோரையும் இக் கட்சிகள் கொண்டுள்ளன. எனவே புலிகளுடன் நடைபெறும் போரில் இவர்களும் பங்காளிகள் என்பதே உண்மையாகும்.

மாணிக்கதாசன் மறைவையடுத்து புளொட் விடுத்த அறிக்கை உண்மையை துலக்கமாக்கியுள்ளது. வவுனியாவில் தம்மிடமிருந்த ஆயுதங்களை படையினர் சில மாதங்களாக மீளப் பெற்றிருந்ததுதான், புலிகள் வவுனியாவில் பலம் பெறுவதற்கு காரணம் என்று அந்த அறிக்கை கூறியிருந்தது.

<u>ஆகவே, தற்காப்புக்காக மட்டுமல்ல, புலிகளை தேடிப்பிடிக்கும் நடவடிக்கையிலும் தாம் ஈடுபட்டிருந்ததை புளொட் தம்மையறியாமலேயே ஒப்புக்கொண்டதாகிவிட்டது.</u>

எனவே, புளொட் அமைப்போ, ஏனைய முன்னாள் போராளி அமைப்புக்களோ தனியான பெயர் பலகைகளுடன் இயங்குவதால் மட்டும் அரசியல் கட்சிகளாகிவிட முடியாது. தமக்கு இன்றைய போரில் உள்ள பங்கை மறைத்துக் கொண்டு, அரசும், புலிகளுமே போரில் ஈடுபடுவதாக கூறிக்கொண்டிருப்பதும் அர்த்தமற்றது.

புலிகள் நம்மைத் தாக்குவதால்தான் பாதுகாப்புத் தேடுகிறோம் என்று இவை கூற முற்படுகின்றன. ஆனால் யாழில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு வரை தமிழ்க் கட்சிகளை புலிகள் தாக்காது இருந்தனர். பின்னர் தேர்தலில் அரச ஆணைப்படி அரச நலனுக்கு சார்பாக போட்டியிட்ட பின்னரே தமிழ்க் கட்சிகளை நோக்கி புலிகளது துப்பாக்கிகள் திரும்பியிருந்தன.

உண்மையில் இக் கட்சிகள் புலிகளை மனப்பூர்வமாக நேர்மையாக பகிரங்கமாக எதிர்த்து நின்றால் அதனைப் பாராட்டக் கூடியதாகவிருக்கும்.

ஆட்சியாளரிடமும், படையினரிடம் நற்பெயர் எடுத்துக் கொண்டு, தேர்தல்களில் தமக்கு சாதகமான சூழல்களை தோற்றுவிக்கும் தந்திரமாகவே தமிழ்க் கட்சிகள் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை கைக்கொண்டு வருகின்றன. அதற்கு மாணிக்கதாசன் மேற்கொண்ட நிலைப்பாடுகளும் உதாரணமாக அமைகின்றன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் உள்ளது போன்றே யாழ்குடாநாட்டில் புளொட் உறுப்பினர்கள் பிரசாரம் செய்தனர். அதே காலகட்டத்தில் வவுனியாவில் தமிழ் இளைஞர்கள் பலரை புலிகள் என்று பிடித்து மண்ணுக்குள் புதைத்தனர்.

<u>யாழில் தேர்தல் வெற்றி பெற புலிகளையும், வவுனியாவில் தனி மேலாதிக்கம் செலுத்த படையினரையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்தும் இரட்டை தந்திரத்தை மாணிக்கதாசன் கையாண்டிருந்தார்.</u> இதனால்தான் புளொட்மீது பிரதான குறிவைத்து வவுனியாவில் புலிகள் தாக்குதலை தொடுக்க ஆரம்பித்திருந்தனர்.

ஆகவே, ஏனைய தமிழ்க் கட்சிகள் புளொட் உட்பட தற்போதைய போரில் ஆட்சியாளரின் அரசியல், இராணுவ நலன்களை சார்ந்தவையாகவும், அவற்றை முன்னெடுப்பதில் பங்காளிகளாகவுமே உள்ளனர்.

அதனால் புலிகள் இவர்கள்மீது தாக்குதல் நடத்துவது என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றேயாகும். இவர்களும் அதனை எதிர்பார்த்தே ஆயுதமேந்திய காவலர் புடைசூழ இருக்கின்றனர்.

<u>ஆனால் புலிகளது தாக்குதல்களை இவர்கள் எவ்வளவுதான் விழிப்பாக, பாதுகாப்பாக இருந்தாலும் தடுக்க முடியாதுள்ளது.</u> அவ்வாறான நேரத்தில் தமது இயலாமையை மறைக்க அரசியல் கட்சிகளான தம்மை புலிகள் தாக்கிவிட்டதாகவும் அறிக்கைகள் விடுகின்றனர். புலிகளது தாக்குதலை அரசியல் கட்சிகள் மீதான தாக்குதலாக விபரிக்கின்றனர்.

இன்றைய யுத்தத்தில் அரசும், அரச சார்பான தமிழ்க் கட்சிகளும், படையினரும் ஒரே முகாமைச் சேர்ந்தவர்களே. எனவே மறுதரப்பு முகாமான புலிகள் இம் முகாம்மீது தாக்குதல் தொடுக்கவே செய்வர்.

<u>படையினர் புலிகள் மோதல் என்பது எவ்வாறு நோக்கப்படுகிறதோ, அந்த மோதல்களில் ஏற்படும் உயிரிழப்புக்கள் எவ்வாறு போர் இழப்புக்களாக கருதப்படுகிறதோ அவ்வாறுதான் தமிழ்க்கட்சிகள் புலிகள் மோதலும் நோக்கப்பட்டாக வேண்டும்.</u>

உயிர்ப்பலிகள் நியாயம் என்பதல்ல இதன் அர்த்தம். ஆனால் போர் நடைபெறும்போது போரில் ஈடுபடும் தரப்புக்களில் எந்தத் தரப்பு முந்துகிறதோ அந்தத் தரப்பு மறுதரப்பை விழுங்கவே செய்யும்.

போரில் பங்களிகளாக இருக்க விரும்பாது விட்டால் தமிழ்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாக வேண்டும்.

இல்லையெனில் புலிகளது தாக்குதல்களை முறியடிக்கும் பலத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டிலொன்றை உடனே தமிழ்க் கட்சிகள் தெரிவு செய்தாக வேண்டும். அதனை விடுத்து கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற கதையாக, நாம் போரில் அரசையும் சார்ந்து நிற்போம், புலிகளும் நம்மை தாக்காது இருக்கவேண்டும் என்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமானதே.

# சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

தமிழ்க் கட்சிகள் கண்டுகொள்ளாத மற்றொரு சகோதரப் படுகொலை வவுனியாவில் நடந்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

புலிகள் தாக்கினால் தமிழர்களுக்கு பதிலடி கொடுப்பது என்பது தற்போது வழக்கமான ஒன்றாகிவிட்டது. தமிழ்க் கட்சிகள் என்னதான் அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்தாலும், வெளுத்துக் கட்டப்படுகிறார்கள்.

அரசுக்கு எதிராக ஏதாவது கருத்துக் கூறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால், எப்படியாவது அந்தக் கருத்தோடு புலிகளையும் கொண்டுவந்து பொருத்தி, புலிகளையும்தான் கண்டித்துள்ளோம் என்று காண்பிப்பது தமிழ்க் கட்சிகளது அறிக்கை நுட்பம்.

தம்மீது படைகள் புலிமுத்திரை குத்திவிடக் கூடாது என்பதால் தமிழ்க் கட்சிகள் வலிந்து புலிகளையும் இழுத்து கண்டிப்பது உண்டு. தாம் ஏதோ பக்கம் சாராத ஜனநாயக உணர்வாளர்கள் போல முகமூடி போட்டுக்கொள்வார்கள்.

ஆனால் இப்படி என்னதான் முகமூடி போட்டாலும் இக் கட்சிகளுக்கு அரசும், படைத்தரப்பும் கொடுக்கும் மரியாதை என்னவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஏற்கனவே ரெலோவை வவுனியாவில் சீருடையினர் தாக்கினார்கள். தாம் தாக்கவேயில்லை என்று அதிரடிப்படை அதிகாரி கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினரைச் சுட்டுவிட்டு, துப்பாக்கிச் சமர் நடுவே மாட்டுப்பட்டு பலியானதாக கூறினர். ஆனால் அவரை பிடித்துவைத்து, கட்சி அடையாள அட்டையை கிழித்து வீசிவிட்டே சுட்டுக்கொன்றனர்.

வவுனியாவில் எரிபொருள் விநியோகம் படையினரால் கட்டுப்படுத்தப்பட்டபோது புளொட் ஹர்த்தால் நடத்தியதால், வீதிகளில் கண்ணில்பட்ட புளொட் உறுப்பினர்கள் எல்லாம் தாக்கப்பட்டனர்.

தற்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்டது மட்டுமல்ல, அவர் அருகே இரண்டு கைக்குண்டுகளும் முளைக்க வைக்கப்பட்டுள்ளன.

புலி என்று கூறினால்தான் உடலைப் பெறலாம் என்று சாதாரண மக்களை மிரட்டுவது போன்றே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பையும் பொலிசார் மிரட்டினார்கள்.

தமது உறுப்பினர்தான் பலியானதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமைப்பீடம் உறுதிசெய்த பின்பும், பாதுகாப்பு அமைச்சகம் விடுத்த அறிக்கை என்ன கூறியது தெரியுமா?

"வவுனியாவில் ஒரு பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகளும் மீட்கப்பட்டன."

இடி அமீன் கதையில்தான் இப்படியான காட்சிகள் வரும் என்பதில்லை.

தம் உறுப்பினரை 'பயங்கரவாதி' என்று கூறியதையிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பும் கோபப்படவில்லை.

இந்த அநியாய பலியெடுப்பு, பயங்கரவாத விபரிப்பு தொடர்பாக சக கட்சிகளுக்கும் ஜனநாயக உணர்ச்சி கொப்பளிக்கவில்லை.

இது ஏதோ சாதாரண பொலிசார் மட்டும் சம்பந்தப்பட்ட காரியம் என்று ஒதுக்க முடியுமா? அரசாங்க மேலிடம்வரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். தொடர்பு கொண்டது. வவுனியாவில் உயர் பொலிஸ் அதிகாரி வரை தொடர்பு கொள்ளப் பட்டது.

இதன் பயனாக போனால் போகட்டும் என்று உடலை மட்டும் திருப்பிக் கொடுத்தனரே தவிர, பயங்கரவாதி என்று சூட்டிய பட்டத்தை வாபஸ் பெறவில்லை. தவறு நடந்ததாக ஏற்கவுமில்லை. தவறாக நடந்த பொலிசார்மீது நடவடிக்கையும் இல்லை.

'மரணவிசாரணையில் சட்டப்படி பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறிவிட்டார்களாம்.

தமிழ்க் கட்சிகளது தேவை உள்ளபோதே இந்த உதையும், சூடும், பட்டம் சூட்டல்களும் நடைபெறுகின்றன என்றால், இத் தேவைகளும் இல்லாது போனால் என்னாகும்...?!

ஆனால் இப்போதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புக்கு புத்தி வந்ததா? தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளது ஈழ ஆதரவு நிலைப்பாட்டை கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிக்கை விட்டுள்ளது. இலங்கை வானொலிகளும் இதை முக்கியத்துவப்படுத்தின.

இதே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.தான் மாகாண சபை கட்சியாக இருந்தபோது ஈழப் பிரகடனம் செய்துவிட்டு நாட்டைவிட்டு தப்பியோடியது.

தற்போதைய கட்டத்தில் தமிழக கட்சிகளுக்கு புத்தி சொல்லி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிக்கை

## இரகசியப் பயணம் கண்டன அறிக்கை

விடும் இரகசியம் என்ன?

இதுபற்றி தமிழக உளவுத்துறை வட்டாரங்கள் அறிந்து கூறியுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தேர்தல் பிரசார இறுதிக்கட்டத்தில் இந்தியாவுக்கு பறந்து போய் காங்கிரஸ் பிரமுகர்களை சந்திக்க ஒற்றைக்காலில் நிற்கிறார். தனது விஜயத்தை சுரேஸ் இரகசியமாக வைத்திருந்தபோதும், 'இந்து' பத்திரிகைக்கு வெளியிட்ட கருத்தை வைத்து மோப்பம் பிடித்துவிட்டது உளவுத்துறை.

காங்கிரஸின் மனதைக் குளிர்விக்கவே பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சிகளான பா.ம.க, ம.தி.மு.க. ஆகியன ஈழக்கோரிக்கையை ஆதரிப்பதை கண்டித்து 'இந்து' பத்திரிகைக்கு கருத்து நல்கியுள்ளார்.

இலங்கை அரசுக்கு மறுபடி வாஜ்பேய் பிரதமராவது உள்ளூர விருப்பமில்லை. வாஜ்பேயிக்கு வை.கோ. நெருங்கிய நண்பர். இதுதவிர சேது சமுத்திரத் திட்டம் போன்றவையும் இலங்கை அரசுக்கு பிடிக்காத விஷயங்கள்.

புலிகள் தொடர்பாக இலங்கை அரசு விடுத்த பல கோரிக்கைகளை வாஜ்பேய் அரசு எதிர்கொண்ட விதமும் இலங்கை அரசுக்கு உள்ளூர எரிச்சல்தான். பாக்கு நீரிணையில் கூட்டு ரோந்துக்கும் இந்தியா உடன்படவில்லை.

இதனைவிட புலிகளுக்கு ஆயுதக்கப்பல் வந்த விடயம் வாஜ்பேய் அரசுக்கு அரசல் புரசலாகத் தெரியும் என்றும் இலங்கை அரசு சந்தேகிக்கிறது.

இவற்றையெல்லாம் உத்தேசித்தே சோனியா பிரதமராவதை இலங்கை அரசு ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

இதனை உணர்ந்தே, சந்திரிக்கா அம்மையாரிடம் தன்னைப் பற்றி உள்ள அதிருப்தியைத் தணிக்கும் வாய்ப்பாகப் பயன்படுத்த இந்தியாவுக்குப் பறந்தார் சுரேஸ். சோனியாவுக்கு ஆதரவாகவும், ஈழகோரிக்கைக்கு எதிராகவும் கருத்துக் கூறியுள்ளார். அதனை மறக்காமல் இலங்கை வானொலிகளுக்கும் கொடுத்து விளம்பரப்படுத்தினார். எனினும் தனது பெயரில் அறிக்கை விடவில்லை. அப்படிவிட்டால் இரகசிய விஜயம் வெளியே தெரிந்து போகுமே!

உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். தலைவர்களோ பதமானவர்கள், இதமானவர்கள், பிரயோசமானவர்கள் என்கின்ற நற்பெயர்களை ஆட்சியாளரிடம் பெறுவதற்கு ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். இதுதான் இன்றைய தமிழ்க் கட்சிகளது அரசியல்.

உண்மைத் தொடர்

அதிர் இடி 78

# இடி அமீன்

**கடந்தவாரம்**

**அமீனது வாகனம்**
**மர்ம வாகனம் ஒன்றினால்**
**மோதப்படுகிறது.**
**அமீன் வேறு வாகனத்தில்**
**சென்றதால் உயிர் தப்புகிறான்.**
**அமீனது சந்தேகம்**
**நாலாவது மனைவியான**
**மெடினாமீது பாய்கிறது.**

**இனி....**

அரச நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு முன்னர் அதுபற்றி மெடினாவிடம்தான் அமீன் கூறியிருந்தான்.

"எதிரிகள் உங்களுக்கு அதிகமாகிவிட்டனர். அதிகமாக வெளியே செல்லாதீர்கள். நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்வதையும் நிறுத்திக் கொள்வது நல்லது!" என்று மெடினா கூறினாள்.

அவளது பின்புறத்தில் கிள்ளி குறும்பாகச் சிரித்தான் அமீன். "பரவாயில்லையே என் மீது உனக்கு இத்தனை அக்கறை இருக்கிறதே!" என்றான்.

"உங்களுக்கு எப்போதுமே என்னைப் பற்றி இளப்பமான விளக்கம்தான்!" என்று மெடினா சிணுங்கினாள்.

**"நீ சிணுங்குவதே எத்தனை அழகாக இருக்கிறது தெரியுமா? அப்படியே உன்னைத் தூக்கிக் கொண்டுபோய், கட்டிலில்** எறிந்து..." என்று தொடர்ந்தவனை இடைமறித்து, "கடவுளே இன்னுமா.. மேன்மை தங்கிய உத்தமரே எனக்கு ஓய்வு தேவை!" என்று பயந்தவள்போல அபிநயம் செய்தாள்.

மெடினா தன்னைக் கட்டிலில் சந்திக்க பயப்படுவது அமீனுக்கு சந்தோசமாக இருந்தது. திருப்தியாக இருந்தது. கர்வமாக இருந்தது. அதே கர்வத்தோடு அவளை இழுத்து ஆவேசமாக அவளது உதடுகளைக் கவ்வி முத்தமிட்டான்.

விடைபெறும்போது, **"பயப்பிடாதே மெடினா; இன்று நிகழ்ச்சிக்கு செல்லும் போது போதிய பாதுகாப்புடன்தான் போவேன்!"** என்று கூறிவிட்டுக் கிளம்பினான்.

மீட்ட நினைவுகளை நிறுத்திவிட்டு, மெடினாமீது கோபத்தை வளர்த்தான் அமீன்.

ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றதும், நேராக மெடினாவின் விடுதிக்கு விடுவிடுவென்று சென்றான். பின் தொடர்ந்த மெய்க்காப்பாளர்களை, **"வரவேண்டாம்!"** என்று சைகை காட்டி விட்டுத்தான் மெடினாவின் விடுதிக்குள் புகுந்தான்.

அப்போதுதான் மெடினா உணவு அருந்திக் கொண்டிருந்தாள்.

புயல்போல வரும் அமீனும், அவன் முகத்தில் தெரிந்த பயமுறுத்தும் குரூரமும் கண்டதும், சாப்பாட்டை அப்படியே விட்டு பதற்றமாய் எழுந்தாள்.

அதற்குள் அவளை நெருங்கி விட்ட அமீன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அவளது முடியைப் பற்றிப் பிடித்து தர தரவென்று இழுத்துக் கொண்டு சென்று, சுவரோடு அவள் தலையை மோதினான்.

அவள் மண்டை உடைந்து போனது. இரத்தம் வழியத் தொடங்கியது. அவளுக்கு என்ன ஏது என்று புரியவில்லை.

முகமெல்லாம் இரத்தத்தில் தோய்ந்து, பார்க்கவே பயங்கரமாக இருந்தாள். அவளுக்குப் பயங்கரமாக வலித்தது.

"ஏன்.. ஏன்..." என்று தலையைப் பிடித்துத் துடித்தபடி கேட்டாள்.

**"என்னடி, ஒன்றுமே தெரியாத கன்றுக்குட்டியாடி நீ? என்னைப் பற்றியே எதிரிகளுக்கு தகவல் கொடுத்தாயே; நாயே! யாருக்கடி கொடுத்தாய், அடியே, உன்னை நம்பினேன், துரோகமா செய்கிறாய்? தொலைந்து போ! நாயே, உன்னை உயிரோடு சமாதி கட்டப்போகிறேன், ஆம், இன்றுதான் உன் இறுதி நாள், சாகப்போகிறாய்! 'கே' மாதிரி துண்டு துண்டாகச் சாகப் போகிறாய்!"** என்று அமீன் மளமளவென்று இரைந்தான்.

இரைந்தபடியே அவளை காலால் உதைத்துத் தள்ளினான்.

"என்னைக் கொல்வதென்றால் கொன்றுவிடுங்கள். ஆனால் எனக்கு எதுவுமே தெரியாது. தெரியாது. உண்மை ஒருநாள் தெரியத்தான் போகிறது. அப்போது.. அப்போது... வருத்தப்படுவீர்கள்!" என்று கூறியபடியே மெடினா மயங்கிப் போனாள்.

அமீனுக்கு இப்போது கோபம் குறைந்திருந்தது. சட்டென்று வெப்பநிலை இறங்கிவிட்டது.

மெடினாவை வீணாகச் சந்தேகப்பட்டு விட்டோமோ என்று திடீர்க் கவலை ஒன்று தோன்றி மறைந்தது.

அடிபட்ட கன்றுக்குட்டி மாதிரி இரத்தத்தில் தோய்ந்து கிடந்தவளைப் பார்க்க அமீனுக்கு மூர்க்கம் இறங்கி விட்டது.

முலாகோ மருத்துவ மனையுடன் தொடர்புகொண்டு தலைமை டாக்டரை மாளிகைக்கு வருமாறு உத்தரவிட்டான்.

இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. துணி ஒன்றை இரண்டாகக் கிழித்து அவளது இரத்தத்தை நிறுத்தக் கட்டுப் போட்டான்.

அமீனின் மனதிலும் ஒரு ஓரத்தில் ஈரம் இருக்கிறது என்பதை அரிதாக வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

டாக்டர் பதறியடித்து ஆம்புலன்சில் வந்திறங்கினார். ஜனாதிபதி மாளிகைக்கு ஆம்புலன்ஸ் கூவிக்கொண்டு வந்து சேர்ந்ததால் பாதுகாவலர்களும், ஊழியர்களும் விவரம் புரியாமல் அரண்டு நின்றார்கள்.

மெடினாவை பரிசோதித்த டாக்டர் உடனடியாக முதலுதவி செய்துவிட்டு, அமீனை தயக்கமாக ஏறிட்டார்.

**"என்ன?"** என்று டாக்டரின் தயக்கப் பார்வைக்கு விளக்கம் கேட்டான் அமீன்.

"எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும். மருத்துவமனைக்குக் கொண்டுபோக வேண்டியிருக்கும்!" என்றார் டாக்டர்.

**"ஏற்பாடு செய்யும்!"** என்றான் அமீன். அப்போதுதான் கவனித்தான் அவனது மணிக்கட்டில் வலித்தது. கோபத்திலும் பின்னர் தடுமாற்றத்திலும் வலி தெரியவில்லை.

மெடினாவை ஓங்கி அடித்தபோது, கண்மண்தெரியாத கோபத்தில் மணிகட்டு இசகு பிசகாக எங்கோ பட்டு உடைந்துவிட்டது.

மெடினாவுக்கு அடித்த அடி நழுவிச் சுவரில் பட்டிருக்க வேண்டும் என்று புரிந்தது.

மருத்துவமனைக்கு மெடினாவுடன் அமீனும் பாதுகாவலர்கள் புடைசூழச் சென்றான். மருத்துவமனை எங்கும் ஒரே பதற்றம் ஆக்கிரமித்துக் கொண்டது.

மெடினாவுக்கு சிகிச்சை நடக்கும்போது அமீனுக்கும் வலது கை மணிகட்டில் பிளாஸ்டர் போடப்பட்டது. சில நாட்களுக்கு கையை அசைக்கக் கூடாது என்று டாக்டர்கள் ஆலோசனை கூறினார்கள்.

"மெடினா சில நாட்கள் மருத்துவமனையில் இருக்கட்டும்!" என்று டாக்டர் கூறியதை அமீன் ஏற்கவில்லை.

**"பாதுகாப்பு பிரச்சனை இருக்கிறது. என் விரோதிகள் அவளுக்கும் கேடு செய்ய நினைப்பார்கள்!"** என்று கூறிய அமீன் மெடினாவை பாதி மயக்க நிலையிலேயே தூக்கி காருக்குள் போட்டுக் கொண்டு சென்று விட்டான்.

அமீன்தான் தன் மனைவியைத் தாக்கி



விட்டான் என்ற கதை பரவினால், ஏற்கனவே கேயின் மரணத்திற்கும் தன்மீது சந்தேகம் ஏற்படலாம் என்று அமீன் கருதினான்.

அதனால்தான் மெடினாவை உடன் அழைத்துப் போய்விட்டான்.

மாளிகைக்குச் சென்றதும் மெடினா வலியால் முனகிக்கொண்டு கிடந்தாள். முலாகோ மருத்துவமனையோடு தொடர்பு கொண்ட அமீன் மளமளவென்று விடுத்த உத்தரவுகள் அடுத்த ஒரு மணிநேரத்தில் நிறைவேறியபோது, ஜனாதிபதி மாளிகைக்குள் குட்டி மருத்துவனை ஒன்றே உருவாகி விட்டது.

முலாகோ மருத்துவமனையில் இருந்த பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் பல அங்கு வந்து சேர்ந்துவிட்டன. அதனால் சத்திர சிகிச்சைக்குரிய நோயாளர்கள் பலர் அவதிப்படவேண்டியதாகியது.

பிரதான டாக்டர்கள் இருவரும், தாதிகள் நான்குபேரும் ஒருவார காலமாக ஜனாதிபதி மாளிகையில் மெடினாவைக் கவனித்தபடி இருந்தனர்.

தாதிகளில் ஒருத்திமீது அமீனின் பார்வை பட்டுவிட்டது. அவள் மிகச் செழுமையாக இருந்தாள். பளபளவென்று மாம்பழம் போன்ற அவள் கன்னங்களைப் பார்க்க அமீனுக்குள் கள்வெறி கிளர்ந்தது.

தன் மணிக்கட்டுக்கு மருந்து கட்டுவதற்கு அந்தத் தாதியை அனுப்புமாறு டாக்டருக்கு கூறினான்.

## தருவது ரசிகன்

குறிப்பிட்ட தாதியை குறிவைத்து அமீன் அழைத்ததுமே டாக்டருக்கு விஷயம் புரிந்து விட்டது.

எப்படி மறுக்க முடியும்? தாதியும் அமீனும் பட்டபாடு என்று முடிவு செய்துகொண்டு, குறிப்பிட்ட தாதியை அமீனிடம் அனுப்பினார்.

**"மணிக்கட்டுக்கு மருந்து போடுவதை பின்னர் பார்க்கலாம். முதலில் என் மனதுக்குக் கட்டுப் போடு!"** என்று காமம் பொங்கச் சிரித்தான் அமீன்.

தாதிக்கும் அமீன்மேல் சபலம் இருந்தது. நாட்டின் அதிபருடன் படுக்கையைப் பகிர்வது கௌரவம் என்று நினைத்தாள் போலும். அழைப்பை ஏற்கும் குறிப்போடு கோணிப் புன்னகைத்தாள்.

**"வா, பக்கதில் வா, அமர்ந்துகொள்!"** என்று தன் மடியைக் காட்டினான். அவள் தயங்குவதுபோல- ஆனால் நெருங்கினாள்.

அவளைக் கைகளால் சுற்றி வயிற்றில் அழுத்தி மடியில் இருத்தினான்.

**"இன்று ஒரு கையால்தான் உன்னைச் சமாளிக்க வேண்டும். ஒரு கை போதுமா?"** என்று அமீன் கேட்டதற்கு அவள் களுக்கென்று சிரித்து அமீனின் மார்போடு முதுகைச் சாய்த்துக் கொண்டாள்.

ஒரு கைதான் இருக்கிறது என்றவன், ஆசை மேலீட்டால் இரு கைகளாலும் அவளைக் கையாண்டான். மணிக்கட்டு வலி அப்போது தெரியவில்லை.

மறுநாள்தான் தெரிந்தது. டாக்டர்களது ஆலோசனையை மீறி மணிக்கட்டுக்கு வேலை கொடுத்ததால், உடைந்த எலும்பு ஒட்டிக் கொள்ள பல நாட்கள் சென்றன.

பழைய நோவாக மாறி தினமும் வலி எடுத்துக்கொண்டிருந்தது. அமீன் டாக்டர்களைத் திட்டித் தீர்த்தான்.

**"என்ன படிப்பு படித்திருக்கிறீர்கள்? மணிக்கட்டுக்குக்கூட முறையாக சிகிச்சை செய்ய தெரியவில்லையே. நீங்கள் உண்மையாகவே டாக்டர்கள்தானா? எனக்கென்னவோ சந்தேகம்தான்?"** என்று அமீன் சொல்ல, டாக்டர்களுக்கு பயத்தில் உதறல் எடுக்கும்.

வடகொரியாவில் இருந்து மருத்துவர்கள் பலரைக் கொண்ட தூதுக்குழு ஒன்று கம்பலாவுக்கு வந்திருந்தது.

அந்த டாக்டர் குழுவிடம் தன் கையைக் காண்பித்து பரிசோதித்தான் அமீன்.

எக்ஸ்ரே எடுத்துப் பார்த்போது முறிந்து தனியாகப் போயிருந்த துண்டு எலும்பு ஒன்று சேராமல் சதைக்குள் புகுந்து கிடப்பது கண்டறியப்பட்டது.

மறுபடி பிளாஸ்டர் போட்டார்கள். ஏற்கனவே போட்ட பிளாஸ்டரை தாதியுடன் சல்லாபம் கொண்டபோது பிரித்து எறிந்து விட்டான்.

அவள் மறித்தபோது, **"எந்த வலியும் என்னைத் தாக்காது. இடி அமீன் என்றால் இரும்பு. அந்த இரும்பின் வலிமையை இப்போது நீயும்பார்க்கத்தானே போகிறாய்!"** என்று பயங்கரமாக சிரித்தபடி, பிளாஸ்ரரை பிரித்து வீசிவிட்டு, அவளை கட்டிலில் சரித்து மான்மீது பாயும் வேட்டை நாய்போல அவள்மீது பாய்ந்தான்.

இப்போது மறுபடி பிளாஸ்ரர் போட்ட டாக்டர்கள், கையை அசைக்காது இருக்குமாறு கூறினார்கள்.

**"நான் நாட்டின் ஜனாதிபதி. எதிரிகளும் இருக்கிறார்கள். என் உறுப்பில் ஒன்று ஆடாவிட்டால்கூட செத்ததாக முடிவு கட்டிப் புதைத்துவிடுவார்கள். தான் தூங்கும்போது கூட கை, கால்களை ஆட்டிக் கொண்டுதான் தூங்குவேன்"** என்றுகூறிவிட்டு டாக்டர்களைப் பார்த்தான்.

அமீன் கேலியாகக் கூறுகிறானா, உண்மையாகவே கூறுகிறானா என்று இனம் கண்டு கொள்ள முடியாததால் டாக்டர்கள் தங்கள் முகபாவம் தெரியாதபடி முகத் தசைகளை இறுக்கிக் கொண்டு சிலைகள்போல அமர்ந்திருந்தனர். அவர்களை பார்வையால் தடவிவிட்டு, சட்டென்று உதடுகள் பிரியச் சிரித்தான் அமீன்.

அமீன் சிரிக்கும்போது சிரிக்காது இருப்பதும் மரியாதைக் குறைச்சலாகக் கருதப்படும். எனவே தாமதமானதால் சிரிப்பு வராதபோதும், வலிய வரவழைத்து புன்னகையை உதிர்த்தார்கள். அதிபரின் முன்பு உண்மையாகவே சிரிப்பு வந்தால்கூட சத்தம்போடாது வாயைக் கையால் மூடியபடி சத்தம் போடாமல் தான் சிரிக்க வேண்டும். அதுதான் சம்பிரதாயம்.

அமீனது மணிக்கட்டு குணமாக முன்பே மெடினா ஒருவிதமாகத் தேறி எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டாள்.

இக் கட்டத்தில்தான் அமீனின் வாழ்க்கையில் இன்னொரு அழகி பிரவேசித்தாள். அவளை கண்டவுடனேயே, முதல் பார்வையிலேயே அமீன் தன் மனதுக்குள் குறித்துக் கொண்டான்,

**"இவளும் என் மனைவி"**

அவளைப் பிடிக்க, தன் பிடிக்குள் இழுக்க, அழகான வலை ஒன்றை விரித்தான் அமீன்.

**(இடி தொடரும்)**

# சோனியா கரணம்



பதவி ஆசை அறவே இல்லாதவர்; தேடி வரும் பதவிகளைத் துச்சமாக மதிப்பவர் என்றெல்லாம் புகழப்பட்டவர் சோனியாகாந்தி.

அதெல்லாம் இன்று நம்பமுடியாத பழைய கதையாகிவிட்டது.

பதவிக்காக அலையோ அலையென்று அலைகின்ற சாதாரண அரசியல்வாதிதான் சோனியாவும்.

மாபெரும் ஊழல் சக்கரவர்த்தினி என்று வர்ணிக்கப்படும் ஜெயலலிதாவோடு சோனியா கூட்டுவைத்துக் கொண்டபோதே அவரது இமேஜ் சரிந்து போனது.

பாரதிய ஜனதா அரசைக் கவிழ்த்து விட்டு தானே பிரதமராகத் துடித்தபோதும் பெரும்பான்மை ஆதரவு இருப்பதாக இந்திய ஜனாதிபதியிடம் உண்மைக்கு மாறான தகவலைக் கூறியபோதும் 'சோனியா நீயுமா?' என்று பலரும் கசந்து போனார்கள்.

தற்போதைய தேர்தலில் தனது கணவர் ராஜீவின் தொகுதியான அமேதியில் போட்டியிட்டால் வெற்றி கிட்டாது என்பதால் புதுத் தொகுதி தேடினார்.

கர்நாடகத்தில் பெல்லாரி தொகுதியில் அவர் போட்டியிடப்போகும் செய்தி இறுதி வரை இராணுவ இரகசியம் போன்று பாதுகாக்கப்பட்டது.

அந்தளவுக்கு போட்டிக்கு பயந்த முதலாவது அரசியல் தலைவி சோனியாவாகத்தான் இருக்கமுடியும்.

அவ்வாறிருந்தும் பெல்லாரியில் போட்டி பலமாக இருப்பதால் மகள் பிரியங்கா, மகன் ராகுல், மருமகன் றொபேட் வதேரா ஆகியோரையும் வாக்கு வேட்டையாட களத்தில் இறக்கினார் சோனியா.

'அரசியலே வேண்டாம்' என்று ஒரு காலத்தில் கணவர் ராஜீவின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தியவர், இன்று தானும் இறங்கியதோடு, குடும்பத்தையும் குதிக்கவைத்து வாக்குத் தேடுகிறார்.

தனி ஆட்சி அமைப்போம். கூட்டணி ஆட்சி கிடையாது என்று முதலில் கூறினார். பின்னர் கூட்டணி ஆட்சிக்கும் தயார் என்று அறிவித்தார். பின்னர் மற்றொரு கரணம் அடித்து தனி ஆட்சிதான் அமைப்போம் என்றுள்ளார்.

பதவிக்கு வருவதற்கு முன்பே இத்தனை கரணம் அடித்தால், பதவியும் கிடைத்துவிட்டால் அதனைத் தக்கவைக்க என்னவெல்லாம் செய்வாரோ?!

காங்கிரஸ் கட்சி சோனியா சரணம் என்கிறது. சோனியாவோ கரணம் அடிக்கிறார்.

# சர்ச்சை ஆசாமி

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜோன் பக்காய் என்பவர் ரொம்ப வம்பான ஆசாமி. கிறுக்குத்தனமான காரியங்கள் செய்து பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்.

பிரபல தலைவர்களை அம்மணமாக வரைந்தும், அவர்களது படுக்கையறைக் காட்சிகளை சிற்பமாகச் செய்தும் சர்ச்சைகள் மூலம் பிரபலம் பெற்றார். பல தடவை இதற்காக சிறை சென்றும் இருக்கிறார்.

தற்சமயம் அவர் செய்துள்ள திருப்பணியும் சர்ச்சையை புயலாகக் கிளப்பியுள்ளது.

பல துறைகளில் புகழ்பெற்ற பிரமுகர்கள் உபயோகித்த உள்ளாடைகளை சேகரித்து கண்காட்சி வைத்திருக்கிறார்.

மன்னர்கள், அரசிகள், அரசியல் தலைவர்கள், நடிக நடிகையர், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரிடம் பெரிய சேகரிப்பு நடத்தி இந்தக் கண்காட்சியை நடத்தியுள்ளார்.

"இதனை ஆபாசமாக சிலர் நினைக்கலாம். ஆனால் இவற்றைச் சேகரிக்க நான் பட்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும்!" என்கிறார் ஜோஜ் பக்காய். வினோதமான ஆசாமிதான்.

# தற்கொலைக்குத் தடை



ஆர்ஜென்டினாவில் பியூனோஸ் ஏர்ஸ் என்னும் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தற்கொலை செய்து கொள்வதற்காக நீர்த்தேக்கம் ஒன்றுக்குச் சென்றாள். தனது கழுத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டு நீருக்குள் குதிக்கத் தயாரானாள்.

இதனைக் கண்ட மிராண்டா என்ற பொலிஸ்காரர் அந்த பதினெட்டு வயதுப் பெண்ணை கீழே வரச் சொல்லிக் கெஞ்சினார். அவளோ பிடிவாதமாக இருந்தாள்.

அவளிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தபடியே அவள் கட்டியிருந்த கயிற்றின் மறுமுனையை தம்மைச் சேர்த்துக் கட்டிக் கொண்டார். கூடவே தன்னுடைய கையிலிருந்த கைவிலங்கால் தன்னுடைய கைகளைப் பூட்டிக்கொண்டுவிட்டார்.

"இளம் பெண்ணே இதோபார், உன்னைக் கட்டியிருக்கும் கயிற்றின் மறுமுனையில் என்னைக் கட்டிக் கொண்டு விட்டேன். நீரில் விழுந்தாயெனில் கூடவே சேர்ந்து நானும் விழுவேன்.

நீரில் நீச்சலடிக்க முடியாமல் கைகளுக்கும் விலங்கு போட்டுக்கொண்டு விட்டேன். நீரில் விழுந்தாயென்றால் கூடவே சேர்ந்து நானும் விழுவேன். நீச்சல் அடிக்க முடியாதபடி விலங்கும் போட்டுள்ளேன். நான் செத்துப்போனால் என்னுடைய இரண்டு குழந்தைகளைக் காப்பாற்ற நாதி கிடையாது!" என்று கூறினார்.

இளம் பெண் மனம் இரங்கி கீழே இறங்கி வந்துவிட்டாள். உயிருக்குத் துணிந்து நாடகமாடி இளம்பெண்ணைக் காப்பாற்றிய பொலிஸ்காரரை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

# மக்கள் தீர்ப்பு

தென்னாபிரிக்காவில் சமூக விரோதிகள் தொல்லை ஒரு பெரும் பிரச்சனை. அங்கு ஜோகன்ஸ் பேர்க்கில் சமூக விரோதி ஒருவன் கைதுசெய்யப்பட்டான். ஜோன்ஸ் மனமேளா என்பது அவனது பெயர்.

தன்னைப் பிணையில் விடுமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பித்தான். கொலைக் குற்றத்தில் இருந்து தப்புவதற்கும் பல வழிகள் வைத்திருந்தான்.

அவனுக்கு பிணை கிடைக்கப் போவது தெரிந்ததும், அவன் வசிக்கும் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கூடி ஆலோசித்தனர். தமது செலவில் பிணை எடுக்க முன் வந்தனர். சிறையைவிட்டு வெளியே வந்தவனுக்கு அமோக வரவேற்பு. பெருமிதமாக நடை போட்டான். கொஞ்சத் தூரம் சென்றதும் பொதுமக்களில் சிலரே அவனை கத்தியால் குத்தினார்கள்.

சரிந்து விழுந்தவனின் கழுத்தில் எரியும் டயரைப் போட்டார்கள். பலர் அவன் மீது பெற்றோலை ஊற்றினார்கள். கருகிச் செத்தான் சமூக விரோதி.

பலரைக் கொலை செய்து, மக்களை மிரட்டி, கப்பம் வசூலித்து கொட்டம் அடித்தவனை சட்டம் நெருங்கவில்லை. இறுதியில் மக்கள் தீர்ப்பளித்தனர்.

# தமிழ் ஜனாதிபதி

சிங்கப்பூர் அதிபர் எஸ்.ஆர். நாதனுக்கு எழுபத்தைந்து வயது. ஆனாலும் இளைஞர்களோடு சவாலுக்கு நிற்கும் சுறுசுறுப்பு.

சிங்கப்பூரில் ஒரு இந்தியர்- அதுவும் ஒரு தமிழர் ஜனாதிபதியாவது இதுவே முதல்முறை.

சிங்கப்பூரில் சீனர்கள், மலாய்க் காரர்கள் இந்தியர்கள் எல்லோரும் சமவாய்ப்புடன் வாழ்கிறார்கள். யார் வேண்டுமானாலும் அரச முக்கிய பதவிகளில் அமரலாம். இன பேதம் இல்லாத நாடு.

எஸ்.ஆர்.நாதன், உமி என்னும் வங்காளப் பெண்ணை திருமணம் செய்திருந்தார். இவர்களது மகள் ஒரு சீனரைத் திருமணம் செய்துள்ளார்.

அதிபர் பதவிக்கு மேலும் இரண்டுபேர் களத்தில் குதித்தனர். ஆனால் சிங்கப்பூர் அரசு நாதனையே தகுதியானவர் என்று கருதியதால், போட்டியின்றித் தெரிவானார்.

சிங்கப்பூரில் அதிபர் பதவி நம்நாட்டு அதிபர் பதவி போல அதிகாரங்கள் கொண்டதல்ல. எனினும் தற்போது சில அதிகாரங்கள் அதிபர் பதவிக்கு வழங்கப்பட்டுள்ளன.




இலங்கையை சிங்கப்பூராக மாற்றப் போவதாக ஜே.ஆர் போன்றவர்கள் கூறியிருந்தனர். அவர்கள் சிங்கப்பூரின் வளர்ச்சியைக் கண்டு அவ்வாறு கூறினார்களே தவிர, அங்குள்ள இன சமத்துவத்தைக் காணத்தவறிவிட்டார்கள்!

## கூண்டே அல்ல



← என்னடா இது, பறவைக் கூண்டுக்குள் இவரது முகம் தெரிகிறதே என்று விழிகள் விரிய, புருவங்கள் மேலே எழுகின்றனவா! இது பறவைக் கூண்டல்ல. பறவைக் கூண்டு போலவே முகம் பார்க்கும் கண்ணாடியை வடிவமைத்துள்ளார் இந்த மலேசிய கலைஞர் லாங்தியன்ஷி. அதுவும் சாதாரணமாக அல்ல, 12 கிலோ தங்கத்தைக்கொண்டு உருவாக்கியுள்ளார். விஷயகாரர்தான்!



## இறக்கையில் நடை

← சாகசம் செய்வதற்கு மனதில் உறுதி இருந்தால் மட்டும் போதாது. மரணத்தை நினைத்து பயமும் கூடாது. சாவோடு விளையாடும் சாகசச் செயல்தான் இங்கு காணப்படுகிறது.

வானில் பறக்கும் விமானத்தின் இறக்கைகள் நடுவே அங்குமிங்குமாக ஒருவர் நடக்கிறார் பாருங்கள். யப்பாவ்! இந்த மயிர்க்கூச்செறியும் சாகச வீரர் பெயர் டிரெசா ஸ்டோகீஸ். சமீபத்தில் ஐரோப்பிய விமான சாகசக் காட்சிப் போட்டியில்தான் இந்த சாகசம் செய்யப்பட்டது. கரணம் தப்பினால் மரணம் என்பது சர்வநிச்சயம். அப்பீல் இல்லை என்பார்களே. ஆள் சற்று சமநிலை தவறி கால் பிசகினாலும் அப்பீல் இல்லைத்தான்! ▪

## தாக்குதல்

→ பணம் கொடுத்து வாங்கிய பொருள் பழுதாகிப் போனால் பற்றிக்கொண்டுவரும். கடைக்காரர் மீதும் காட்டமான கோபம் எரியும்.

இங்குள்ள காட்சியும் அப்படியானது தான்: இரண்டாம் உலகப்போரில் ஒரு முட்டை ஆறு டொலருக்கு போனது. (அப்போது பெரிய தொகை)

அப்படி வாங்கியும் முட்டை கூழ் முட்டையாகிப்போனதால் கடும் கோபமுற்ற பெண்மணி, கடைக்கார பெண் மீது முட்டைகளால் தாக்குதல் நடத்துகிறார். ■





## தகவல் பெட்டி

## அளப்பு

↑ மாட்டுக்கு பல்லைப் பிடித்துப் பார்த்து வயதைக் கண்டுபிடித்துவிடலாம். அதற்காக தானமாகத் தரும் மாட்டுக்கு பல்லைப்பிடித்துப் பார்க்கக் கூடாது என்றும் பெரியவர்கள் நாகரிகம் கூறிப்போயிருக்கிறார்கள்.

இங்கு இவர் அளவுகோல் கொண்டு அளப்பது காண்டாமிருகத்தின் கொம்பை. காண்டாமிருகத்தின் வயதை கண்டறிய வேண்டுமானால் கொம்பின் வளர்ச்சியை வைத்தே கூறிவிடலாம். அதுதான் படு சிரத்தையாக அளக்கிறார்.

வயதைக் குறைத்துக் கூறும் மனிதர்களது உண்மை வயதைக் கண்டுபிடிக்க இப்படி ஏதாவது வழி இருக்கக் கூடாதா?


## பாசமலர்

↓ வயிற்றில் ஒரு தலை என்று மிரளாதீர்கள். மழை கொட்டுகிறது. குட்டித் தங்கையை மழையில் இருந்து காப்பாற்ற தன் மழைக்கோட்டுக்குள் வைத்திருக்கிறான் சிறுவன். இவன் பாசமலர் சிவாஜிபோல பாசமுள்ள அண்ணனாக்கும்.

விசேஷமான படப்பிடிப்புக்காக இப் புகைப் படம் பாராட்டுப் பெற்றுள்ளது. ■



## நீர்வாய்



→ சுழியோடும் நீச்சலில் சூரர் இவர். தரைக்கு வந்ததும் தன்னை ஒரு நீர் பீய்ச்சியடிக்கும் சிலையாக கற்பனை செய்து கொள்கிறார்.

வாய்கொள்ளுமளவுக்கு நீரைத் தேக்கி பீய்ச்சியடிக்கிறார். மிக நீளமான நீரைப் பீச்சுவதில் இவர் வாயை வெல்ல வேறு வாய் கிடையாதாம். நீங்களும் வாய்க்குள் தண்ணீரைத் தேக்கிப் பீய்ச்சிப் பாருங்கள். இவ்வாறு நீளமாகப் பீய்ச்சியடிப்பது கடினம் என்பது தெரியும். ■

## குறும்பு



↑ குறும்புகள் இல்லாத வாழ்க்கை ஏது? அதிலும் சில குறும்புகள் மறக்க முடியாதவையாகவும் இருப்பதுண்டு. இங்கு பாருங்களேன், பெண் சாரணிய இயக்க அணிவகுப்பு ஒன்றில் எடுக்கப்பட்ட குறும்புக் காட்சி.

பின்புறம் கமராவோடு ஒருவர் நிற்பதை அறியாது குறும்புக்கார சாரணிய பெண் ஒருவர் சக பெண்ணின் பின்புறத்தில் உதை கொடுக்கும் காட்சி. இதனைக் கச்சிதமாக தன் கமராவுக்குள் புகுத்தியவரும் குறும்புக்காரர்தான்.

# சகோதரிக்காக சிபாரிசு செய்த நடிகை

தற்போது தமிழில் மவுசு இல்லாத மூன்றெழுத்து நடிகை அவர். அவரது சகோதரி இப்போது நடித்து வருகிறார். சகோதரிக்கு தமிழ்ப்பட உலக முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோரது சபலப்புத்தியைப் பற்றி விலாவாரியாக விளக்கம் கொடுத்திருக்கிறார்.

இதனால்தான் சகோதர நடிகை தெளிவு கழிவோடு பக்குவமாக, பதமாக நடந்து கொண்டு வாய்ப்புக்களைக் கவ்வி வருகிறார். அதுமட்டுமல்ல, மூன்றெழுத்து வாரிசு நடிகரிடம் அக்காவே நேரடியாக தொடர்பு கொண்டாராம்.

நடிகரோ அக்காவின் பரம விசிறி. நேரில் கண்டதும் ஜொள்ளுவிட்டிருக்கிறார். "சின்னப் பையனாக இருக்கிறீர்களே. உங்களை மாதிரி இளைஞர்களை எனக்குப் பிடிக்கும்" என்று நடிகை கூறியதும், நடிகர் உருகிப்போனாராம். நடிகரின் உதவியாளர்களும் அப்போது அங்கு இருந்தனர்.

உதவியாளர்களை நடிகை ஒருவிதமாகப் பார்க்க, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட நடிகர் உதவியாளர்களை சங்கடமாகப் பார்க்க, அவர்கள் அறையைக் காலி செய்தனர்.

அரைமணி நேரமாக நடிகையும் நடிகரும் அறைக்குள் பேசிக் கொண்டிருந்தனர். நடிகை என்னென்ன கற்றுக் கொடுத்தாரோ நடிகரின் முகம் பூரித்துக் கிடந்தது.

தனது அடுத்த படத்திலும் மூன்றெழுத்து நடிகையின் விருப்பப்படியே அவரது தங்கையுடன் ஜோடி சேர்ந்துள்ளார் நடிகர்.

நடிகரின் தந்தையாருக்கும் இந்த சமாச்சாரம் ஜாடைமாடையாகத் தெரியுமாம்.

தன்னைப் போலவே மகனையும் கட்டுப்பாட்டோடு நடிக்க வைக்க தந்தை நடிகர் முதலில் பிடிவாதம் காட்டினார்.

'சினிமாவில் பெண் வாடை ஆகாது' என்று போதித்துப் பார்த்தார்.

ஆனால் தற்போது மகன் போகும் போக்கில் விட்டுப்பிடிக்க முடிவு செய்து கண்டும் காணாமல் இருக்கிறாராம்.

***

## கன்னி ராசி

நட்சத்திரங்களில் ஒன்றின் பெயர் கொண்ட ஐந்தெழுத்து வாரிசு நடிகர் அவர். கூடவே நடிக்கும் நடிகைகளுடன் அவர் கும்மாளம் போடுவது பரகசியமான சங்கதி.

நடிகை ஒருவரை திருமணம் செய்த ஐந்தெழுத்து நடிகருக்கு பிள்ளைகளும் உண்டு. இன்னொரு திருமணமும் செய்து கொண்டிருக்கிறார்.

ரோஜாவோடு சம்பந்தப்பட்ட பெயர் கொண்ட படத்தில் நடித்தபோது நடிகர் போட்ட கும்மாளம் எல்லை மீறி விட்டது.

அப்படத்தில் நடித்த இரண்டு இளம் நடிகைகளையும் ஒரே நேரத்தில் கணக்குப் பண்ணிவிட்டார் நடிகர்.

இரு நடிகைகளுமே அண்மையில்தான் அறிமுகமானவர்கள். இருவருமே வாய்ப்புக்காக எதனையும் செய்யத் தயாரானவர்கள். ஒருவர் பெயர் இரண்டு எழுத்து. இன்னொருவர் பெயர் 'மா'வில் ஆரம்பித்து நான்கெழுத்து. இரு நடிகைகளையும் தன் ஆசைக்கு இணங்கவைத்து நாளுக்கு ஒருவர் என்ற ரீதியில் உல்லாசம் கண்டாராம் நடிகர்.

இருவருக்குமே தாங்கள் இருவரையும் நடிகர் உபயோகிப்பது தெரிந்ததால், நடிகரிடம் அதிக நட்பையும், நெருக்கத்தையும் சம்பாதிக்கப் போட்டி போட்டார்களாம்.

இதனைக் கண்ட படப்பிடிப்பு குழுவினர் சிலர் "பகிரங்கத்திலே நடிகரை இந்த உரசு உரசுகிறார்களே. தனியாக சந்திக்கும்போது என்னவெல்லாம் பண்ணுவார்களோ?" என்று பெருமூச்சு விட்டனர்.

ஐந்தெழுத்து நடிகருக்கு 'கன்னி ராசி' என்பது தமிழ்ப் பட உலகத்தினர் கொடுத்துள்ள சங்கேதப் பெயர்.

கௌசல்யமான நடிகை மட்டும்தான் நடிகரின் நடத்தை தாங்காது முகம் சுளித்தார். எனினும் தற்போது பணிந்து படிந்துவிட்டார். வேறு நடிகைகள் நடிகர் அழைக்காமலேயே அவர் வசம் வீழ்வதற்கு தயாராக இருந்தனர்.

நடிகரின் காதல் விளையாட்டுக்களில் சில நடிகைகளுக்கு தனி விருப்பமே உண்டு. அதனால் ஐந்தெழுத்து நடிகர் அழைக்காமலேயே தாமாகவும் நாடிப்போயிருக்கின்றனர்.



# பார்த்திபனுடன் ரம்பா–மீனா

பார்த்திபன் கதாநாயகனாக நடித்துள்ள 'நீ வருவாய் எ...' நன்றாகப் போகிறது. அதற்கு முன்னர் வந்த 'அந்தப்புர...' வரவேற்பு பெற்றது.

'ஹவுஸ் ஃபுல்' படத்தின் தோல்வியால் துவண்டிருந்த பார்த்திபனுக்கு மறுபடி தெம்பு வந்துள்ளது.

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' போன்ற வெற்... படங்களை தயாரித்த பட நிறுவனம் லட்சுமி மூவி மேக்கர்... இப்போது அவர்கள் புதிதாகத் தயாரிக்கும் படத்திற்கு 'உன்னருகே நானிருந்தால்' என்ற பாடல் வரியை பெயராகச் சூட்டியுள்ளனர். பாடல் வரிகளைப் பெயராக்குவதே தற்போதைய ஃபாஷ...

பார்த்திபன் கதாநாயகனாக நடிக்க, அவருடன் ஜோடிகளா... மீனா, ரம்பா இருவரும் திறமை காட்டப்போகிறார்கள்.

ஆனந்தராஜ், வடிவேலு, வையாபுரி, காக்கா ராதாகிருஷ்ணன், ஜெய்கணேஷ், பாத்திமாபாபு ஆகியோர் நடிக்கின்றனர்.

இவர்களோடு கௌரவ வேடத்தில் தோன்றி முழிக்க... போகிறார் பாண்டியராஜன்.

இயக்கம்: பிரபல இயக்குநர் ஆர்.செல்வா. இசை: தேவா...



## வைரப்பாடல்

சிங்கப்பூர் ஜனாதிபதியாக தமிழரான நாதன் பதவி வகிப்பது தெரியுமல்லவா. பதவி ஏற்ற நாதனிடம், "உங்களுக்குப் பிடித்த தமிழ்ப் பாடல் எது?" என்று கேட்கப் பட்டது.

"தஞ்சாவூரு மண் எடுத்து, தாமிர பரணி தண்ணிவிட்டு..." என்ற பாடல்தான் மிகவும் பிடிக்கும் என்று கூறினாராம். கவிஞர் வைரமுத்து எழுதிய பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## மினி சினி

♣ அறிமுகமான 'உன்னைத் தேடி' படத்திலிருந்து கடைசியாக வந்த 'ரோஜா வனம்' வரை இரண்டு நாயகிகளில் ஒருவராகவே நடித்த மாளவிகா, 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் தனிக் கதாநாயகியாக வருகிறார்.

♣ சத்யராஜின் 'மலபார் போலீஸ்' படத்தில் அறிமுகமான விஜயகுமாரின் தம்பி பரணிகுமார், தற்போது பிரசாந்த் கதாநாயகனாக நடிக்க பிரவீன் காந்த் இயக்கும் 'ஜோடி' படத்தில் நடித்து வருகிறார்.

♣ சாய்குமார் நடித்துள்ள கன்னடப்படமான 'அண்டர் வேர்ல்ட்' அதே பெயரில் தமிழில் மொழிமாற்றப்படுகிறது. இப்படத்தில் சாய்குமார் முதல் முறையாக இரட்டை வேடத்தில் நடித்துள்ளார்.

♣ இதுவரை நகைச்சுவைக் கதாநாயகனாக வலம் வந்த இந்தி நடிகர் கோவிந்தா, முதல் முறையாக 'ஷிகாரி' என்ற படத்தில் வில்லத்தனமான கதாநாயகனாக நடிக்கப் போகிறார்.

♣ கே. சுபாஷ் இயக்கும் 'ஏழையின் சிரிப்பில்' படத்தின் இரட்டை நாயகிகளில் ஒருவரான சங்கவி இப்போது அதில் நடிக்கவில்லை. இப்போது அவருக்குப் பதிலாக ரோஜா நடிக்கிறார்.

♣ விஜயகாந்த்-லைலா ஜோடியாக நடித்து தமிழில் சுமாராக ஓடிய 'கள்ளழகர்' தெலுங்கில் மொழிமாற்றப்பட்டுள்ளது. தெலுங்கில் இதற்கு 'மாத்ருதேசம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

♣ திருமணத்திற்குப் பின் 2 வருடங்கள் படங்களில் நடிக்காமல் இருந்த ஸ்ரீதேவி மறுபடி நடிக்கப்போகிறார். 'அந்தப்புரம்' பட இயக்குநர் கிருஷ்ணவம்சி இயக்கும் இந்திப் படத்தில்தான் ஸ்ரீதேவி நடிக்கவுள்ளார்.

♣ முரளி கதாநாயகனாக நடிக்கும் 'கண்ணுக்குக் கண்ணாக' என்ற படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் தயாளன். இவர் கே.எஸ். ரவிக்குமாரிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.

♣ சங்கீதா கன்னடத்தில் அறிமுகமான 'யாரே நீனு செலுவா' என்ற படம் வெற்றிகரமாக ஓடுவதைத் தொடர்ந்து, சங்கீதாவுக்குப் பல கன்னடப்பட வாய்ப்புக்கள் வந்துள்ளன.

♣ விஜயகாந்தின் மைத்துனர் தயாரிக்க, விஜயகாந்த் நடித்து வரும் 'வல்லரசு' படத்திற்கு முதலில் 'தாய் மண்ணே வணக்கம்' என்று பெயர் வைக்கப்பட்டு மாற்றப்பட்டது.

## தபுவுடன் காதல்

'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்திற்காக தபுவுடன் எகிப்து சென்று திரும்பியுள்ளார் அஜித்குமார்.

"சந்தனத் தென்றலை ஜன்னல்கள் தண்டித்தல் நியாயமா? காதலின் கேள்விக்கு கண்களின் பதில் என்ன மௌனமா? மௌனமா...!" என்று தொடங்கும் பாடல் காட்சிகள் எகிப்தில் படமாக்கப்பட்டன.

ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டில் இந்தக் காட்சிகள் படமாகின. இசை: ஏ.ஆர்.ரஹ்மான். இயக்கம் ராஜீவ் மேனன்.

மம்முட்டி, ஐஸ்வர்யாராய், அப்பாஸ் ஆகியோரும் இப்படத்தில் நடிப்பது தெரிந்த செய்திதானே.



சௌந்தர்யா

# விரலுக்கேத்த வீக்கம்

தமிழ்நாட்டில் திரையிடப்பட்ட அரங்குகளில் தொடர்ந்து ஓடி 50 நாட்களை தாண்டிவிட்டது விரலுக்கேத்த வீக்கம். சென்னையில் மட்டும் நான்கு திரையரங்குகளில் வெளியாகி 50 நாட்கள் ஓடிவிட்டது. இதுவே போட்ட முதலைவிட லாபம்தான்.

குறைந்த பட்ஜெட்டில் தயாரித்து வி.சேகர் இயக்கிய வெற்றிப் படங்கள் வரிசையில் இதுவும் சேர்ந்துவிட்டது.


படத்தில் லிவிங்ஸ்டன், குஷ்பு, வடிவேலு-கோவைசரளா, விவேக்-கனகா என்று மூன்று ஜோடிகள். இந்த மூன்று ஜோடிகளோடு கௌரவ ஜோடியாக நாசர்-ஊர்வசி ஜோடி. இவர்களிடையே கலகலப்பான ஜோடியாக உச்சத்தில் நிற்பது வடிவேலு-சரளா ஜோடிதான்.

ஆண்களும், பெண்களும் வேலைக்கு செல்வது பொருளாதார அவசியம். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவர் கருத்துக்கு மற்றவர் மரியாதை கொடுத்து நடக்க வேண்டும் என்பதை நகைச்சுவை கலந்த மருந்தாகத் தந்துள்ளார் வி.சேகர். (இந்த வி.சேகரும் நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகரும் ஒருவரல்ல.)

## காதோடு...

முன்னாள் வில்ல... பிரகாசமான நடிகர்... நட்புக் கடலில் வீழ்ந்து... நடிகை குடியிருக்கும் பீ... டிருக்கிறார். ஆனால்...

வெளிநாட்டில்... இப்போது முன்னால்...



# மும்பாய் புயல்

'காதலர் தினம்' படத்தின் மூலம் தமிழ்பட ரசிகர்களிடையே வரவேற்பு பெற்றுள்ளார் சோனாலிபிந்த்ரே.

இந்த மும்பாய் புயலை முதன் முதலில் தமிழ்ப்படத்தில் வீசவைத்தவர் மணிரத்னம். 'பம்பாய்' படத்தில் 'ஹம்மாஹம்மா' பாடல் காட்சியில் தோன்றி ஆடி ஜொள்ளர்கள் மனங்களையும் ஆடவைத்துவிட்டுப் போனார்.

கதாநாயகியாக கொண்டுவந்து நிறுத்தியுள்ள 'காதலர் தினம்', 'கண்ணோடு காண்பதெல்லாம்' இரண்டும் சோனாலிக்கு தமிழ்ப்பட உலகில் இடம் பிடித்துக் கொடுத்துள்ளன.

இதனால் தமிழ்ப்பட முன்னணி நடிகைகள் பலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது போலாகிவிட்டதாம்.

இந்த மும்பாய் புயலுக்கு முன்னால் தாங்கள் தாக்குப் பிடிக்க முடியுமா என்று மீனா, ரம்பா போன்றோர் கதி கலங்கிப் போயுள்ளனர். இன்னொரு மும்பாய் வரவான சிம்ரானும் தன் மண்ணிலிருந்து வந்துள்ள இந்தப் புயலிடம் ஜாக்கிரதையாகவே இருக்கிறார்.

சோனாலியின் அன்புக்கு பாத்திரமாகி அவரைப் பற்றி நல்லவிதமாக கூறுகிறார் நடிகர் அர்ஜுன். தனது சொந்தப் படம் ஒன்றிலும் சோனாலியைத் துணை சேர்க்க திட்டமிட்டுள்ளாராம் அர்ஜுன்.

**முகப்பில்**

☼ **சத்யராஜ்-குஷ்பு**
படம்: மலபார்போலிஸ்

**சோனாலி பிந்த்ரே**
படம்: காதலர் தினம் ☼

சினிமா விமர்சனம் நமது விமர்சனக்குழு

## பார்த்திபனுக்கு அஜீத்தின் கண்கள்

**45/100**

**படம்** : நீ வருவாய் என

**நடிப்பு** : பார்த்திபன், அஜித்குமார், தேவயானி, ரமேஷ் கண்ணா, வையாபுரி, ஜெய்கணேஷ்.

**இசை** : எஸ்.ஏ.ராஜ்குமார். **இயக்கம்** : இராஜகுமாரன்.

கிராமத்துக்கு வங்கி மனேஜராகவரும் பார்த்திபனை ஓடி ஓடிக் கவனித்து கரிசனை காட்டுகிறார் தேவயானி. அதனை காதல் என்று நம்பி தாய் தந்தையை வரவழைத்த தேவயானி வீட்டுக்கு கல்யாணம் பேசச் செல்கிறார் பார்த்திபன்.

இந்த இடத்தில்தான் திருப்பத்தை தூக்கி வைத்து கதைக்கு விறுவிறுப்புத் தருகிறார் இயக்குநர்.

பார்த்திபனின் கண்கள் அஜித்குமாருடையவை. விபத்தில் இறந்த அஜித்தின் கண்களை விபத்தில் பாதிக்கப்பட்ட பார்த்திபனுக்கு பொருத்துகிறார்கள்.

தேவயானியின் இராணுவக் காதலர் அஜித். தன் காதலரின் கண்கள் பார்த்திபனிடம் இருப்பதால், அந்தக் கண்களை பார்ப்பதற்காகவே பார்த்திபனை சுற்றி வருகிறார் தேவயானி. இதுதான் கதை.

அஜித்குமார் வந்த பின்னர்தான் படத்தில் சூடுபிடிக்கிறது. மனிதர் கலாதியாக நடித்துவிட்டுப் போகிறார். நகைச்சுவைக் காட்சிகளில் பார்த்திபனின் நண்பராக வரும் ரமேஷ்கண்ணாவின் கொடிதான் பறக்கிறது. துணைக்கு வையாபுரி. படத்தின் முன்பாதியில் இருவரும் வயிற்றைக் குலுங்க வைக்கிறார்கள். பார்த்திபனுக்கு இதில் அடக்கி வாசிக்கும் பாத்திரம். அதனால் வழக்கமான ஏடாகூடமான பார்த்திபனைக் காணவில்லை.

தேவயானி சோகத்தை முகத்தில் தேக்கி வைத்து நடிப்பதில் சோகராணி. ஒரே ஒரு காட்சியில் சீவலட்சுமி மணப்பெண்ணாக வந்து போகிறார்.

வித்தியாசமான இறுதிக் காட்சியோடு படத்தை நிறைவு செய்கிறார் இயக்குநர். பார்க்கக்கூடிய படம்.


## ஜொள்ளு நடை

ஜொள்ளுப் பிரியர்களுக்கு ஓர் தங்கமான செய்தி. தெலுங்கில் வெற்றி பெற்ற படம் ஒன்று தமிழில் மொழி மாற்றப்பட்டு வெளிவருகிறது. 'சிங்கநடை' என்று பெயரிட்டுள்ளனர்.

ரம்யாகிருஷ்ணன், ரம்பா, சாக்ஷி மூவரும் போட்டி போட்டு கவர்ச்சிப் பந்தியே வைத்துள்ளனராம். கதாநாயகன் சிரஞ்சீவி. ஆட்டம், பாட்டம், சண்டைகளுக்கு கேட்கவே வேண்டாம்.

தெலுங்கு படவுலக பிரபல இயக்குநர் கே.ராகவேந்திரா இயக்கியுள்ளார். தமிழில் தெலுங்கு வாயசைப்புக்களுக்கு ஏற்ப வசனம் எழுதியிருப்பவர் பி.ரவிசங்கர்.





வடிவேலு-கோவை சரளா
படம்: விரலுக்கேத்த வீக்கம்




சதயன-கவலட்கமி
படம்: கண்ணா உன்னைத் தேடுகிறேன்

## ...டு சொல்லுகிறோம்

...இந்நாள் வில்லன் மற்றும் கதாநாயகனுமான ...கொழுத்து 'பூ' நடிகையுடன் கரையில்லாத ...தார். இதனை அறிந்த நடிகரின் மனைவி, ...ட்டுக்கே சென்று குடுமிப்பிடி சண்டை போட் ...கொழுத்து பூ நடிகை விலகுவதாக இல்லை.

...சேவைக்கு செல்வதற்கு மீன் நடிகையும் ...கிறார். மம்மூட்டி, மோகன்லால், இயக்குநர் ... ஆகியோர் வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்கு ...தான், மறுப்பே இல்லாமல் ஒட்டிக் கொள் ...

இ...சையமைப்பாளரின் சகோதரர் ஒருவர் குட்டி ...ளுடன் கொண்டாட்டம் போடுகிறார். அப் ...புதிதாக பாட வாய்ப்புக் கேட்டு வருபவர் ...சில்மிஷம் பண்ணுகிறாராம். வாய்ப்புக்காக ... செயல்களுக்கு மறுத்து வாய்சைக்க தயங்கு ... வாய்ப்புத் தேடுவோர்.

...'ஷா' நடிகைக்கு திருமணத்தை உடனே ...தான் ஆசையாம். பெற்றோர்களுக்கு ...சத்தை உடன் இழக்க மனமில்லை. ...ல்தான் அடுத்த ஆண்டுவரை ...விட்டு நடையைக்கட்டு என்று ...னாராம். நடிகருக்கும் அடுத்த ...வரை கட்டின்றி ஆடிவிட்டு ...தலாக கைப்பிடிக்கத் தான் ஆசையாம்.



சரத்குமார்-தேவயானி
படம்: ஒருவன்

## ஒருவன் தோல்வி
## இயக்குநர் வருத்தம்

ரஜினியின் அடுத்த படத்தை இயக்கப் போகிறவர் சுரேஸ் கிருஷ்ணா என்று பேச்சு இருந்தது.

ஆனால் 'ஒருவன்' படத்தின் படு தோல்வி அந்த வாய்ப்பைப் பறித்து விட்டதாகத் தெரிகிறது. இதனால் சுரேஸ் கிருஷ்ணா வருத்தத்தில் இருக்கிறார்.

'பாட்ஷா' படத்தை கலக்கலாக எடுத்து ரஜினியிடம் பாராட்டுப் பெற்றவர் சுரேஸ் கிருஷ்ணா. 'பாட்ஷா' படப் பாதிப்பு படையப்பாவில்கூட இருக்கிறது. வேறு பல படங்களிலும் இருக்கிறது.

பாட்ஷாவில் தன் ஆட்கள் புடைசூழ ரஜினி நடந்து வருவாரே ஒரு நடை, அதே பாணியிலான காட்சிகள், பல படங்களில் பின்னர் வந்துவிட்டன.

அப்படியாகப்பட்ட சுரேஸ் கிருஷ்ணாவுக்கு சமீபகாலமாக தொடர் சறுக்கல்கள். சத்யராஜ், பிரபு இணைந்து நடித்த பிரமாண்டமான படமான 'சிவசக்தி' தோல்வி கண்டது. தற்போது மற்றொரு பிரமாண்டமான 'ஒருவன்' படு தோல்வி.

ராசியான ஜோடியான சரத்குமார், தேவயானி நடித்தும்கூட படத்தைக் காப்பாற்ற முடியவில்லை. 50 நாட்கள்கூட திரையிட்ட இடங்களில் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அதேபோல சுரேஸ் கிருஷ்ணா இயக்கிய 'சங்கமம்' திரைப்படம்கூட ரகுமானின் இசையால்தான் ஒருவிதமாக தள்ளாடித் தள்ளாடி ஓடுகிறது. அதுகூட பல திரையரங்குகளில் பகல் காட்சியாக மட்டும் மாற்றிவிட்டனர்.

'ஒருவன்' படம் பற்றிய நமது விமர்சனம் படம் தேறாது என்று அப்போதே கூறியது நினைவிருக்கலாம்.

## மருதநாயகத்தை கைவிடேன்
### கமலஹாசன் பேட்டி

'தீபாவளிக்கு 'ஹேராம்' படத்தை திரையிடும் உறுதியில் சுறுசுறுப்பாக இருக்கிறார் கமல். இன்னமும் மூன்று காட்சிகளும், ஒரே ஒரு பாடலும்தான் படமாக வேண்டியுள்ளன. இந்த நெருக்கடியான நேரத்தில் கமலின் பேட்டி.

**கே: ஒரு வழியாக இயக்குநர் கனவு நனவாகிவிட்டதா?**

க: நான் சினிமாவுக்கு வந்ததே இயக்குநராகும் எண்ணத்தோடு தான். ஆனால் திடீரென்று என்னை நடிகனாக்கி, என் வருமானத்தை அதிகப்படுத்திவிட்டார் என் ஆசான் கே.பாலசந்தர்.

**கே: உங்கள் இலட்சியம் 'மருதநாயகம்' எந்த நிலையில் இருக்கிறது?**

க: இதுவரைக்கும் 'மருதநாயகம்' முப்பது நிமிஷம் ஓடும் அளவுக்கு தயாராகி இருக்கிறது. இது முப்பத்தைந்து கோடித் திட்டம். கைவிடமாட்டேன். கைவிடவும் முடியாது. தாமதமாவது கைவிட்டதாக அர்த்தமில்லை.

**கே: 'மருதநாயகம்' படத்திற்கு நிதி உதவி தேவை என்பதால்தான் 'ஹேராம்' படத்தின் நடிக்கிறீர்களா?**

க: இனிமேல் நான் நடித்து சம்பாதித்து மருதநாயகம் பண்ண முடியாது. ஏற்கனவே அந்தப் படத்துக்கு என்னென்ன தேவையோ அதெல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு பண்ணியாகிவிட்டது.

இடையிலே கே.எஸ்.ரவிக்குமார் படம் பண்ணுவதும் உண்மை தான்.

## எதிரிக்கு

என் மனதில
ரெளத்திரம்
விதைத்துச் சென்றவனே
எப்படியிருக்கிறாய்?
♤♠
உன்னால்
உண்டான
ரெளத்திரத்தால்
என் தீயின் நாக்குகள்
சுற்றியிருப்பவர்களை
எல்லாம்
சுட்டெரிக்கிறது!
♤♠
தென்றலாகத்தான்
நான் இருந்தேன்!
தீயாக என்னை
மாற்றிய பெருமை
உன்னைத் தான் சேரும்!
♤♠
என்
பாதையில்
நீ விதைத்த
முட்களால்
இரத்தம் கசியக் கசிய
நிற்கிறேன்!
♤♠
வரும் காலங்களில்
என் கோபத் தீயை
எனக்குள்ளடக்கி
காத்திருப்பேன்...!
மீண்டும்
உன்னை
சந்திக்கும் நேரம்
அக்கினி வார்த்தைகளால்
ஆராதிக்க...!

'மட்டுநகர் சூர்யா'

## என்றோ 'டீ'



பாடும் மீன் பாட படகில் நான் சென்றுவர
தேடும் மீன் என்னை, திரும்பவும் நான் போனால்
ஓடும் மீன் ஓடி ஒளிக்கும், எனைத் தேடி
வாடும் மீன் தோழி வாடிக்கை ஆச்சதடீ!
*
நல்ல முழு நிலவில் நான் போனேன், மீன் பாட
மெல்ல இசை வந்தே மெதுவாய்ச் செவி மூட
சொல்லாமலே கேட்டு தூங்கி விழிப்பாகி
வல்லவளே தோழி நான் வந்தேன் கனவிலடீ!
*
யாழ் நூல் அளித்தாரை யாம் மறக்கலாமோடீ?
பாழ் ஆகலாமோடீ பாடும் மீன் தேனாடு?
ஆள் அழிவுப் போரில்லா அமைதி நில நீரில்
நாள் முழுதும் மீன்பாட நாம் கேட்டல் என்றோ 'டீ?

செல்வி நெ. நிதர்சனா-மட்டக்களப்பு.


## கல்லூரிக் காதல்

இரவுகள் எல்லாம்
விளிப்பில் இருத்தும்
ஒவ்வொரு ஜாமமும்
யுகமாய் உறுத்தும்!
★
காலையானால்
கால்கள் பதறும்
காதலி நினைப்பில்
உடலே உதறும்!
★
உணவு தொண்டையில்
இறங்க மறுக்கும்
உணர்வுகளெங்கோ
நீந்திப் பறக்கும்!
★



பள்ளிப்பாடம்
புளித்துப் போகும்
பருவம் காதல்
நினைப்பில் வேகும்!
★
விழிப்பில்கூட
கனவு தோன்றும்
விரக தாபம்
மனசைத் தீண்டும்!
★
இந்தக் காதல்
படிப்பைக் கெடுக்கும்
இரவு பகலாய்த்
துன்பம் கொடுக்கும்!
★
பள்ளிக்காலம்
விரைவில் தீரும்
பாசக் காதல்
மலையில் ஏறும்!
★
உனது சோகம்
தாடியாகும்
உருவம் கூடக்
குன்றிப் போகும்!
★
பெறுபேறென்னும்
பெயரில் உன்னில்
இடியே வீழ்ந்து
வீழ்த்தும் மண்ணில்!
★
ஏன் தான் உன்னில்
காதல் தோற்றம்
தொலைத்தால் இல்லை
இனி ஏமாற்றம்!

மன்னார் எம். ஷிபான்,
சியம்பலாகஸ்கொட்டுவ.



## "டிஸ்கவரி"

குண்டான சட்டிக்குள் குதிரை விடுகின்றோரே,
கண்டீரா 'டிஸ்கவரி'? காண வழி, வாய்ப்பில்லையா?
'வீடியோ'ப்படமாயின் வேண்டிய வாய்ப்புண்டாமா?
ஆடிப்பறந்தோடி 'அடி' கண்டு வரலாமா?
•••
ஒரு சிறிய பெட்டிக்குள் உலகத்தைக் கண்டீரா?
அரிய உயிர் வகையின் அற்புதங்கள் பார்த்தீரா?
எல்லாம் போய்ப் பார்ப்பதெனில் எவருக்கும் சாத்தியமா?
நல்ல பணியலவோ நமக்கவர்கள் செய்கின்றார்?
•••
நான்பெற்ற இன்பத்தை நாடும் பெறட்டும் எனத்
தான் எம்மை நேசித்தார் 'தன்போல் பிறர்' எனவே!
இதையிங் கெடுத்தோதும் இம்மொழியைப் பின் பற்றின்
வதை ஏது மில்லாமல் வாழ்ந்திடுவார் ஈழத்தார்!
•••
எச்செலவுமில்லாமல், இன்னல்களுமில்லாமல்
கச்சிதமாய் இந்தக் காசினியைக் காண்பதெனில்,
முன்னோர் அறியாத முற்றும் யாம் காண்பதெனில்
என்ன தவம் செய்து இருந்திருக்க வேண்டும் யாம்?
•••
இந்த ஒரு வாய்ப்பை இங்குள்ளார்க் கேற்படுத்தித்
தந்தோர்க்கும் நன்றிதனைத் தவறா துரையுங்கள்!
குண்டான சட்டிக்குள் குதிரை இனி ஓட்டாமல்
மண்டுக வாழ்க்கையினை மாற்றிப் பறவுங்கள்!

'அகதிக் கவிராயர்' திரு/இலிங்கநகர்.

## தேன் கிண்ணம்

## நெருப்பு வரிகள் சுடுகின்றபோது

என்னவளே!
இமைகளின்
ஓரத்திலே
ஈரம் ஒட்டியிருப்பதுபோல்
என் இதயப்பையிலே
இன்னும்
உன் நினைவுகள்
ஒட்டியிருக்கின்றன.
★
அதனால்தான் என்னவோ
உன்னை விட்டு
அதிக தூரம்
செல்லமுடியாது
துவள்கின்றேன்.
★
உன் துன்ப வரிகள்
என்னைத்
துன்பப்படுத்தும்
போதுகூட
எனக்கு நானே
சமாதானம் சொல்லி
சாந்தமடைகின்றேன்.
★
தனக்குத்தானே
சமாதானம் சொல்லி
சமாதியாவது தானே
உண்மைக் காதலில்
முடிவுரை!.

ப. பகீரதன்.

## இதய அறிமுகம்

கூரை ஒழுகிக் கொட்ட
பெய்தது மழை.
★★
சாளரம் திறக்க கீற்றின்
பிரவாகம் மனசின் உள்ளே
ஊர்வலம் போக என்
இதயத்தின் பாரம்
சுமைகூடி ஏனோ நனைய-
பார்த்திருந்தது இன்னொரு இதயம்.
★★
காதலின் அறிமுகத்தை
ஆரம்பப்படுத்த சூரியன் இன்று
அடுப்பங்கரை வரைக்கும்
வந்துவிட்டுப் போனதும்,
★★
சந்திரன் ஒரு புல்லின்
நுனிக்குள் ஒளிந்து கொண்டு
காதலைப் பற்றி தும்மிக் கொண்டே
விளக்கின் ஓரம்
வந்திருந்து கொண்டதும்,
★★



என் வாழ்க்கைக்கானதோர்
ராஜ்ஜிய விடுதியில் தங்கிச்
செல்கின்ற காதலின்
கை குலுக்கலுக்குள் பல
இதயத்தின் மூச்சுக்களும்
இப்படித்தான் எழுந்து கொள்கின்றன.
★★
ஆம் என் மனசெங்கும்
புதிய பிரவாகம் எழுந்து
காட்டு மலர்களாய் இங்கே
பூத்துக் கிடக்கின்றன.
★★
சேருமிடம் நினைக்கும் காத்திருந்த
இதயத்தை இடுப்பின் ஓரம்
இருத்திக் கொள்கிறேன்.
★★
புல்லைக் கிள்ளியும்
மழையை நிறுத்தியும்
இதய அறிமுகம் விடியலில் தொடங்க
சந்திர, சூரியனும் சுதந்திரச்
சாலைக்கு புறப்பட்டு போயின.
★★
மனசு தழுவிய அருகில் சாளரம்
திறந்து கிடக்க நான் அந்த
இதயத்துக்குள்ளேயே இருந்து கொள்கிறேன்.

உவைஸ்கனி.

## மதாலயத்தில் மருத்துவமனை

இது வித்தியாசமான காட்சி. இரண்டாம் உலகப் போர் உக்கிரம் பெற்ற நேரத்தில் போர்வீரர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகள் போதவில்லை. அதனால் தேவாலயத்தின் ஒரு பகுதி அவசர சிகிச்சைக் கூடமாக மாற்றப்பட்டுள்ளது.

ஒருபுறம் தேவாலயத்தில் பக்தர்கள் வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். மறுபுறம் காயங்களின் வலியினால் போர்வீரர் ஒருவர் கட்டுக்களோடு கட்டிலில் கிடந்து வேதனைக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கரீனா'

12.09.99 முதல் 18.09.99வரை

### மேடம்:

கருமங்களில் விடாமுயற்சியும் பலரின் உதவிகளும் கிடைக்கும். பண விடயங்கள் தாமதமடையும். எடுக்கும் விடயங்களில் வார இறுதியில் நன்மை உண்டு. இவருக்கு துலாம், சிம்ம இராசிக்காரர்கள் உதவி செய்வார்கள். கல்வி, தொழில் சிறக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 16, 18.

### இடபம்:

மனதில் தைரியம் ஏற்படும், தலையிடும் விடயங்களில் வெற்றி கிட்டும். கருமங்கள், செயற்பாடுகளில் தடைகள் நீங்கும். அடுத்தவரின் தலையீடுகள் காணப்படும். சிக்கல் நிலைகளைத் தவிர்க்கவும். கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மகர இராசிக்காரர் உதவியும், ரோகினி நட்சத்திரருக்கு பண வருவாயும் அமையும்.
அதிஷ்ட ந.ட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நி.ம் : வெள்ளை; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 13, 17.

### மிதுனம்:

பிரயாண அலைச்சல் திடீர் என ஏற்படும். எதிர்பார்த்த உதவி தடைப்படும். வெளி நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பார்கள். வார இறுதியில் நோய் துன்பங்கள் தொடர வாய்ப்புண்டு. திருவாதிரை நட்சத்திரர் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநிறங்கள்; எண் : 2.
அதிஷ்ட திகதிகள் 14, 16.

### கடகம்:

தூர இடத்துச் செய்திகள் சாதகமாக அமையும், பெரியோர்களின் ஆசிர்வாதமும் ஆலய தரிசனமும் கிடைக்கப்பெறும். புதிய வாய்ப்புக்கள், திட்டங்கள் என்பன தொடங்க முனைவார்கள். ஆயிலிய நட்சத்திரருக்கு, நல்ல வாய்ப்புக் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண் : 8.
அதிஷ்ட திகதிகள் : 17, 18.

### சிம்மம்:

மனதில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பார்த்த விடயங்கள் ஈடேறுதல். பல நாட்கள் தடைப்பட்ட கருமம் முற்றுப் பெறும். திருமண விடயம், குடும்ப பொறுப்பு என்பன மாற்றம்பெறும். துலா, கன்னி இராசிக்காரர்களின் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

### கன்னி:

திருப்தியான நிலை நிலவும். குடும்பத்தினரின் உதவி கிட்டும். திடீர் பயணத்துக்கு இடமுண்டு. பண வசதிகள் ஏற்படும். உத்தர நட்சத்திரப் பெண்கள் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 15, 18.

### துலாம்:

மனதில் பதற்றம் இருந்தாலும் விடயங்களில் வெற்றி கிட்டும். வார இறுதியில் மன மகிழ்ச்சி காணப்படும். கல்வி, மற்றும் எடுத்த முயற்சிகள் வெற்றிபெறும். குடும்பத்தாரின் உதவிகள் கிடைக்கும். சுவாதி, விசாக நட்சத்திரருக்கு எதிர்பார்த்தது நடைபெறும்.
அதிஷ்டநாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

### விருட்சிகம்:

பண விடயங்களில் சிக்கல்கள் தோன்றும். தொழில் பிரச்சனை ஏற்படும். பிள்ளைகளின் நல்ல செய்திகள் கிட்டும். பயிர்விருத்தி உண்டு. திருமண விடயங்கள் நடைபெறுவதும் விருந்தினர்கள் வந்து போவதும் நிகழும். கேட்டை அனுஷக்காரருக்கு பிரச்சனைகள் குறைவடையும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : மரூண்; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 13, 16.

### தனுசு:

கல்வி பலனுண்டு.உறவினரது எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் காணப்பட்ட முடிவில்லாத பிரச்சனைகள் தீர்வடையும்.தொழில் முயற்சிகள் நல்ல பலனைத் தரும். உத்திராட நட்சத்திரக்காரர் நன்மை பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 12, 18.

### மகரம்:

உறவினர்கள் சந்திப்பார்கள், நோய் துன்பங்கள் குணமடையும். பல விடயங்களில் தடைகள் ஏற்படும். ஏதேனும் சிக்கல்கள் தொடரப் பார்க்கும். வார இறுதியில் தீர்வு கிடைக்கும். திருவோண, அவிட்டக்காரர்களுக்கு நோய் துன்பங்கள் குறைவடையும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, புதன்.
அதிஷ்ட நிறம்: றோஸ் வர்ணம்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 16, 18.

### கும்பம்:

சிக்கல்கள் முடிவிற்கு வரும். மனதில் நிம்மதி கிடைக்கும். பிரயாணம் வெற்றி பெறும். நோய் துன்பங்கள் குறைவடையும். எதிர்பார்த்த கருமங்கள் கைகூடும். பிள்ளைகளின் சுப செய்திகள் கிடைக்கும். அவிட்டம், சதய நட்சத்திரர் சந்தோஷ நிலை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 15, 17.

### மீனம்:

குடும்ப முன்னேற்றமுண்டு. ஆலய தரிசனம் கிடைக்கும். எடுத்த காரியம் செயல்வடிவம் பெறும். போசன சுகமும், உடல் நிலை சௌக்கியமாகவும் அமையும். ரேவதி, உத்திரட்டாதி நட்சத்திரர் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 12, 16.

## நில் — கவனி — முன்னேறு



நம்முடைய தனிப்பட்ட பண்புகள் சக்திகள், விருப்பு-வெறுப்புக்கள், ஆசைகள், இலட்சியங்கள் இவற்றை முதலில் கண்டறிந்து கொள்ள வேண் டும். எதில் நம்முடைய மனம் ஈடுபாடு கொள்கிறதோ அதிலே கவனத்தை முழுவதையும் குவிக்க வேண்டும்.

சிறந்த எதிர்காலத்தைக் கற்பனை செய்து கொண்டிருந்தாலும் நான் செய்ய வேண்டிய முதற்கடமை நாம் இருக்கும் நிலையிலேயே நிறை குறைகளை அவசியம் ஆராய்ந்து பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம்.

நாம் நாமாக இருக்க விரும்புகிறோம் என்று அடிக்கடி கூறிக் கொள்ளவேண்டும. இதுதான் முன்னேற்றத்தின் தாரக மந்திரமாக அமையும். நம்மிடம் விலை மதிப்பற்ற திறன்களும், ஆக்க சக்திகளும் புதைந்து கிடக்கின்றன.

இவைகளைச் சீர்ப்படுத்தி வெளியே கொண்டுவராமல் பிறருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதிலேயே நம்முடைய காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கக்கூடாது.

பள்ளிச் சிறுவர்களிடம் நீங்கள் யாரைப் போல ஆக விரும்புகிறீர்கள் என்று கேள்வி கேட்கப்பட்டது. எல்லோரும் தங்களைக் கவர்ந்தவர்கள் பலருடைய பெயர்களின் நிலையைக் கூறினார்கள். ஆனால் ஒரு சிறுவன் மட்டும் 'நான் நானாகவே இருக்க விரும்புகிறேன்' என்றான். அந்த அறிஞன் தான் பெர்னாட்ஷா.

நமக்குத் தனிப்பட்ட வகையில் சில கொள்கைகள் இருந்தே ஆக வேண்டும். கொள்கைப் பிடிப்பு இல்லை என்றால் வாழ்வில் ஒரு நிரந்தரம் இல்லாமல் போய்விடும்.

வாழ்க்கைப் பயணம் அதனை நோக்கிதான் செல்ல வேண்டும். இதுதான் நம்முடைய சக்திகள் அனைத்தும் ஒன்றாக்கி வெற்றியைப் பெறுவதற்கு விடாமல் செயலாற்றத்தூண்டும்.

போட்டி மனப்பான்மை வளர்ச்சிக்கு வித்தாக அமையும். அதே சமயத்தில் எடுத்ததற்கு எல்லாம் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து நம்முடைய தனித்தன்மையை இழந்து விடாமல் இருக்க வேண்டும்.

போட்டி மனப்பான்மையை வளர்ச்சிக்கு உதவும் படிக்கட்டுகளாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதனையே மூலக்கற்களாக பாவித்து விடக்கூடாது. அவை நமக்கு உத்வேகம் தரும் உந்து சக்தியாகக் கொள்வது தான் சிறப்பானது.

நம்மிடம் மட்டும் அல்ல, ஒவ்வொருவரிடமும் தனித்தன்மை இருக்கும்விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மலர்கள் பல நிறம், மணம், உருவ அமைப்புகள் கொண்டவையாக இருக்கின்றன. இதே போல்தான் மனிதர்களும் இருப்பார்கள் என்று நினைக்க வேண்டும்.

நம்மிடமே அளவற்ற ஆற்றல் மண்டிக் கிடக்கும்போது மற்றவர்களைப் பார்த்து ஏங்குவதும், அவர்களைப் போலவே ஆக முயற்சிப்பதும் எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்?

நம்மிடம் இருப்பதை அனைத்தும் மறந்து விட்டு, நம்மில் இல்லாதவற்றை மனத்தளவில் கற்பனை உலகில் தேடிக் கொண்டிருப்பது வெற்றியின் வேர்களை நச்சு தன்மை கொண்டு பிடுங்குவது போலாகிவிடும். அதனால் நாம் நாமாக இருந்து செயல்பட வேண்டும்.

# சுடிதார் ரகங்கள்

இன்றைய தேதியில் இளம் பெண்கள் மத்தியில் ஃபிட்டிங் சுடிதார்கள்தான் ஃபேஷன். தலையணை உறைமாதிரி நீளமாகத் தைத்த ரெடிமேட் கமீஸ்கள் கண்களைக் கவர்வதில்லை.



ரெடிமேட் சுடிதார் மோகம் போயே போய்விட்டது. இப்போது சுடிதார் செட் துணிகளுக்கு கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

பிடித்த நிறங்களில் பிடித்த ரகங்களில் துணியெடுத்து விதவிதமான வகைகளில் தைத்துப் போட்டுக் கொள்கிறார்கள் யுவதிகள்.

சுடிதாருக்கு துணி எடுக்கப்போகும் போது சில விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் உங்கள் சுடிதாரின் மீதுதான் எல்லோரின் பார்வையும் இருக்கும். இதோ சில டிப்ஸ்:

* ஒல்லியானவர்களுக்குப் பெரிய பூப்போட்ட சுடிதார் அட்டகாசமாக இருக்கும்.
* குண்டானவர்களுக்கு சிறிய பூக்கள் தெளித்த அல்லது பிளெய்ன் சுடிதார்கள் எடுப்பாக இருக்கும்.
* மிகவும் ஒல்லியாக இருப்பவர்கள் வட்டக்கழுத்து போடுவதைத் தவிர்க்க வேண்டும். சைனீஸ் கொலர் எனப்படும் அரைகொலர் வைத்த கழுத்து டிஸைன் உங்களுக்கு நன்றாக இருக்கும்.
* பிளெய்னாக துணி எடுத்தால் அதற்குப் பொருந்தும் எதிரான நிறத்தில் லேஸ், பட்டன்கள் மற்றும் பாசிகள் வாங்கி விடுங்கள். துணிப்பூக்கள் சில கடைகளில் கிடைக்கும். சுடிதாரின் கீழ்ப்புறம் வரிசையாகப் பூக்கள் வைத்துத் தைத்தால் அழகாக இருக்கும். பிளெய்னில்தான் விதம் விதமாக கழுத்து மற்றும் முதுகு டிஸைன்கள் தைக்க முடியும்.

# ஒரு வயதில் கவனிக்கவும்



உங்கள் குழந்தைக்கு ஒரு வயது ஆகிவிட்டதா? அப்படியானால் இதைப் படியுங்கள்.

ஒரு வயதில் குழந்தை தனது உடல் உறுப்புக்களை அறிந்து கொள்ள விரும்பும். அம்மா, அப்பாவின் கண், காது, மூக்கை ஆச்சரியமாகப் பார்க்கும். அப்போது குழந்தைக்கு, "இது கண்... இது மூக்கு..." என்று ஒவ்வொரு உறுப்பையும் சுட்டிக் காட்ட வேண்டும். மறுநாள், "உன் கண் எங்கே இருக்கிறது?" என்று கேட்டால் குழந்தை கண்களை மூடித் திறக்கும். அல்லது தனது கையால் தொட்டுக் காண்பிக்கும்..

குழந்தைகளின் மழலை வார்த்தைகளில் உச்சரிப்பு சரியாக வராது. குழந்தை தாகத்தை உணர்ந்ததும் 'அம்மா எனக்கு தண்ணீர் கொடுங்கள்' என்று கேட்காது. 'தண்ணி' என்றுதான் அதனால் கேட்க முடியும். அப்போது குழந்தையிடம் 'தண்ணீர் வேண்டும் என்று சொல்....' என்பது போல் வார்த்தைகளை முழுமையாகப் பேச மெல்ல மெல்லப் பயிற்சி கொடுக்கலாம்.

குழந்தைகள் புதிய புதிய வார்த்தைகளை பெற்றோரிடம் இருந்துதான் படிக்கும். குழந்தைகள் அந்த வார்த்தைகளைப் படிப்பதற்கு வசதியாக குழந்தைகளிடம் பாட்டு, கதை போன்றவைகளைச் சொல்ல வேண்டும். சிறிது நேரம் ரீ.வி. பார்க்கவும் அனுமதிக்க வேண்டும். தொடர்ந்து வார்த்தைகளைக் குழந்தை கேட்டுக்கொண்டே இருந்தால், குழந்தை அந்த வார்த்தைகளைப் பேச தூண்டப்படும்.

குழந்தைக்கு மின்னல் வேகத்தில் கடமைக்காக கதை சொல்லி விடாமல், ரசித்து நடித்து சொல்ல வேண்டும்.

அப்படியானால்தான் முழுமையாகக் குழந்தை அதனைப் புரிந்து கொள்ளும். சிங்கம் குதித்தது என்று சொல்லும்போது குதித்துக் காட்டுவதில் தப்பில்லை.

# தொடர் இருமலா?




தொடர்ந்து இருமல் இருந்தால் அதை சாதாரண சளிதொல்லை என்று நினைத்து ஒதுக்கிவிடக்கூடாது. அது ஆஸ்த்மா நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம், என்று அமெரிக்க மருத்துவர்கள் கூறியுள்ளனர். அங்கு இதுப்பற்றி நடத்தப்பட்ட ஆய்வில் 2 ஆயிரம் ஆஸ்த்மா நோயாளிகளுக்கு அந்த நோயின் ஆரம்ப அறிகுறியாக தொடர் இருமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்த்மா என்று மூச்சுவிட சிரமமாக இருக்கும் என்றுதான் பலர் தப்புக்கணக்கு போட்டு விடுகின்றனர். பெரும்பாலானவர்களுக்கு தொடர் இருமலும் ஆஸ்த்மா நோயால் ஏற்படுவது உண்டு. பலர் நீண்ட நாட்களாக இருமலுக்கு மட்டும் மருந்துகளைச் சாப்பிடுவார்கள்.

ஆஸ்த்மா தொடர்பான இருமலுக்கு இந்த மருந்துகளால் பயன் எதுவும் இல்லை. அதனால் நீண்ட நாட்களாக எந்த இருமல் மருந்திற்கும் அசைந்து கொடுக்காத இருமல இருந்தால் உடனே ஆஸ்த்மா நோய் உள்ளதா? என்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GK

பெயர்:.......................

முகவரி:..........................

...................................

தொழில்:..........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-09-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது

07 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவின் தாயும், தந்தையும் பிரிந்த பின்னர் மோனிக்கா தந்தையைப் பார்ப்பது அரிதாகிவிட்டது.

அம்மாவுடன்தான் மோனிக்கா இருந்தாள். தம்பியும் அவர்களுடன்தான்.

மோனிக்காவுக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அப்பாவுடன் பேச வேண்டும் போலிருந்தது.

'அப்பா' அருமை அப்பா!? அவரைத் தேடிப் போனாள். தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றில் மோனிக்காவின் அப்பா குடியிருந்தார்.

கதவு திறந்தே கிடந்ததால் மோனிக்கா உள்ளே பிரவேசித்த பின்னர்தான் 'அப்பா' என்று குரல் கொடுத்தாள்.

மோனிக்காவின் குரலை காதில் வாங்கும் நிலையில் அப்பா லிவின்ஸ்கி இருக்கவில்லை. காதலியான பார்பரா லேர்ணருடன் லிவின்ஸ்கி இன்பம் துய்த்துக் கொண்டிருந்தார்.

எந்த நிலையில் காணக்கூடாதோ அந்த நிலையில் அவர்கள் இருவரையும் மோனிக்கா பார்த்துவிட்டாள்.



அவள் குரல் கொடுத்தது கூடத் தெரியாமல், கதவு திறந்து அவள் பார்த்தது கூடத் தெரியாமல் அவர்கள் இருவரும் வேறு உலகத்திற்குள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

மோனிக்கா ஒரே ஓட்டமாக அங்கிருந்து வெளியேறினாள்.

மோனிக்காவுக்கு தந்தையின்மீது வெறுப்பாக இருந்தது. எல்லாமே விரக்தியாக இருந்தது.

தாயும், தந்தையும் இனிமேல் ஒன்று சேர எந்த வாய்ப்பும் இல்லை என்பது தெரிந்துவிட்டதால்தான் அவள் மிக்க விரக்தியுற்றாள். மிக்க சோகம் கொண்டாள். மிக்க மிக்க சோர்ந்து துவண்டு போனாள்.

பெல் எயார் பாடசாலையில் இறுதி ஆண்டுப் பரீட்சை முடிந்த பின்னர் அங்குள்ள ஆலயத்தில் ஒரு கொண்டாட்டம் நடைபெற்றது.

## அப்பாவின் காதலி

லிவின்ஸ்கி குடும்பத்தினர் அனைவரும் பங்கு கொள்ளவேண்டும் என்று பள்ளி நிர்வாகிகள் கோரியிருந்தனர்.

பள்ளி நிர்வாகத்தினருக்கு பதில் சொல்லி மாளாது என்பதால் மோனிக்கா தன் தந்தையாரை தொலைபேசியில் தொடர்புகொண்டு நிகழ்ச்சிக்கு கண்டிப்பாக வருமாறு கூறினாள்.

கொண்டாட்டத்துக்கு மோனிக்காவும் அம்மாவும், தம்பியும் சென்றார்கள். லிவின்ஸ்கியும் அங்கு வந்திருந்தார்.

லிவின்ஸ்கியைக் கண்டதும் மோனிக்காவின் உதட்டில் பருத்தி வெடித்தாற்போல் ஓர் புன்னகை மலர்ந்தது. மறு நொடியே அது மரித்தது.

### பின் வரிசையில்

லிவின்ஸ்கியுடன் அவரது காதலி பார்பராவும் கூட வந்தாள். இருவரையும் வரவேற்ற பள்ளி நிர்வாகிகள் மோனிக்காவும் தாயும் சகோதரனும் அமர்ந்திருந்த வரிசையில் அமருமாறு அழைத்தார்கள்.

அதனை மறுத்த லிவின்ஸ்கி அவர்களுக்கு பின்வரிசையில் உள்ள நாற்காலியில் அமர்ந்து கொண்டார். மோனிக்காவுக்கு மனசுக்குள் பூத்த மத்தாப்பு கருகிப்போனது.

மோனிக்காவின் தம்பி அவளிடம் கேட்டான், "அக்கா! அப்பாவுடன் வந்திருக்கும் அன்ரி யாரக்கா?"

"வாயை மூடு!" என்று அதட்டி அடக்கி விட்டாள்.

அன்றைய நிகழ்ச்சியின் பின்னர் தந்தையாருடனான மோனிக்காவின் உறவு மெல்லியதாகி மெல்ல மெல்ல அறுபடும் நிலைக்கு வந்துகொண்டிருந்தது.

பெல் எயார் பள்ளி முடிந்து பல்கலைக் கழகம் செல்வதற்கு மோனிக்கா தகுதி பெற்றாள்.

தகுதி பெற்றது சந்தோசமானாலும் தடைக்கற்களும் இருந்தன. அதனால் சந்தோசம் முழுமையாகக் கிடைக்கவில்லை.

பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் படிக்க வேண்டும். அதற்கு பெருந்தொகையான பணம் தேவைப்படும்.

மோனிக்காவின் அம்மாவிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. "அவருக்கு உனக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. தைரியமாகக் கேள்!" என்று அம்மா கூறியதால், வேறு வழியும் இல்லாததால் தந்தையிடம் கேட்கப் போனாள்.

அவர் முன்னர் மாதிரி இதமாக நடந்து கொள்ளாததுபோல ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. பட்டும் படாது, யாரோ மூன்றாவது மனுஷியுடன் பேசுவதுபோலப் பேசினார்.

'தோளிலும், மார்பிலும் என்னைத் தூக்கித் திரிந்த அப்பாவா இவர்?' மோனிக்காவால் நம்ப முடியவில்லை.


பார்பராவும் அங்கிருந்தாள். பாதி மார்புகள் பளிச்சென்று தெரிந்து ஆண்களை வதைக்குமளவுக்கு கவர்ச்சியாக உடை அணிந்திருந்தாள்.

அவளை திடீரென்று லிவின்ஸ்கி மோனிக்காவிடம், "இவள்தான் உன் சின்னம்மா. அதாவது நானும் இவளும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறோம். உன் சின்னம்மா எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டுக்கொண்டு, மகள் முன்பாகவே பார்பராவின் தொடையில் தட்டினார் லிவின்ஸ்கி.

மோனிக்காவுக்கு பார்பராவைப் பார்க்க கடித்து தின்றுவிடலாமோ என்னுமளவுக்கு எரிச்சலாக இருந்தது.

'அப்பாவை என்னிடமிருந்து பிரித்த இராட்சசி' என்று அவள் முகம் எதிரே கைகளை விரித்து கத்தவேண்டும். சாபம் போட வேண்டும் போலெல்லாம் இருந்தது.

பார்பராவின் பார்வையில் பரிவு தெரியவில்லை. நட்பு இருக்கவில்லை. சும்மா ஒப்புக்காக, உதடுகளால் பொய்யில் தோய்ந்த புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.



லிவின்ஸ்கி

பிச்சைக்காரனுக்கு பணம் போடலாமா வேண்டாமா என்று தயங்கித் தயங்கி சில்லறை போடும் கருமியைப்போல, புன்னகைக்கலாமா வேண்டாமா என்று தயங்கித் தயங்கியே புன்னகைத்தாள்.

அவளுக்கு முன்பாக தந்தையிடம் உதவி கேட்க மோனிக்காவுக்கு அவமானமாக இருந்தது. அதனால் எதுவும் பேசாது வீடு திரும்பிவிட்டாள்.

தந்தை லிவின்ஸ்கிக்கு மோனிக்காவின் நடவடிக்கை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தன் காதலியை அவள் உதாசீனம் செய்து போய் விட்டதாகவே நினைத்துக் கசந்து கொண்டார்.

தன் காதலியான பார்பரா, தன் மகளை மதிக்கவில்லை என்பது அவர் மனதுக்குத் தெரியவில்லை.

அவர் மனதை பார்பரா மொத்தமாகப் படையெடுத்து கைப்பற்றியிருந்தாள். அதனால் சுதந்திரமாகச் சிந்திக்கும் திறனை லிவின்ஸ்கி இழந்திருந்தார்.


வீடு திரும்பிய மோனிக்கா அங்கிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். அவளது துரதிஷ்டம் என்று சொல்லலாம், பார்ப்பராதான் மறுமுனையில் "ஹலோ யார் பேசுவது?" என்று கேட்டாள்.

"மோனிக்கா" என்றாள் சுருக்கென்ற குரலில் சுருக்கமாக.

பார்பராவும் லேசான பெண்ணல்ல, "எந்த மோனிக்கா?" என்று கேட்டாள்.

முகத்தில் குத்தியது போலிருந்தது மோனிக்காவுக்கு.

தன் தந்தையிடம் பேசுவதற்கு மூன்றாம் மனுஷியின் அனுமதி பெற வேண்டியிருக்கிறதே என்ற வெறுப்பு அமோக விளைச்சலானது.



தந்தையின் தோளில்

ஆனாலும் பல்கலைக்கழகப் படிப்பு கண் முன்னால் வந்து நின்றது. அதனால் தன் மன உளைச்சலை எல்லாம் பொட்டலமாகக் கட்டி எறிந்துவிட்டு, "அவர் மகள்தான் பேசுகிறேன்!" என்று கூறினாள்.

### மறுப்பு

'பார்பராவிடம் தான் தோற்றுவிட்டேன், அவமானப்பட்டுவிட்டேன்!' என்று மோனிக்காவின் மனம் வெதும்பியது.

தந்தையார் மறுமுனையில் குரல் விடுத்தார். "என்ன மோனிக்கா? என்ன விஷயம்? இப்போதுதானே வந்து போனாய்? ஏதாவது முக்கிய விஷயமா?" என்று கேள்வி கேள்வியாக அடுக்கிக் கொண்டிருந்தார்.

"பல்கலைக்கழகம் சென்று நாலு வருடங்கள் படிக்க பணம் தேவை. தரமுடியுமா? முடியாதா?" என்று கொஞ்சம் கண்டிப்பாகவே கேட்டுவிட்டாள்.

லிவின்ஸ்கிக்கு அவள்மேல் அப்போதிருந்த கசப்பை அவளது கேள்விப் பாணியும் அதிகமாக்கியதால் "என்னிடம் பணம் இல்லை. நாலு வருடங்களுக்கு நான் எப்படி தந்துகொண்டேயிருப்பது. உன் அம்மா வேலைக்குப் போகிறாள் அல்லவா? அவளிடம் கேளேன். வேறென்ன?" என்று கேட்டார்.

எங்கே அவராகவே தொடர்பைத் துண்டித்துவிட்டால் தன்னால் தாங்கமுடியாது போகும் என்பதால், மோனிக்காவே முந்திக் கொண்டு, "வேறொன்றுமில்லை!" என்று முறிப்பாகக் கூறிவிட்டு தானாகவே தொடர்பைத் துண்டித்துவிட்டாள்.

மோனிக்காவின் பல்கலைக்கழகக் கனவு நிறைவேறவில்லை. அதனையிட்டு மிக்க வருந்தினாள்.

அந்த வருத்தத்தை மறைக்க நாடகப் பள்ளி சென்று சில நாடங்களில் நடிக்க ஆரம்பித்தாள்.

நாடகப்பள்ளி முடிந்ததும் பிளேய்லருடன் சுற்றினாள். தேகங்கள் சங்கமிக்க தாபம் கொள்ளும்போது, விடுதிகளில் தங்கினார்கள். "பிளேய்லர் மட்டும் என் தேவைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் வடிகாலாக இருந்திருக்காது விட்டால் நான் செத்துப்போயிருக்கவும் கூடும்தான்!" என்று மோனிக்கா பின்னர் கூறியிருக்கிறாள்.

பல்கலைக்கழகம் செல்ல முடியாத குறையில் மோனிக்கா வருத்தமுற்றுள்ளார் என்பதை அறிந்த தாயார் வேறு ஒரு ஏற்பாட்டுக்கு உதவினார்.

மேலும் புது அனுபவங்கள் காத்திருந்தன.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி எம். மயுரா, 161/9, ஜெம்பெட்டா தெரு, கொழும்பு-13. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சக்திநுட்பம் யாவினையும் நாடும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சக்தி சக்தி யென்றுகுதித் தாடும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஏழைக்கும் வேளை வரும்

ஒரு காட்டில் குளமொன்று இருந்தது. அந்தக் குளத்தின் நீர்மட்டம் எப்போதும் அமைதியாக இருப்பதில்லை. ஆடி அசைந்தபடி இருக்கும்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

இந்தக் குளத்தில் வாழும் மீன்களின் ஆர்ப்பாட்டம்தான். இந்த மீன்கள் எல்லாம் போடும் கும்மாளத்தால் முழுக்குளமும் சலசலத்துக்கொண்டே இருக்கும்.

இந்தக் குளத்தில் ஒரு பெரிய தவளையும் இருந்தது. ஒரே ஒரு தவளை இருப்பதால் மீன்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதனை எதிர்த்தன.

அதுமட்டுமன்றி தவளையின் சொர சொரப்பான தோலையும் அதன் தோற்றத்தையும் பார்த்துக் கிண்டல் செய்தன.

ஆனால் தவளை எதுவும் பேசாமல் இருக்கும். தவளை பேசாமல் இருப்பதால் அவற்றின் கேலியும், கிண்டலும் அதிகரித்துக்கொண்டே சென்றன.

தமக்கு மினுமினுப்பான உடலும், அழகான கண்களும் உள்ளதாகவும், தவளைக்கு சொரசொரப்பான தோலும், அசிங்கமான கண்களும் இருப்பதாகக் கேலி செய்தன.

தவளைக்கு ஆதரவாகப் பேச யாருமே இல்லாததால் அது எப்போதும் ஒதுங்கியே இருந்து வந்தது.

ஒருமுறை அந்தக் காட்டில் எப்போதும் இல்லாதவாறு வெப்பம் அதிகமானது. மழையும் பெய்யவில்லை.

சோலைவனமாகக் காட்சியளித்த காடு பாலைவனமாக மாறத் தொடங்கியது. தவளையும் மீன்களும் வசித்த குளமும் வற்றத் தொடங்கியது.

உயிருடன் இருந்த மீன்களும் மிகவும் கஷ்டப்பட்டன. அவை, தங்களுக்குள் ஈனக் குரலில் சொல்லி அழுதன.

"சொர சொரப்பான அழகற்ற தோலாக இருந்தாலும் பரவாயில்லை தவளையாகப் பிறந்திருக்கலாம். நாம் மினுமினுப்பாக



இருக்கிறது என்று சொன்ன எம் உடலால் வெப்பத்தைத் தாங்கமுடியவில்லையே!"

இதுவரை காலமும் கேலியும் கும்மாளமுமாக இருந்த மீன்களைக் கவலை ஆக்கிரமித்துக் கொண்டது. மீன்களின் நிலையைக் கண்டு தவளையும் கவலைப்பட்டது. ஆனால் தவளையால் மீன்களுக்கு உதவ முடியவில்லை.

வெப்பம் தாங்க முடியாத சில மீன்கள் செத்துப்போயின.

தவளை ஓர் ஓரத்தில் இருந்தபடி மழை வராதா, மழை வந்து வெப்பத்தைப் போக்கி மீன்களின் உயிரைக் காப்பாற்றாதா? என்ற ஏக்கத்துடன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

## அதிசயம் - ஆனால் உண்மை!

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் 1897ல் பூகம்பம் ஏற்பட்டதால், நீர் வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அது இன்றளவும் ஓடிக்கொ;ண்டிருக்கிறது.






அவுஸ்திரேலியாவில் ஃபயர்வீல் மரத்தின் பூக்கள் சிவப்பு நிறமாகப் பூக்கும். அத்துடன் இப்பூக்கள் கடிகாரத்தின் உள்ளே இருக்கும் பல்லு சக்கரங்கள் உருவில் காணப்படும்.

தென்னாபிரிக்காவில் உள்ள 'கொட்ஃபிஷ்' என்ற மீன் இளமையில் சாதாரணமாக நீந்தும். பின் வாழ்நாள் முழுவதும் மல்லாந்து நீந்தும்.



## எப்படித் தெரியுமா?



பவளப்பாறைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?

கடலில் வாழும் உயிரினங்களில் பவளம் போன்ற சில உயிரிகள் கடல் நீரில் இருக்கும் கல்சியம் காபனேட்டை உறிஞ்சி எடுக்கின்றன. பின் அவற்றை ஓடுகளாக மாற்றிக் கொள்கின்றன.

இந்தப் பவளங்கள் இறந்த பின்பு அவை பவளப்பாறைகளாக மாறி விடுகின்றன.

## சி.வி.ராமன்



நோபல் பரிசை இந்தியாவில் முதல் முதலில் பெற்றவர் விஞ்ஞானி சி.வி.ராமன். இவர் 1888ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் திகதி பிறந்தார்.

படிக்கும் காலத்திலேயே ஒலி-ஒளியைப் பற்றிய ஆராய்ச்சியில் இவர் ஆர்வம் காட்டினார். ஒளி சிதறும்போது தோன்றும் வர்ணங்களைக் கண்டார். இதை 'ராமன் விளைவு' என்று அவர் பெயராலேயே அழைத்தனர்.

கடல் நீரின் அணுக்களால் ஒளி சிதறும்போது கடல் நீலநிறமாகக்காட்சி அளிக்கிறது என்றும் ராமன் கண்டு பிடித்தார்.

இவரது கண்டுபிடிப்புக்களுக்காக 1930ம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு இவருக்குக் கிடைத்தது. அத்துடன் நோபல் பரிசைப் பெற்ற முதல் இந்திய விஞ்ஞானி என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

சி.வி.ராமன் 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி தமது 82வது வயதில் காலமானார்.

## இராட்சத ஆமைகள்



உலகில் 275 வகையான ஆமைகள் உள்ளன. இவற்றில் மிகவும் பெரியவை காலபோக்கஸ் என்ற தீவுகளில் உள்ள இராட்சத ஆமைகள்தான்.

இந்த இராட்சத ஆமைகள் 6 அடி நீளம்வரை வளர்கின்றன. இவை 100 கிலோ முதல் 400 கிலோவரை நிறையுள்ளனவாகவும் இருக்கின்றன.

50, 60 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டரை இலட்சம் இராட்சத ஆமைகள் இருந்தன. ஆனால் இப்போது 15 ஆயிரம் இராட்சத ஆமைகள் மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.09.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **313**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 311

**பரிசுக்குரியவர்:**
பொன்னம்பலம் கமலராஜ்,
கமு/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ்,ஜாபிறா, மட்/மாக்கான் மாக்கார் வித்தியாலயம், ஏறாவூர். | செல்வி ஷர்மினா கிரிதரன், சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| பிரணீத்தா-பாலநாதன், புனித சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. | பரமானந்தராஜா ருசான், இந்துக் கல்லூரி, வாழைச்சேனை. |
| கமால்தீன் ஸப்வான் மொஹம்மட், மஹவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. | சிந்துபைரவி-சதானந்தன், கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| எல்.பரமேஸ்வரி, கைலன்ஸ் மத்திய மகா வித்தியாலயம், ஹட்டன். | சிறிஸ்கந்தராஜா வினோதன், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| எம்.மிதுன் பிரியதர்ஷன், சென் தோமஸ் கல்லூரி, குருதலாவை. | துளசிகா-சிவலிங்கம், வ/இறம்பைக்குளம், மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. ஊதினால் பருப்பான், ஊசியால் வெடிப்பான். அவன் யார்?
2. பக்கத்தில் இருக்கும் பட்டணம் பார்க்கத்தான் முடியலை. அது என்ன?
3. தண்ணீ(,)ல் குதிப்பான், குழம்பில் கொதிப்பான். அவன் யார்?
4. உருண்டிருக்கும் பாறை மேலே திரண்டு நிற்குது கோரைப்புல். அது என்ன?
5. தனித்து உண்ண முடியாது என்றாலும் இது சேர்ந்தால்தான் உணவுக்குச் சுவை. அது என்ன?
6. பூப்பூவாய் உதிர்வான், அவன் பொறிபட்டால் உடல் புண்ணாகும். அவன் யார்?
7. அடுக்கி வைத்த வீடுகள் அசைந்தபடி பெரும் பயணம், விடிந்து பார்த்தால் வேறு ஊர் வந்தாச்சு. அது என்ன?
8. உடல் இல்லாதவன் ஊரெல்லாம் போவான். அவன் யார்?
9. பச்சை நிறத்தழகி பவள வாயழகி சொன்னதை திருப்பிச் சொல்லும் பேரழகி. அவள் யார்?
10. மனிதன் போடாத பந்தலில் மலர்ந்து கிடக்குது. மல்லிகைப் பூக்கள். அது என்ன?

**விடைகள்**

1. பலூன் 2. [illegible]
3. மீன் 4. [illegible]
5. உப்பு 6. பட்டாசு
7. புகையிரதம் 8. புகை
9. கிளி
10. வானம்- நட்சத்திரங்கள்.

### உறைந்த கடல்

கி.பி.401 மற்றும் 1642ம் ஆண்டுகளில் மத்திய ஆசியாவில் உள்ள கருங்கடல் முழுவதுமாக உறைந்து போய்விட்டது. காரணம் கடுமையான குளிர்.

### உப்பு நகரம்

சகாரா பாலைவனப் பகுதியில் டெகாஸ்ஸா என்னும் நகரம் இருக்கிறது. இந்த நகரம் முழுவதும் உப்பைக் கொண்டே கட்டப்பட்டது.

## ஏன் தெரியுமா?

சேர்க்கஸில் கயிறு மீது நடப்பவர் நீண்ட கம்பு வைத்திருப்பார். சிலர் குடை வைத்திருப்பதும் உண்டு. இப்படி வைத்திருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?




எந்தப் பொருளும் கீழே சாயாமல் நிலையாக இருக்க வேண்டுமானால் புவியீர்ப்புத் தானத்தில் இருந்து வரும் செங்குத்துக்கோடு அதன் அடிப்பரப்புக்குள் விழ வேண்டும். அதற்கு வெளியே விழுமானால் ஸ்திரநிலை இருக்காது. இது மனிதனுக்கும் பொருந்தும்.

சேர்க்கஸில் வித்தை செய்பவர் கயிறு மீது தனது கால்களை ஒன்றன்பின் ஒன்றாக (குறுகிய இடத்தில்) வைத்து நடக்கிறார். சற்றுக் கவனம் தவறினாலும் புவியீர்ப்புத்தானம் வெளியே விழும். அதனால் அவர் கீழே விழ வாய்ப்புள்ளது.

அதனால் புவியீர்ப்புத்தானத்தை சமநிலை செய்யவே நீண்ட கம்பு அல்லது குடை வைத்திருக்கிறார்கள்.

## இதயத் துடிப்பு



ஒரு மனிதன் 70 ஆண்டுகள் உயிர் வாழ்கிறான் என்றால் அவனது இதயம் 250 கோடி தடவை துடிக்கிறது. எவ்வித சேர்வீஸ் வசதியும் இல்லாமல் இதயம் இப்படி இடைவிடாமல் துடிக்கிறது.

நாம் 20 வயது இளைஞர்களாக இருக்கும்போது நமது இதயம் வெளியேற்றும் இரத்தத்தின் அளவு போன்று அரைப்பங்கு இரத்தத்தைத்தான் 90 வயதில் நமது இதயம் வெளியேற்றுகின்றது.

பாக்கியத்தின் மகள் **இதுவரை**
வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுறம் சூடுபிடிக்கிறது.. **இனி...**

# சிக்கிய மின்னல் 20



**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

இண்டஸ்ட்ரியலிஸ்ட் ராஜநாராயணன் டைட்டானிக் கப்பலின் பிரமாண்டத்தோடு ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்க, டாக்டர் ரத்னவேலின் கார் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து போர்டிகோவை நோக்கிப் போயிற்று.

வர்ணாவை பிரமிப்பு வியாபித்துக் கொண்டது. "அடேயப்பா...! எவ்வளவு பெரிய பங்களா...? கார் போர்டிகோவுக்குப் போய்ச் சேரவே ஒரு நிமிஷமாகும் போலிருக்கே...."

ரத்னவேல் புன்னகைத்தார். "நான்தான் சொன்னேனே வர்ணா... ராஜநாராயணனோட சொத்துக் கணக்கை எஸ்டிமேட் பண்ண உட்கார்ந்தா முழுசா ஒரு மணிநேரம் பிடிக்கும். இத்தனை சொத்து இருந்து என்ன பிரயோஜனம்...? அவர் மனசு நிம்மதியா இல்லையே... நோயாளி மனைவியை தினசரி பார்த்து ஒவ்வொரு நிமிஷமும் உருகிட்டிருக்கார்."

கார் போர்டிகோவில் போய் நின்றது. இருவரும் இறங்கி போர்டிகோ படிகளில் ஏற வயதான ஒரு நபர் எதிர் கொண்டார்.

"வாங்க டாக்டர்...."

"வர்ணா...! இவர்...ராஜநாராயணனுக்கு பி.ஏ. பல வருஷமா இதே குடும்பத்துல வேலை பார்த்திட்டிருக்கார்."

"வணக்கம்..."

அவரும் கை குவித்தார். ரத்னவேல் பி.ஏ.விடம் கேட்டார். "அய்யா மாடியில் இருக்காரா... இல்ல அவரோட ரூம்ல இருக்காரா...?"

"மாடியில் அம்மாவுக்குப் பக்கத்துலதான் இருக்கார். நீங்க வந்ததும் மேலே வரச் சொன்னார்."

"வேற யாராவது கூட இருக்காங்களா?"

"இல்லை அய்யா மட்டும் தான்."

"வாம்மா வர்ணா..." ரத்னவேல் வர்ணாவைக் கூட்டிக் கொண்டு மேலே போனார். ஒரு கல்யாண மண்டபம் போல பரவிகிடந்த ஹாலில் வர்ணா பிரமிப்பு ஒட்டிக் கொண்ட பார்வையோடு ரத்னவேலைத் தொடர்ந்தாள். 'S' போட்டுக்கொண்டு மாடிக்கு வழி காட்டிய க்ரனைட் படிகளில் இருவரும் ஏறி, மாடி வராந்தாவின் மையத்தில் இருந்த அறைக்கு முன்பாகப் போய் நின்றார்கள்.

ரத்னவேல் கதவைத் தள்ள மெலிதான ஏ.ஸி. குளிரோடு ஒருபெரிய அறை பார்வைக்குக் கிடைத்தது. உயர்த்திப் போடப்பட்ட ரோஸ்வுட் பர்னிச்சர் கட்டிலில் ஒரு பெண் வெளிறிய முகத்தோடு படுத்திருக்க பக்கத்திலேயே ஐம்பது வயது நபர் ஒருவர் வாயில் சிகரெட் பைப்பைக் கடித்தபடி உட்கார்ந்திருந்தார். நடைச் சத்தம் கேட்டு பார்வையைத் திருப்பியவர் ரத்னவேலைப் பார்த்ததும் மலர்ந்தார்.

"வாங்க... டாக்டர்... உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்..."

"ஸாரி... கொஞ்சம் லேட்டாயிடுச்சு..."

"பரவாயில்லை இந்தப் பொண்ணுதான் நீங்க சொன்ன வர்ணாவா?"

"ஆமா..." என்று தலையசைத்த ரத்னவேல் வர்ணாவின் பக்கம் திரும்பினார்.

"வர்ணா இவர்தான் ராஜநாராயணன்."

"வணக்கம் ஸார்..." வர்ணா கை குவித்து வணக்கம் சொல்ல ராஜநாராயணன் ஒரு சின்ன புன்னகையோடு தனக்கு பக்கத்தில் இருந்த நாற்காலியைக் காட்டினார்.

"இப்படி உட்கார்ம்மா"

அவள் தயக்கமாய் உட்கார்ந்தாள். ராஜநாராயணன் தொடர்ந்தார். "டாக்டர் ரத்னவேல் இந்தக் குடும்பத்துக்கு ரொம்பவும் வேண்டியவர். அவர் உங்கிட்டே இருக்கிற அற்புதமான சக்தியைப் பத்தி என்கிட்ட சொன்னார். உண்மையை சொல்லப்போனா எனக்கு இது மாதிரியான விஷயங்களில் நம்பிக்கை யில்லைதான் இருந்தாலும் ஏதாவது ஒரு வகையில் என்னோட திலகம் உடம்பு குணமாகி எந்திரிச்சு உட்கார்ந்துட மாட்டாளான்னு நான் ஒவ்வொரு பப்பாசையின் காரணமாகத்தான் டாக்டர் சொன்னதுக்கு தலையாட்டினேன். உன்னோட கைபட்டு என்னோட திலகம் குணமாயிட்டான்னா உனக்கு நான் கனகாபிஷேகமே பண்ண தயாராயிருக்கேன்!"



அவர் பேசப் பேச வர்ணா குறுக்கிட்டாள்.

"ஸார்... என்கிட்ட ஏதோ ஒரு சக்தி இருக்குன்னு டாக்டர்தான் சொல்றார். ஆனா எனக்கு அதுல பரிபூர்ண நம்பிக்கை இன்னும் வரலை. நோய்வாய்ப்பட்டிருந்த நாய் குணமானதும் பார்சவி கடுமையான தீக்காயங்களோடு உயிர் பிழைச்சதும் அந்த கடவுளோட கருணை. இதில் என்னோட பங்கு ஒண்ணுமே இல்லைன்னுதான் நான் நினைக்கிறேன். காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாய் இந்த சம்பவங்கள் நடந்து இருக்கலாம்."

டாக்டர் ரத்னவேல் புன்னகைத்தார்.

"இதோ பாரம்மா... இப்படியொரு அவநம்பிக்கையான எண்ணம் உன் மனசுக்குள்ளே வரக் கூடாது. 'மைதாஸ் டச்' என்று ஆங்கிலத்துல ஒரு வார்த்தை இருக்கு. அதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா...? மைதாஸ்ங்கிற ஒருத்தன் எந்தப் பொருளைத் தொட்டாலும் சரி அது தங்கமா மாறிடுமாம். அது மாதிரி நோய்களைத் தீர்க்கக்கூடிய ஒரு 'ஹீலிங் பவர்' உன்னோட கைகளுக்கு இருக்கு. சாகும் தறுவாயில் இருந்த உன் வீட்டு நாயும், தீக்காயங்களோடு உயிருக்குப் போராடிகிட்டிருந்த உன் எதிர்வீட்டு பார்சவியும் உயிர் பிழைச்சதுக்கும் காரணம் உன் கைபட்டதால்தான். அந்த ரெண்டு அற்புதங்களை பண்ணி முடிச்ச நீ மிஸஸ் திலகத்தையும் தொட்டுக் குணப்படுத்தப்போறே... அதுல எனக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது. யோசிக்காமே எந்தவிதமான தயக்கமும் இல்லாமே அந்த அம்மா பக்கத்துல போய் நின்னு அவங்க ரெண்டு கைகளையும் பிடிச்சுக்கிட்டு 'உங்களுக்குக் குணமாயிடும்'னு சொல்லு... அந்த ஒரு வார்த்தை போதும்."

வர்ணா திரும்பிப் படுக்கையில் கோமா ஸ்டேஜில் சலனமில்லாமல் படுத்திருந்த திலகத்தைப் பார்த்தாள். வற்றிப்போன அந்த உடம்பில் உயிர் இன்னமும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு அடையாளமாய் மார்புப்பகுதி லேசாய் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தது. வலது கையின் மணிக்கட்டுப் பகுதியில் க்ளுக்கோஸ் ஊசி செருகப்பட்டிருந்தது..."

"போம்மா... போய் அந்த அம்மாவைத் தொடு..."

வர்ணா தயக்க நடையோடு திலகத்துக்கு அருகே போய் நின்றாள். வெளிறி துவண்டு போயிருந்த அந்தக் கையை மெல்லப் பற்றினாள்.

● ● ●

டாக்டர் சந்திராதேவி மேஜையின் மேல் இருந்த அழைப்பு மணியைத் தட்ட நர்ஸ் ஒருத்தி எட்டிப் பார்த்தாள்.

"எஸ்...டாக்டர்..."

"அந்த ரிஸ்க் கேடர் ஃபைலை கொண்டுட்டு வா..."

நர்ஸ் மறைந்து அடுத்த இரண்டு நிமிஷங்களுக்குள் கையில் ஒரு ஃபைலோடு உற்பத்தியானாள். சந்திராதேவி அந்த ஃபைலை வாங்கிப் புரட்டிக்கொண்டே சொன்னாள்: "இது ரிஸ்க் ஆபரேஷன்ஸ் சம்பந்தப்பட்ட ஃபைல். உயிருக்கு ஆபத்தாக முடியலாம்னு நினைக்கிற ஆபரேஷன்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து ஹாஸ்பிடல் விதிகளின்படி நாங்க ஒரு கையெழுத்தை வாங்கிக்குவோம். அதன்படி கருக்கலைப்புக்காக வந்த பூவிழியை அபார்ஷனுக்கு உட்படுத்தறதுக்கு முன்னாடி அவகிட்ட இந்த ஃபாரத்துல கையெழுத்து வாங்கிட்டோம்."

சந்திராதேவி ஃபைலை புரட்டுவதை நிறுத்தி ஒரு தாளை எடுத்து நீட்டினாள்.

"இந்த பேப்பரைப் பாருங்க."

நீலமேகம் வாங்கிப் பார்த்தார். ஆபரேஷன்போது உயிரிழப்பு ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை நானே ஏற்கிறேன் என்கிற வரிகளுக்குக் கீழே பூவிழியின் கையெழுத்து தெரிந்தது.

டாக்டரம்மாள் கேட்டாள்.

"அது உங்க டாட்டர் பூவிழியோட கையெழுத்துத்தானே...?"

நீலமேகம் இருட்டடித்த முகத்தோடு தலையாட்டினார்.

"ஆமா..."

"இப்பவாவது நம்பறீங்களா...?"

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை டாக்டரம்மா..."

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த இன்ஸ்பெக்டர் பலராமன் குறுக்கிட்டார்.

"டாக்டர்! எந்த பேரண்ட்ஸுக்குமே தன் பொண்ணைப் பத்தி ஒரு உயர்வான அபிப்பிராயம் இருக்கும். அது மாதிரித்தான் நீலமேகமும் தன் பொண்ணைப் பத்தி நினைச்சிருக்கார். இது அவரே எதிர்பார்க்காத ஒரு அதிர்ச்சியான விஷயம். நீங்க சொன்ன மாதிரி பூவிழி கொலை செய்யப்படாமே இருந்திருந்தா இந்தக் கருக்கலைப்பு விவகாரம் வெளியே வந்தே இருக்காது."

நீலமேகம் தொண்டையில் அடைத்துக் கொண்ட துக்கத்தோடு கேட்டார்.

"பூவிழி இங்கே வந்தபோது அவகூட வேற யாராவது இருந்தாங்களா டாக்டர்...?"

"யாரும் இல்லை. அவ மட்டும்தான் தனியா வந்திருந்தா..."

இன்ஸ்பெக்டர் பலராமன் தன் சர்ட் பாக்கெட்டிற்கு கையைக் கொண்டுபோய் ஒரு கவரை எடுத்துப் பிரித்தார்.

"டாக்டர்... இந்த ஃபோட்டோவைப் பாருங்க."

சந்திராதேவி, பலராமன் நீட்டிய ஃபோட்டோவை வாங்கிப் பார்த்துவிட்டு முகத்தில் திகைப்பைக் காட்டினாள்.

"என்ன இன்ஸ்பெக்டர் இது, சுக்கல் சுக்கலா கிழிபட்ட ஒரு இளைஞனோட பாஸ்போர்ட் ஃபோட்டோவை ஒட்டிக் கொண்டு வந்திருக்கீங்க..."

"டாக்டர்..! இந்த ஃபோட்டோ பூவிழியோட ஆபீஸில் அவளோட பர்ஸனல் மேஜையின் இழுப்பறைக்குள்ளே ஒரு தபால் கவரில் இருந்தது. கிழிபட்ட ஃபோட்டோவோடு கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட ஒரு ரெண்டு வரிக் கடிதமும் இருந்தது."

"அந்த லெட்டர் இருக்கா...?"

"இதோ..."

பலராமன் கவருக்குள் இருந்த அந்தக் கடிதத்தாளை எடுத்து நீட்ட சந்திராதேவி வாங்கிப் படித்துப் பார்த்தாள்.

**பிரதாப்!**

**குட்பை...யூ...நீ எனக்குக் கொடுத்த உன் போட்டோ உனக்கே திரும்பி வருகிறது. சுக்கல் சுக்கலாக கிழிபட்டு உன் போட்டோ மட்டும் அல்ல. என் இதயமும்தான்.**

**இப்படிக்கு
அன்பில்லாத பூவிழி.**

நீலமேகத்தை சந்திராதேவி ஏறிட்டாள். "இந்த பிரதாப் யார்ன்னு உங்களுக்குத் தெரியலையா...?"

"தெரியலையே..."

"இந்த பிரதாப் யார்ன்னு கண்டுபிடிச்சுட்டா பூவிழி சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளும் வெளியே வந்துடும்னு நினைக்கிறேன் அதுவுமில்லாமே..."

டாக்டரம்மாள் மேற்கொண்டு பேச்சைத் தொடரும் முன்பே மேஜைமேல் இருந்த டெலிஃபோன் விட்டு விட்டு கனைத்தது. ரிஸீவரை எடுத்தாள்.

"எஸ்..."

"டாக்டர் சந்திராதேவி?" ஒரு ஆண்குரல் கேட்டது.

"ஹோல்டிங்..."

"டாக்டர் உங்களைப் பார்த்துப் பேச இன்ஸ்பெக்டர் பலராமனும் பூவிழியோட அப்பா நீலமேகமும் அங்கே வந்திருக்காங்களா...?"

"வந்திருக்காங்க..! நீங்க யாரு...?"

"என் பேர் பிரதாப்..."

(தொடர்ந்து வரும்)


---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர்.சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

அவரது நடவடிக்கைகளில் மூழுக்க மூழுக்க சந்தோஷம். பெருமிதம். எட்டிப் பிடிக்க நினைத்த இடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற மகிழ்ச்சி. "வீட்டுக்கு ஒருநாள் வாங்க, கண்டிப்பா?" என்று சொல்லிவிட்டு, டிக்கி நிறைய பழக் கூடையுடன் காரை ஓட்டிச் சென்றார்.

எனக்கு சில நினைவுகள். "எனக்குப் பணக்காரன்தான் புருஷனா வரணும்னு அவசியமில்ல. மக்கடையில் டேபிள் துடைக்கிறவரா இருந்தாலும் நான் சந்தோஷமா வாழ்வேன். என்னை, என் உணர்வுகளை மதிக்கிறவன் புருஷனா வரணும்" என்று எதிர்பார்த்த அந்த நடிகை, இன்று எதிர்பார்ப்புகள் நிறைவேறாமலேயே எப்படி சந்தோஷமாக இருக்க முடிந்தது?

கொஞ்ச நாள் போனது. நான்



# தர்ம யுத்தம் 05

இயக்குநர் ஆகிவிட்டேன். நான் இயக்கிய முதல் படம் 'உணர்ச்சிகள்' பாதி வளர்ந்திருந்த நிலையில், 'நியூ இரா' லேபரட்டரியில் ரஷ் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம்.

ஆபரேட்டர் ரூமிற்கு ரஷ் சென்றுவிட்டது. திடீரென்று தியேட்டர் ஆபரேட்டர் குப்புசாமி வந்து, "சார், நம்ம ரஷ் கொஞ்சம் நேரம் கழிச்சுப் பார்க்கலாமா?" என்றார்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

அந்த நடிகையின் பெயரைச் சொல்லி, "இப்போது மலையாளத்தில் அவர் மிகவும் பிஸி. ஒரே ஒரு ஸாங் பார்க்கறதுக்காக வர்றாங்க. அவங்க பார்த்து முடிச்ச பிறகு நாம ரஷ் பார்க்கலாமா?" என்று கேட்டார்.

"அவர் நமக்குத் தெரிந்த நடிகை. பார்த்து விட்டுப் போகட்டும்." என்றேன். நாங்கள் காத்திருந்தோம். பக்கத்தில் இருந்த நண்பர் சொன்னார். "இப்போது அந்த நடிகை தமிழ்ப்படம் ஒன்றில் நடித்துக்கொண்டிருக்கிறார். அந்தப் படம் வெளிவந்தால் மிகப் பெரிய வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பின்னால் தமிழ் திரையுலகிலும் மிகப் பெரிய ரவுண்ட் வருவார்" என்றார்.

எனக்குக் கேட்கக் கேட்க சந்தோஷமாக இருந்தது.

சிறிது நேரத்தில் மூன்று கார்கள் வந்தன. ஒன்றிலிருந்து அந்த நடிகை. மற்ற இரண்டு கார்களிலிருந்து சம்பந்தப்பட்ட தயாரிப்பாளர், இயக்குநர்.

கூட்டமாக மாடி ஏறி வந்தார்கள். நான் சிகரெட் பிடித்தபடி நின்றிருந்தேன்.

இப்போது அந்த நடிகையின் நடவடிக்கைகளில் ஒரு அவசரம். பரபரப்பு. வேகமுடனும் மாடியேறி வந்தார். என்னை பார்த்தார். ஒரு புன்னகை கீற்று. லேசான தலையாட்டல். உள்ளே போய்விட்டார்.

எனக்கு ஏதேதோ உணர்வுகள் சொல்லத் தெரியவில்லை.

பாடல் காட்சியைப் பார்த்து விட்டு வெளியே வந்த அந்த நடிகை, மிகவும் வேகமாகப் படியிறங்கிப் போய், காரில் ஏறிச் சென்றுவிட்டார். உடன் வந்தவர்களும், அந்த வேகத்திற்கு ஈடுகொடுத்தார்கள். நாளை வெளியூரில் படப்பிடிப்பாம். விமானத்தை மிஸ் பண்ணி விட்டால் ரயில் பிடித்துப் போகவேண்டுமாம். அதுதான் இந்த அவசரம் என்று அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

✦✧✺

ஒருநாள் கமல் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அந்த அதிர்ச்சி செய்தி வந்தது. வெளிநாட்டிற்குச் சென்று திரும்பிவரும் வழியில் விமான விபத்தில் அந்த நடிகையும், அவர் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு, மூன்று பேரும் இறந்துவிட்டதாக.

நானும், கமலும் போக் ரோட்டில் இருந்த அந்த வீட்டிற்குச் சென்றோம். அங்கே அவரைப் பார்க்க முடியவில்லை. சவப்பெட்டிகள்தான் இருந்தன.

மாலையைப் பெட்டியின் மீது வைத்துவிட்டு, திரும்பி வரும்போது, என் மனதிற்குள், கடந்தகால நினைவுகள் அத்தனையும் வரிசையாக வந்து போயின.

**இதுவும் ஒரு நடிகையின் கதைதான்**

வாழ்வை எங்கோ தொடங்கி, எதற்கோ ஆசைப்பட்டு, வேறு ஏதோ கிடைத்துவிட்ட நிலையில், மனதைத் தேற்றிக்கொண்டு, அதனை ஏற்றுக் கொண்டு, அந்த வாழ்விலும் சந்தோஷம் காணமுடியும் என்று வாழ்ந்து, அந்த சந்தோஷத்தையும் பூரணமாக அனுபவிக்க முடியாமல் போய்விட்ட அந்தப் பெண்ணை நினைத்து வருந்தினேன். இல்லை, கலங்கினேன்.

'தற்கொலைக்கு முயற்சி பண்ணினேன், சாவு என்னை ஏமாத்திடுச்சு' என்று சொன்ன அந்தப் பெண் இடையில் 'சாக நான் விரும்பல இப்ப சந்தோஷத்த அனுபவிக்கணும்' என்று சொன்ன அந்தப் பெண், பழக்கடையில் என்னைப் பார்த்து 'மலையாளத்துல பிஸியாகத்தான் இருக்கேன். ஆனா தமிழ்ல ஒரு படத்துல நடிக்கணும்' என்று ஆசைப்பட்ட அந்தப் பெண், தன் ஆசை நிறைவேறுவதைப் பார்க்க முடியாமலே, போய்விட்டார்.

அவர் நடித்திருந்த அந்தத் தமிழ்ப் படம் வெளிவந்தது.

எதிர்பார்த்தபடியே வெற்றியும் பெற்றது. ஆனால், அந்த வெற்றியைக் கொண்டாட நடிகை இல்லை.



அந்த நடிகையின் பெயர் ராணி சந்திரா. அவர் நடித்து அதை அவர் பார்க்காமலே வெற்றிபெற்ற படத்தின் பெயர் 'பத்ரகாளி'.

தமிழில் மிகப் பெரிய ரவுண்ட் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டவர், வேறு எங்கோ சென்றுவிட்டார். எங்கிருந்தோ, யாராலோ, எதற்காகவோ, எப்போதோ அனுப்பப்படுகிறோம். எங்கிருந்தோ யாராலோ, எதற்காகவோ, எப்போதோ அழைக்கப்படுகிறோம். அந்த வந்த முகவரியும் அனுப்பப்படவேண்டிய முகவரியும் அட்ரஸும் நம் அறிவுக்கு எட்டவே இல்லை. ஒருவகையில் அட்ரஸ் இல்லாத கடிதங்களாக அலைந்து திரிந்து அலைக்கழிக்கப்பட்டு, தன்னைப் பற்றி எதுவுமே தெரியாத அநாமதேயக் கடிதத்தின் வாழ்வுதான் மனித வாழ்வா?

(அனுபவங்கள் தொடரும்)

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
... வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
... ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

02

அவர்களுக்கு பதில் ஆளுநர் வரப் போவது நன்றாய்த் தெரியும். தெரிந்த தினால்தான் சரியான சமயத்தில் வண் டியை இழுத்தார்கள்.

அவர்களுக்கு அந்தப் பதில் ஆளு நரிடத்தில் வேலை இருந்தது. அது பொலிஸ்காரனுக்கு எப்படித் தெரியும்? நேரமோ பறந்து கொண்டிருந்தது.

பதில் ஆளுநரின் பாதுகாப்புக்காக நிற்கும் பட்டாளத்தார் அங்கு ஓடிவந்திருப்பார்கள். இவ்வாறெல்லாம் எண்ணமிட்டான் தான்பிரீன்.

பொலிஸ்காரனை வார்த்தைகளால் பய முறுத்திக்கொண்டே வேலையை நிறை வேற்றி வந்தான்.

அவன் வேலை என்ன? உரவண்டியை வீதியில் இழுத்துச்சென்று ஸ்டேஷனிலிருந்து கார்கள் வரும்போது முதல் மோட்டாரை விட்டுவிட்டு, இரண்டாவது மோட்டாருக்கு முன்னால் வண்டியைத் தள்ளி வழியை மறித்து நிறுத்திவிட வேண்டும். அதற்கு உதவியாக மற்ற இரு நண்பர்களும்கூட இருந்தனர்.

பொலிஸ்காரன் கடைசிவரை தன்னு டைய கூக்குரலை நிறுத்தாததைக் கண்டு வீதியின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒருவன், தான்பிரீனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன் கையிலிருந்த ஒரு வெடிகுண்டைப் பொலிஸ்காரன் மீது குறி வைத்து எறிந்துவிட்டான்.

இது பொருத்தமில்லாத வேலை, ஏனென்றால் குண்டோசை கேட்டால் லோர்ட் பிரெஞ்ச் அந்தப் பாதையிலேயே வராமல், வேறு ஸ்டேஷனுக்குப் போய்விடக் கூடும். அல்லது இராணுவத்தார் அங்குவந்து கூடிவிடக்கூடும். முன்னேற்பாடுகள் எல்லாம் மாற்றப்பட்டு விடும்.

இவை ஒன்றையும் கவனி யாது அவ்வாலிபன் ஆத்திரத்தில் குண்டை எறிந்து விட்டான். நல்லவேளையாக அது பொலிஸ்காரனுக்கு அதிக காயத்தை உண்டாக்கவில்லை. அவன் தலையில் மட்டும் சிறிது காயப்படுத்தியது.

தான்பிரீனும் அவன் நண்பர்களும் ஒரு நிமிஷத்தையும் வீணாக்கக் கூடாதென் றும், வருவது வரட்டும் என்றும் துணிந்து நின்றனர்.

பதில் ஆளுநரின் சாரணன் ஒருவன் மோட்டார் சைக்கிளில் முன்னதாகச் சென் றான். அடுத்தாற்போல ஒரு கார் வந்தது.

பதினொரு பேர்களும் பல திசைகளி லிருந்தும் அதன்மேல் சுட ஆரம்பித்தனர். உடனே வண்டியிலிருந்தவர்களும் எதிர்த்துச் சுட்டனர்.

ஒரு குண்டு தான்பிரீனுடைய தலையில் பட்டு அவனுடைய தொப்பியை அடித்துக் கொண்டு போய்விட்டது. தலையில் காய மில்லை.

கார் சென்ற வேகத்தில் அதனுள் யார் யார் இருந்தனர் என்பதைக் கவனிக்க முடியாது போயிற்று. வெளியே நின்றவர் களுக்கு அவர்களைப் பற்றிய கவலையும் இல்லை. ஏனெனில் இரண்டாவது காரில் தான் பதில் ஆளுநர் வருவார் என்று அவர் களுக்குத் தெரியும்.

முதல் காரைச் சுட்டால் அதிலுள்ளவர் கள் அதை வேகமாய் ஓட்டிச்சென்று விடு வார்கள். பின் சாவகாசமாக இரண்டாவது காரை எதிர்க்கலாம் என்பது அவர்கள் எண்ணம். அவர்கள் எண்ணியபடியே முதல் கார் வாயுவேகத்தில் பறந்து சென்றது.

தான்பிரீன் உரவண்டியை வீதியை மறித்து நிறுத்திவிட்டான். இரண்டாவது காரும் வந்துவிட்டது. தான்பிரீனும் அவனு டைய கூட்டத்தாரும் நாலு பக்கத்திலு மிருந்து அதன் மேல் றிவோல்வர்களால் சுட்டனர். வெடிகுண்டுகளையும் வீசி எறிந்தனர்.

கார்மீது நெருப்புமழை பெய்வது போலிருந்தது. ஆனால் காருக்குள்ளிருந்த வர்களும் பதிலுக்குச் சுட ஆரம்பித்தார்கள். காரிலிருந்தவர்களிடம் யந்திரத்துப்பாக்கியும் இருந்தது. அதனாலும் நீண்ட துப்பாக்கிகளா லும் அவர்கள் சுட்டனர்.

வெளியே நின்றவர்களிடம் றிவோல்வர் களும் வெடிகுண்டுகளுமே இருந்தன.

தான்பிரீனும் அவனுடைய வண்டிப் பக்கம் நின்ற இருவரும் மிகுந்த அபாயகரமான நிலையிலி ருந்தனர். பகை வருடைய துப்பாக்கிகள் அவர் களைக் குறி வைத்துச் சுட்டன.

அத்துடன் ஓடைப்புறத்திலும், மற்ற இடங்களிலும் சூழ்ந்து நின்று கொண்டிருந்த அவர்களுடைய நண்பர் களின் குண்டுகளே அவர்களைக் கொன்று விடக்கூடும். ஆயினும், அவர்கள் பகைவர் களுக்கு மிக நெருக்கமாக நின்று போராட வேண்டியிருந்தது.

இவர்கள் மூவரும் வண்டிக்குப் பின் னால் மறைந்து நின்று கொண்டிருந்தார் கள். அந்த வண்டி எதிரி களுடைய குண்டுக ளால் தூள் தூளாகப் பிய்ந்து ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தது.

ஒரு பக்கம் கூரிய அம்புகள் போன்ற மரக்குச்சிகள் பாய்ந்தன. ஆனால் குண்டுகள் ஆட்களைத் தவிர மற்றெல்லா வற்றையுமே துளைத்தன. அந்த வேளையில் எதிர்ப்பக்கத் திலிருந்து பகைவர்களுக்கு உதவியாக

## தமிழில் ப.ராமஸ்வாமி

வேறொரு கார் விரைந்து வந்தது. அதிலிருந்தவர்களும் சுட ஆரம்பித்தார்கள்.

தான்பிரீன் கூட்டத்தார் இரண்டு கொள் ளிக் கட்டைகளுக்கு இடையில் அகப்பட்ட எறும்புக் கூட்டத்தைப்போல் ஆகிவிட்டனர். ஆயினும் சிறிதும் மனம் தளராது அவர்கள் அரும் போர் புரிந்து வந்தனர்.

அப்பொழுது திடீ ரென்று பகைவரின் குண்டொன்று தான்பிரீனுடைய இடது காலில் பாய்ந்தது. அவன் காலில் குண்டு பாய்ந்ததை உணர்ந் தானேயொழிய அது பாய்ந்த இடத்தைக் கூடக் குனிந்து பார்க்க வில்லை. சுடுவதிலேயே கண்ணும் கருத்துமா யிருந்தான்.

> **கடந்த வாரம்**
> ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரை கொல்வதற்கு காத்திருக்கிறார்கள். அயர்லாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிர்ப்புக் காட்டவே இந்த நடவடிக்கை.
> **இனி...**

கார்களிலிருந்து ஆங்கிலேயர் பன்னிரண்டு நீண்ட குழல் துப்பாக்கிளாலும் ஒரு யந்திரத் துப்பாக்கியாலும் சுட்டு வந்தனர். தான்பிரீன் கூட்டத்தார் றிவோல்வர் முதலிய சிறு ஆயுதங்களுடன் சிறிதும் தளராது எதிர்த்து நின்றனர்.

ஆங்கிலேயர் சரியாகக் குறிவைத்துச் சுட்டால், வெளியே நின்ற பதினொரு பேர்களும் ஒரு கணத்தில் இறந்து வீழ்ந் திருப்பார்கள். ஆனால் அவர்களுடைய கைகளும் கால்களும் நடுங்கும்பொழுது அவர்ளுக்குக் குறி எப்படி வாய்க்கும்!

இவ்வாறு வெகுநேரம் அருஞ் சமர் நடந்தது. திடீரென்று பகைவரில் ஒருவன் குறி பார்த்து மார்ட்டின் ஸாவேஜைச் சுட்டு விட்டான். குண்டு அவன் உடலில் தைத்து, அவன் குற்றுயிராய்ச் சாய்ந்துவிட்டான்.

சில நிமிஷங்களுக்கு முன்னால் அயர் லாந்தைப் பற்றியும் அதன் விடுதலையைப் பற்றியும் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டி ருந்த இளஞ் சிங்கம் போன்ற ஸாவேஜ், ஆங்கிலேயரின் குண்டால் அடிபட்டு அருகே நின்ற தோழன் தான்பிரீனுடைய கைகளில் சாய்ந் தான்.

தான்பிரீன் அவனை மார்போடு அணைத்துக் கொண்டான்.

சுற்றுமுற்றும், எங்கணும் குண்டு மழை பொழிந்துகொண்டி ருந்தது. அந்த நெருப்பு மழையின் நடுவே தாய்நாட்டுக்காகப் போராடி, அந்நியனுடைய குண்டை மார்பி லேந்தி வீரமரணம் அடைய வேண்டுமென்று விரும்பிய ஸாவேஜ் தன் தோழனின் கைகளிலே வீழ்ந்து கிடந்தான்.

தான்பிரீன் அவனை வீதிப்புறத்தில் கொண்டு கிடத்தினான். ஸாவேஜின் மெல்லிய இதழ்கள் அசைவதைக் கண்டு அவன் ஏதோ சொல்ல விரும்புவதாக எண்ணி, அவன் வாயில் செவி வைத்துக் கேட்டான். "என் காரியம் முடிந்து போயிற்று! தோழா! போரை விடாது நடத்துங்கள்!" என்று மெல்லிய குரலில் ஸாவேஜ் கூறினான்.

ஆயிரம் இடிகள் விழுவதுபோல் நாலுபக்கத்திலும் குண்டுகள் விழுகின்றன. காது செவிடுபடும்படியான ஓசை. இரத்த வெள்ளத்திலே ஒரு வாலிபன் மிதந்து கொண்டிருக்கிறான்.



சில நிமிஷங்களில் அவன் அந்தமில் லாத உறக்கத்தில் ஆழ்ந்து போகின்றான். இடையில் தோழா போரை விடாது நடத்துங்கள்! என்று மெல்லக் கர்ஜிக் கிறான். இந்தக் காட்சியை யாரால் மறக்க முடியும்.

இருபத்தொரு வயதான இளஞ் செல்வன் ஸாவேஜ், தேசத்திற்கு உழைக் கவே ஜென்மமெடுத்ததாகக் கருதி, தேசத்திற்காக உயிர்ப்பலி கொடுக்க முன் வந்தவன். மூன்று வருடங்கள் அரும் போராட்டங்கள் செய்துவிட்டு இப்பொழுது மார்பிலே குண்டு தாங்கி வீழ்ந்துவிட்டான்.

இறந்த தோழனுக்கு அனுதாபம் காட்டி நிற்கவேண்டிய நேரம் அது வன்று. ஆதலால் தான்பிரீன் மறுபடியும் போராடச் சென்றான். அவனுடைய காலிலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டி ருந்தது.

எவ்விடத்தில் தப்பி நின்று போராட லாம் என்று பார்த்தால் எங்கும் வழி காணப்படவில்லை. எனினும் தைரியத் தைக் கைவிடாது அவன் கெல்லியின் விடுதிக்குப் பின்னால் சென்று அங்கி ருந்து சுட ஆரம்பித்தான்.

(பயணம் ...தொடரும்)

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 27

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்



இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—

தன் பக்கத்தில் மதன்லால் உட்கார்ந்திருப்பதையும் ஒரு பக்கத்தில் விஜயா வேதாச் சலம் பிறந்த கோலத்தில் தூங்குவதையும் அப்போதுதான் அவள் பார்த்தாள்.

அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அழவேண்டும்போல் தோன்றிற்று. இரவில் இருந்த மனோநிலை தளர ஆரம்பித்தது.

வெளியில் இருந்தவாறே, 'போக லாமா!' என்று கேட்டான் குமாரசாமி.

அவள் பாத்ரூமிற்குச் சென்று அழுத படியே முகத்தைக் கழுவிக்கொண்டாள்.

விஜயா வேதாசலம் ஆடையை எடுத்து அணிந்து கொண்டாள்.

மூவரும் காரில் போய்க்கொண்டிருந்த போதுதான், லலிதாவின் கழுத்தில் இருக் கும் சங்கிலியைப் பார்த்தான் குமாரசாமி.

"என்ன மதன்லாலின் இரவுப் பரிசா?" என்றான்.

அப்போதுதான் தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கவனித்த லலிதா அதைக் கழற்றித் தூக்கி எறியப்போனாள்.

பளிச்சென்று அவள் கையைப் பிடித்துக் கொண்ட குமாரசாமி, "இதில் என்ன தப்பு? சும்மா போட்டுக்கொள்!" என்றான்.

இரவில் ஏதேதோ நினைத்து மயங்கி உடன்பட்டுவிட்ட லலிதா, இப்போது தன் எதிர்காலத்தை எண்ணிப் பயப்படத் தொடங் கினாள்.

குமாரசாமியிடம் இனித் தனக்குள்ள மரியாதை கிடைக்காது என்பதெல்லாம் இப்போதுதான் அவளுக்குத் தோன்றிற்று.

"சீ! பைத்தியம்! நான் இதைத் தப்பாக நினைக்கவில்லை! நானும் சம்மதித்துத் தானே உன்னை ஆடச் சொன்னேன்!" என்று அவளை அமைதிப்படுத்தினான் அவன்.

பல பெண்களை நாடுவதில் ஆண் களுக்குக் களங்கமில்லை; ஆனால் பெண் ணின் நிலை அப்படியல்லவே?

இப்போது விஜயா வேதாசலத்தின் மேலேயே அவளுக்குக் கோபம் வந்தது.

'சந்தர்ப்பம் கிடைத்ததால்தானே தவறு செய்துவிட்டோம். அந்தச் சந்தர்ப்பத்தையே உண்டாக்கியவள் இவள்தானே!' என்று எண்ணினாள் லலிதா.

குமாரசாமியோ தன் னோடிருந்த இளம் பெண்ணைப் பற்றிய பரவசத்தில் ஆழ்ந்திருந்தான்.

அவள் ஒரு மார்வாரிப் பெண். அவளது உண்மைப் பெயர் என்னவோ! செல்லமாக 'ராஜி' என்று அழைத்தார்கள். பஞ்சுபோன்று மேனியும், பளபளப்பான முகமும், மிருதுவான ரப்பரைப் போன்ற உதடும், அவளது நீண்ட கூந்தலும், இனிய குரலும் உண்மையிலேயே அவனை மயங்க வைத்துவிட்டன.

அவன் லலிதாவிடம் திரும்பி, "இதோ பார்! நானும், நீயும் கணவன் மனைவியாகி விட்டோம். ஆயினும் பம்பாயில் இருந்தபடியே இந்த மாதிரி வாழ்க்கை தான் வாழப்போகி றோம். நீயும் தைரியமாக இதை ஏற்றுக் கொண்டுவிடு. நான்தானே உன்னைப் பற்றிக் கவலைப்படவேண்டும்! வேறு யாரைப் பற்றி நமக்குக் கவலை? வாழ்க்கையை நன்றாக அனுபவிப்போம்!" என்றான்.

லலிதா ஆறுதலடைந்தாள். அவளது மனோநிலை குழப்பமடைந்ததற்குக் காரணமே தான் நடந்துகொண்டது களங்கம் என்பதன்று; குமாரசாமி எங்கே தன்னை விட்டுவிடு வானோ என்ற பயமே! இனி அவன் சொல் கிறபடி நடந்தால், அவனோடு தொடர்ந்து வாழலாம் என்று அவள் ஆறுதலடைந்தாள்.

விருந்தினர் விடுதிக்கு வந்தவுடனேயே கொஞ்சம் காலை உணவை அருந்திவிட்டு மூவருமே நிம்மதியாகத் தூங்கத் தொடங்கி னார்கள்.

இரவினில் ஆடினால் பகலினில் தூங்கத் தானே வேண்டும்!

'காலையில் நன்றாகத் தூங்கிவிட்டால் மதியத்தில் மார்வாரிப் பெண் ராஜியின் வீட்டில் உற்சாகமாக உரையாடலாம்' என்று குமாரசாமி தூங்க ஆரம்பித்தான். பையில் இருந்த விசிட் டிங் கார்டை பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டான்.

ஏழு மணிக்குப் படுத்தவர்கள் பன்னிரண்டு மணிக்குத்தான் விழித்தார்கள்: விழித்த உட னேயே நன்றாகக் குளித்துவிட்டு தன்னை அழகுபடுத்திக் கொண் டான் குமாரசாமி.

மார்வாரிப் பெண் ணின் வீட்டுக்குப் போகும்போது லலிதா வையும், விஜயாவை யும்அழைத்துச் செல்ல லாமா? வேண்டாமா என்பதே அவனுக்குள் பெரும்போராட்டமாக இருந்தது.

இரவிலே தான் எந்தப் பெண்ணோடு இருந்தோம் என்பது லலிதாவுக் குத் தெரியாது. இப் போது அதைக் காட்டிளக்கொண்டுவிட்டால், பின்னால் அடிக்கடி அங்கே போகும்போது குழப்பம் வரும்.

எப்படியாவது ராஜியைத் தினமும் பார்க்க வேண்டும் போல் அவனுக்குத் தோன்றிற்று. அதனால் இரவில் நண்பரான ஒருவரைப் பார்க்கப் போவதாக அவளிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான் குமாரசாமி.

★★

பம்பாய் மெரின் டிரைவில் ஒரு ஆறு மாடிக் கட்டடத்தில் இரண்டாவது மாடியில் அழகான விசாலமான குடியிருப்பு ராஜிக்குச் சொந்தமானது. ராஜியின் தகப்பனாரே அதை அவளுக்கு வாங்கிக்கொடுத்தார். இலட்சக் கணக்கான ரூபாய்களுக்கு அவள் சொந்தக் காரி. ஒரு அலமாரி நிறைய நகைகள் உண்டு.

ஒருவனுக்குக் கட்டுப்பட்ட வாழ்க்கை மட் டும் அவளுக்குப் பிடிப்பதில்லை. அதனால் தான் ஒரு பெரிய பணக்காரரின் மனைவி யாக நடித்து, கீ சேஞ்ச் கொண்டாட்டத்தில் அடிக்கடி கலந்து கொண்டாள்.

மலபார் ஹில் பங்களாவில் அவள் சந்தித்த ஆடவர்களில் குமாரசாமியைப் போன்ற கட்டான இளைஞர் யாரும் இல்லை.

இரவில் நடந்த உறவு அவளுக்கு மிகப் பொருத்தமாக அமைந்துவிட்டது. ஆகவே, மதியம் பன்னிரண்டு மணிக்கெல்லாம் அவள் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு குமாரசாமியை எதிர்பார்த்தாள். டெலி ஃபோன் செய்யலாம் என்று ஃபோன் அரு கில் சென்றபோது குமாரசாமி உள்ளே நுழைந்தான்.

உடம்பெங்கும் சரிகை போட்ட பனாரஸ் சேலை கட்டியிருந்தாள். அவள், அவனைக் கண்டதும், 'ஹலோ!' என்றாள் உற்சாகமாக.

அந்த வீட்டில் அவள் ஒருத்திக்காக இரண்டு வேலைக்காரப் பெண்கள்; ஒரு ஆயா; ஒரு சமையல்காரர்; இரண்டு எடுபிடி ஆட்கள்; இரண்டு கார்கள்; இரண்டு டிரைவர்கள் உண்டு.

(அந்தரங்கம் வரும்)

# வேலைக்காரி



கொல்லைப்புறத்தில் உள்ள கொய்யாமரத்துப் பழங்களை 'இச் இச்' என்று சுவைத்து உண்ணும் அணிலின் அழகைப் பார்த்து மெய்மறந்து நின்றாள் சுமதி.

அதன் முதுகில் உள்ள மூன்று கோடுகளும் ஸ்ரீராமன் தடவியதால் வந்ததென்று பாட்டி சொன்னதை எண்ணியதும் அவளுக்கு வியப்பாக இருந்தது. குருவிகளின் கூச்சல் அவள் மனதுக்கு இதமாக இருந்தது. திடீரென்று நாக்கைக் கடித்துக் கொண்ட சுமதி கொல்லையில் ஒடித்த விறகுளை ஒன்றாகக் கட்டினாள்.

"ஏய் சனியனே, வேலயமுடிச்சிட்டியா? இஞ்சவாடி கொஞ்சம்! ராவுக்குத் தோசைக்கு நல்லா உழுந்த ஆட்டித்தொல. இல்லேன்னா உசிர வாங்கிடுவன்!" ராதிகா சித்தியின் அதிகாரத்தொனி சுமதியின் காதில் தெளிவாகக் கேட்டது!

"எல்லாம் ஆச்சு சித்தி- இதோ வர்ரேன்!" சுமதி குரல் கொடுத்தாள். சனியன் கழுதை கருமுண்டம் என்ற பட்டங்கள் அவள் பெயரோடு சேர்ந்து பல வருஷங்களாகப் பழகிப் போயிற்று.

சுமதிக்கு ஐந்து வயதாய் இருக்கும்போது அவள் அம்மாவை இழந்துவிட்டாள், அவள் கண்ணை மூடுமுன்... "என் பிள்ள பத்திரம் அவள அன்பாப் பாத்துக்கங்க. அவளபடிக்க வச்சி ஒரு ரீச்சராக்கிடுங்க.. செய்வீங்களா." கணவன் சிதம்பரத்தின் கைகளை முத்தமிட்டாள். நாக்குழறியது. சிதம்பரம் சரி என்று தலையசைத்தபோது சுமதியின் தாயின் தலை சாய்ந்தது.

சிதம்பரம் செய்வதறியாது திகைத்தான். தன் மனைவி ரீச்சராக இருந்தபடியால்.. தன் பிள்ளையும் அப்படி வரவேண்டும் என்ற மனைவியின் ஆசையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற தீவிரம் அவனுக்குள் வளர்ந்தது.

சுமதியைப் பாடசாலையில் சேர்த்து விட்டுத் தன் வியாபாரத்தை கவனிக்கத் தொடங்கினான்.

மனைவியில்லாமல் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக் கைதியானான் சிதம்பரம். மீண்டும் கலியாணம் செய்வதில்லை என்பதில் பிடிவாதமாயிருந்தான்.

நண்பர்களும் உறவினரும், 'இரண்டாந் தாரமா ஒரு கலியாணத்தப் பண்ணினா எல்லாத் தொல்லையும் தீர்ந்துவிடும்' என்று அடிக்கடி சொல்லச் சொல்ல காலப் போக்கில் அசைய முடியாத அந்த அம்மி நகர்ந்தது.

**ரூபராணி**

சிதம்பரம் ராதிகாவின் கணவன் ஆனான். அவளுடைய அழகில் அவன் தன்னை இழந்தான். ராதிகாவுக்குச் சுமதியைக் கண்டாலே வெறுப்பு. சுமதியிடம் வேலை வாங்குவதில் ஒரு திருப்தி. அடி, குட்டு, கிள்ளு, வயிற்றுக்குப் போதாத உணவு அனைத்தையும் அந்தப் பிஞ்சு உடல் தாங்கத் தொடங்கியது.

தன் அப்பாவிடம் நெருங்க முடியாத பயங்கரம் அவளைச் சூழ்ந்திருந்தது. அந்தச் சின்ன வயசிலேயே சித்தியின் போக்கறிந்து நடக்க சுமதி பழகிக் கொண்டாள். பள்ளிக்கூடம் போகவேண்டும் ரீச்சராய்வர வேண்டுமென்ற அவள் அன்னையின் ஆசை நீர் மேல் எழுத்தாகப் போனது.

அன்று ஞாயிற்றுக்கிழமை ராதிகா யோசனையில் ஆழ்ந்திருந்தாள். சிதம்பரத்தின் காலடி ஓசையும் அவள் காதில் விழவில்லை.

"என்ன கப்பல்கடலில் மூழ்கியது போல யோசனை" சிதம்பரம் கேட்டுக் கொண்டே அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

"இங்கபாருங்க நமக்கொரு குழந்தை வேண்டாமா? சுமதியின் ராசிப் பொருத்தம் எனக்கு ஒத்துவராதாம். இதனால என் வயித்தில எதுவும் தங்கமாட்டேங்குது அதனால சுமதியை ஒரு பிள்ளை கிடைக்கும் வரை வேறு இடத்தில் விட்டால் நல்லது என்று ஜோஸ்யர் சொன்னார்." ராதிகா தன் மனதில் போட்ட திட்டத்தை ஜோஸ்யர் வாயில் திணித்துவிட்டாள்.

சிதம்பரத்தின் சிறிது நேர அமைதியை அவளால் பொறுக்க முடியவில்லை. "நமக்கொரு பிள்ளை வேணும் என்பதில் அக்கறை இல்லையா?" கேள்வியால் துளைத்து வாதாடினாள் ராதிகா.

சுமதி அனாதை இல்லத்தில் விடப்பட்டாள். மாதங்கள் உருண்டு பல வருடங்களாகின. சுமதி அழகிய பருவ மங்கையாக வளர்ந்து விட்டாள். எனினும் அவளுடைய மனக்காயங்கள் ஆற மறுத்துவிட்டன.

அந்த மடத்து மகிழ மரத்தின் ஒரு தாழ்ந்த கிளையில் கட்டியிருந்த ஊஞ்சலில் அமர்ந்து வேகமாக ஆடுவதில் சுமதிக்குக் கொள்ளை ஆசை. மடத்து வேலைகளை முடித்த பின் எப்போதும் இந்த மகிழ மர ஊஞ்சலில் வந்து உட்காருவாள்.

"கிர்... கிர்..."

ஊஞ்சல் ஆடியது. அந்த இசை அவள் காதுகளுக்குப் பழக்கப்பட்டது. தன்னை மறந்து சிந்தனை வயப்பட்டாள் சுமதி. அவள் அன்னையைப் பற்றிய சின்னஞ் சிறு வயது ஞாபகம் கண்களில் நீராய் வடிந்தது. புன்னகை பூத்த அவள் தாயின் முகம், அவள் ஆசையோடு போட்டுப் பார்த்த பட்டுச் சட்டைகள் அங்கும் இங்கும் தூக்கிச் சுமந்து ஊட்டிய உணவு. காட்டியபாசம் அவள் கண்முன் படமாய் ஓடின.

தன்னை முதுகில் சுமந்து தவழ்ந்து விளையாடிய தந்தை, கேட்டதையெல்லாம் ஆசையுடன் வாங்கித் தந்த தந்தை, அவள் நினைவிலே வந்ததும் அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"அக்கா, உங்களைப் பாக்க யாரோ வந்திருக்காங்க, பெரிய மதர் உங்கள வரட்டாம்!" மாகிறட்மேரி சொன்னதைக் கேட்ட சுமதியின் புருவங்கள் ஆச்சரியத்தில் கேள்விக் குறி ஆகின. வரவேற்பு அறையில் சிதம்பரம், ராதிகா. காலத்தின் கோடுகள் அவர்கள் உருவத்தில் மாறுதல்களை உண்டு பண்ணி இருந்தன. சுமதியை அவர்களால் அடையாளங் காண முடியாதபடி அவளில் இளமை கொலுவீற்றிருந்தது.

சிதம்பரமும் ராதிகாவும் என்றுமில்லாத பாசத்தை வார்த்தைகளால் வரைந்து சுமதியைத் தங்களோடு அழைத்துச் செல்லப் பெரிய மதரின் அனுமதியை நாடினர். தனக்கு நல்ல காலம் பிறந்து விட்ட மகிழ்ச்சி சுமதிக்கு. தன் தந்தையுடன் இருக்க ஆசைப்பட்டாள்.

சுமதி எத்தனையோ ஆவல்களைச் சுமந்து சித்தியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். சித்திக்குப் பிள்ளைகள் இல்லை என்பதை நொடிப்பொழுதில் உணர்ந்து கொண்டாள்.

"ஏய் சுமதி எங்களுக்கு வயசாச்சி. என்னால எந்த வேலயும் செய்ய முடியாது. அல்சர், பிறஷர் என்ற நோய் வேற. எல்லா வேலையையும் நீதான் பாக்கவேணும். அதனாலதான் உன்னக் கூட்டி வந்தம், புரிஞ்சுதா?" அதிகாரத்தொனியில் கூறினாள் சித்தி.

தானாகக் கனியாததைத் தட்டிக்கனிய வைக்கவா முடியும்? அந்த வீட்டின் நிரந்தர வேலைக்காரியாகி விட்டாள் சுமதி.

# கடமை



வெட்கித்துப்போய் சுருண்டு படுத்துக் கொண்டது வேட்டை நாய்! அந்தச் சிறிய காட்டில்கூட தனக்கு இவ்வளவு மதிப்பு இல்லாமல் போய் விட்டதோ என்று ஏமாற்றமாக்கும்!

இரண்டொரு தினங்களுக்கு முன்தான் அங்குள்ள ஒரு சிறுத்தையின் பிடியில் அகப்பட்டு வாயால் கடித்து குதறிவிடாமல் தப்பியதே பெருங்காரியம்! இதை மறந்து மேலும் தனது செல்வாக்கைத் தேட முயன்று கொண்டிருந்தது வேட்டை நாய்!

அங்கே வந்த ஒரு முயலைப் பார்த்து வேட்டை நாய் பேசாமல் விட்டாலும் வெட்கக் கேடு என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு, "ஏன் இப்படி ஓடுகின்றீர்கள்? நான் நிற்பது தெரியவில்லையா?" முயல் சொன்னது.. "அதுதானாக்கும் அன்று சிறுத்தை கடித்துக் குதறியபோது "வள்வள்...!" என்று கத்திக் கொண்டு ஓடினது ஞாபகம் இல்லை போலும்!"

"உண்மைதான்...!" வேட்டைநாய் யோசிக்கத் தொடங்கியது. அதிக நேரம் னிக்காமல் இருக்கமுடியவில்லை!



**என்.கே.தயாளகுணசீலன்-கிரான்**

முயல், அணில், பருந்து, காட்டுக் கோழி, ஏன் நரிகூட இந்த வேட்டை நாய்க்கு அடி பணிந்து நடப்பதைப் பார்த்து வேட்டை நாய்க்கு ஒரு குதூகலமுந்தான்! ஆனால் நாட்டுப் புறங்களில் இருந்து வரும் ஆடு, மாடு, கோழி போன்ற வீட்டுப் பிராணிகள், மிருகங்கள் மட்டும் இந்த வேட்டை நாயை சட்டை செய்வதில்லை! காரணம்.. இவரும் நம்மைப்போலொருவர்தானே இவருக்கு எங்கிருந்து வந்தது இந்தப் பெருமை என்ற எண்ணமாக்கும்!

வேட்டைநாய் அடங்கவில்லை. 'இந்தச் சின்னஞ்சிறிய காட்டில் நான் எத்தனை பேர்களைக் கட்டி அழுகின்றேன்' நம்மவர் தானே எமக்கு எதிரிகளாக மாறி நிற்கின்றார்கள்! இல்லையேல் அந்தச் சிறுத்தை எனக்கு முன் நிற்கவா...? என ஏமாப்புப் பெருமூச்சு விட்டது வேட்டைநாய்!

இறுமாப்பில் ஆழ்ந்து போய்க் கிடந்த வேட்டை நாய்க்கு இந்த நேரம் பார்த்து சிறுத்தை உறுமும் சத்தம் கேட்டு பிராணிகள் அங்குமிங்கும் ஓடத் தொடங்கியதைக் கவ

யோசித்து முடிவுக்கு வருவதற்குள் ஒரு வீட்டு நாய் ஒன்று வந்து நின்றது. "என்ன அதிகமாக யோசிக்கின்றாய்?" ஆறுதலாகக் கேட்டது வீட்டுநாய்!

"இல்லை நான் இந்தக் காட்டில் எவ்வளவு காலமாக இருந்து வருகின்றேன். நேற்று வந்த சிறுத்தை! ...ம்...!" பெருமூச்சு முடிவதற்குள் வீட்டுநாய் சொன்னது:

"வல்லவன் பம்பரம் நிலத்திலும் ஆடும். நீரிலும் ஆடும்! நமது தேசம் எங்கேயோ இருக்கின்றது அவனுடைய திக்கில் நமக்கென்ன வேலை? விரலுக்குத் தக்க வீக்கம் தேவையில்லையா? திறமைக்கு மேலான பெருமை ஆகாது..."

வேட்டை நாய்க்கு உள்ளத்தில் நன்கு பட்டிருக்க வேணும்! ஏதோ முணு முணுத்த வண்ணம் நடந்து சென்றது; காட்டை நோக்கியல்ல நாட்டுப்புறத்தை நோக்கி நமக்கும் இது தேவையற்றவேலை.. வல்லவன் பம்பரம் நிலத்திலும் ஆடும் சலத்திலும் ஆடும்!"

# ஆத்மா

மரம் பேயாட்டம் ஆடியது. சோழகக்காற்று "ஊய், ஊயெ"ன்று பனவோலைகளை அழுத்திச் சுழற்றியது. முருங்கையிலிருந்த காகமொன்று அதிகமாக சத்தம் போட்டது.

அம்மா "போகலையா?" என்றதுக்கு "இந்த வெள்ளனயா?" என எண்ணிய தருமலிங்கம் சுவர் மணிக்கூட்டைப்பார்த்தார். ஆறு, பத்து, பழைய நாட்களாக இருந்தால் இந்நேரம் பொழுதில் கால் பங்கு கழிந்த நேரமாயிருக்கும். நான்கு மணிக்கெழுந்து பல்விளக்கி, சாமி கும்பிட்டு, வீட்டோட சுற்றியுள்ள நிலத்திலை வைச்சிருக்கிற பயிர், பச்சைகளை ஒரு நோட்டம் விட்டுவர, மனைவி மாட்டிலை பால்கறந்து சூடாக காய்ச்சி, சாயம் கலக்கித் தர நிதானமாக ரசித்து சுவைத்தபின், மாட்டை அவிழ்த்தவராக நிலம் வெளுக்கு முன்னர் போய்விடும் அவசரத்தோடு தெருவிலிறங்கினாரென்றால், வயல் வேலை பார்த்து ஒரு நடை வந்திருப்பார் இந்நேரத்துக்கு.

ம், அந்தக்காலம்தான் கனவாக கலைந்து போய் கண்முன்னே மண் தரிசாக கிடக்கிறதே. ஆறு, ஏழு மணிக்கு முன்னர் தெருவிலிறங்கி நடக்கப்பயம். ஏன் வீட்டு வளவுக்குள் நடமாடவும் பயம். அக்கம், பக்கம் ஆளரவங்கள் கேட்கத் தொடங்கினால் தான் எல்லோரும் நிம்மதியாக மூச்சை விடுவார்கள். ஒருத்தர் முகத்தை, ஒருத்தர் பார்த்ததும்தான் பொழுது சரியாகப் புலர்ந்து விட்ட ஆறுதலேற்படும்.

எவர் வாயிலிருந்து என்ன செய்தி வெளிவரப் போகிறதோவென செவிகள் பயத்துடன் காத்துக்கிடக்கும். உணர்ச்சிகளை உள் விழுங்கியவர்களாக விழித்து உழைத்து, உண்டு, உறங்கி காலம் போய்க் கொண்டிருக்கிறது. ஏனெனில் உதயமும், அஸ்தமனமும் அதனதன் நியதிப்படி இயங்கித் தானேயாக வேண்டியுள்ளது.

"ஏண்டா இப்பிடியே கிடந்தா எப்ப போறது? ஏழுமணியாகுமட்டும் இருக்கணுமோ? கொஞ்சம் முன்னாலை போனாலென்ன? அடையாளட்டை காட்டி, காட்டி போய்ச் சேர வேண்டாமோ?" என்று அம்மாவின் சலிப்பான குரலுக்கு சிந்தனை கலைந்தவராக, எழுந்தமர்ந்த தருமலிங்கத்தை பக்கத்துவீட்டு பரமசிவம் மெதுவாக கூப்பிடுவது கேட்டது.

என்னவோ எனப் பயந்தவராக எழுந்து போன தர்மலிங்கத்தின் செவிகளில் விழுந்த செய்தி அவர் உணர்ச்சிகளை சிறிது கொதிக்க வைத்தது. "சே. என்ன மனுசர்"களென சலித்தவண்ணம் உள்ளே நுழைந்த மகனை "என்னடா" வென கேள்வியில் நிறுத்தினாள் அன்னை.

"என்னத்தைச் சொல்றதம்மா... பழைய குருடி கதைதான். சந்தியிலை யாரையோ சுட்டுப் போட்டுக்கிடக்காம். இனி இதுதான் தினச் செய்தி, இவர்களுக்கும் எப்பதான் புத்திவரப்போகிறது. உதவிதான் செய்யாவிட்டாலும் உபத்திரமாவது குடுக்காமல் இருக்கவேணும் என்றதுகூடவா இல்லாமல் போய்விட்டது?"

"என்ன சொல்கிறாய் தருமர்? யாராம் அது?" பயத்தில் குரல் பிசிறியது அவளுக்கு. யாரெவரென்று இன்னமும் பார்க்கலை. ஆனாலும் நம்மவர்கள்தானே? வேறு யாராக இருக்கப்போகிறது? எட்டப்பன் வேலையை நிறுத்தும்வரை இந்த மாதிரியான சாவுகளும் நிற்கப் போகிறதில்லை!"

"அப்படியென்றால்....?" சந்தேகமாக மகனை ஏறிட்டாள் அன்னை.

"அதுதானம்மா!" என்றார் அழுத்தமாக தருமலிங்கம் வேதனையுடன், அவருக்கு போராட்டம் சண்டை, சாவு இவைகளில் உடன்பாடு இல்லையென்றாலும், அவற்றுக்காக தம்மை அர்ப்பணித்தவர்களை எதிர்க்கிற அளவுக்கு வெறுப்பும் கிடையாது. கொண்ட கொள்கை, இலட்சியம் கொண்டவர்களுக்கு பெரிது. அதையடைவதற்கு அவர்கள் முயல்வது அவர்களது உரிமை. அதற்கு எந்த இடையூறும் கொடுக்க அவர் விரும்புவது கிடையாது. மற்றவர்கள் தருவதை நியாயமானது என்று ஒப்புக்



கொண்டதும் கிடையாது. அதையே எல்லோரும் கடைப்பிடித்தால் எத்தனை சாவுகளைத் தடுத்திருக்கலாம்! எப்படிப்பார்த்தாலும் இழப்பு எங்களுடையதே என்பதை இவர்களுக்கு எப்படிப் புரியவைப்பது? இத்தனைகால நெருக்கடிகள், இழப்புக்கள், துன்பங்கள் உணர்த்தவில்லையென்றால் இனி எவர் வந்து இவர்களுக்கு உணர்த்துவது?

உரமாக, உசுப்பி, உத்வேகத்துடனொரு சுழிப்பு சுழித்தெழும்பிய காற்றினமுத்தத்தில் முற்றத்து கறி முருங்கைக் கொப்பு சடசட வென்று சரிந்தது. கரைந்து கொண்டிருந்த காகம் விர்ரென்று பறந்து வேறொரு கொப்பிலமர்ந்து கூர்ந்து பார்த்தது. அவர் கேட்ட செய்தி, அந்தக் காகத்தின் பதற்றம் முருங்கையின் முறிவு அவர் மனசில் சட்டென்றொரு பயவுணர்வைத் தோற்றுவித்தது.

அதே நேரம் கதவு திறந்து ஓடிவந்த கொமினிக்கேஷன் வேலையாள் "ஐயா ஆஸ்பத்திரியிலையிருந்து உங்க மகள் ஃபோன் எடுத்தா. உடனடியாக வாங்க!" அவசரமாக தெரிவித்து ஓடினான், திக்கென்றது, அரக்கப்பரக்க எழுந்தோடினார்.

"அப்பா. அம்மா. உங்களைப் பார்க்கணும், பேசணும்னு துடிக்கிறாப்பா. அவவுக்கு வேண்டிய மருந்து ஸ்டோக்கிலை இல்லையாம். வந்தும் சேர்லை. அதாலை அதாலை. அவ, நீங்க வாங்கப்பா- கெதியாக வாங்க!" என்று மகனின் குரல் அழுகையில் கரைவதிலிருந்து நிலை விபரீதத்தைத் தொட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தார்.

திரும்பி வந்தவர் தாயிடம் "அம்மா வசந்தி ஃபோன் பண்ணியிருக்கிறாள். நான்

**ஜெ. சூரியன்**

முதலிலை சைக்கிளிலை போறன். நீ சின்னவர்களை அழைச்சுக் கொண்டு பஸ்ஸிலை வந்து சேர்!" என்றார் பதற்றமாக.

"ஏன் நீயும் பஸ்ஸிலை வர்றதுதானே?"

"இல்லைம்மா. பூசாரிகள் வந்து போயிருக்கிறார்கள். பேய்கலைத்த விசயம் தெரிந்திருக்கும். ஒவ்வொரு சென்றியிலும் பேயாட்டம்தானாடுவார்கள். சைக்கிளென்றால் நான் விசயத்தைச் சொல்லி விரைவாகப் போயிடுவன். வசந்தி அவசரப்படுத்துவதைப் பார்த்தால் அங்கையும் நிலமை மோசம்போல கிடக்கு." சொல்லியவண்ணம் சைக்கிளை தள்ளி தெருவிலிறங்கினார்.

அந்தக் காலை வேளையிலும் வெயில் சுட்டது. வியர்வை வழிந்தது. களைப்பாக உணர்ந்தார். இரண்டு மூன்று பொயின்டுகளில் சடாரென்று குதித்து மூச்சிரைக்க தன்னவசரத்தைச் சொல்லி அடையாளட்டை காட்டி, தாவியேறி. பெடலை மிதித்துப் போவது பிராண அவஸ்தையாக இருந்தது. போய்ச் சேருமட்டும் அவளுக்கு எதுவும் நடந்துவிடக் கூடாதென எல்லாத் தெய்வங்களையும் வேண்டியவராக சைக்கிளை வேகமாக மிதித்தார். சுழன்றடித்த காற்றுக்கு எதிர்த்திசையில் உழக்கும்போது உயிர் மூச்சை இறுக்கியது. காற்றோடு மேலெழுந்த புழுதி படலமாக கண்களிலறைந்து மறைத்தது. குனிந்து தம்பிடித்து மிதித்தார். அதோ, அதோ தெரிகிறது கடைசி பொயின்ற். இது கடந்துவிட்டால் போதும் ஒரு பிடிபிடித்தால் அரை மணித்தியாலத்தில் மனைவியைப் பார்த்துவிடலாமென எண்ணியவராக இன்னும் வேகமாக கால்களுக்கு வேலை கொடுத்தார்.

குண்டும், குழியுமான ரோடில் சைக்கிள் தன்பாட்டுக்கேறி, விழுந்து போய்க் கொண்டிருந்த போதுதான் அந்தச் சத்தம் கேட்டது. ஒருகணம் ஆடிப்போனார். அவரது ட்யூப் தான் வெடித்தது. 'லபக்'கென்று குதித்தார். அவ்வளவுதான் கடைசிப் பொயின்டில் கொங்கிறீட் கல்லுகளுக்கிடையில் துருத்திக் கொண்டிருந்த குழாய்களிலிருந்து ரவைகள் சீறிப்பாய்ந்து வந்து குனிந்து நிமிர்ந்த தருமலிங்கத்தின் நெஞ்சில் பதிந்து முதுகுவழியாக வெளியேறின.

ஆஸ்பத்திரியில் அவர் வரவுக்காக எமனுடன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த அவர் மனைவிக்கு எமன் கொடுத்த கெடுவை இரக்கமின்றி எடுத்துக் கொண்டு விட்டான். அதைத் தேடி தருமலிங்கத்தின் ஆத்மா அவசரமாகப் பறந்து கொண்டிருந்தது.

# புகழும் நெஞ்சம்

தருவது ரசிகன்



காற்றில் ஈரம் போல
எனக்குள்
உன் நினைவுகள்!

புழுதியில் கிடந்த
புல்லாங்குழல் நான்!

உன் கைகள்
தொட்ட பின்னர்தான்
எனக்குரிய மரியாதை
எனக்கே தெரிந்தது.

எனக்குள் இருந்த
ஜீவிதங்களை
எனக்குப் புரிய வைத்தாய்!

என்னை எடுத்து
வாசித்தவனே,
எனக்குள் உன்னை
நேசித்தவள் நான்!

எனக்கு முகவரி
உன்னால்தான் கிடைத்தது!

எனக்குள் வெளிச்சம்
உன் மூலம்தான்
உற்பத்தியானது!

எனக்குள்
பாய்ந்த ஜீவநதி.
எனக்குள் பொழிந்த
ஜீவ மழை.

எனக்குள் பூத்த
தேவ மலர்.
எனக்குள் கனிந்த
ஜீவகனி.

எல்லாம் நீயே
எதுவும் நீயே!

பஞ்சுப் பொதிக்குள்
தீயை வைத்துவிட்டு
பொத்தி மறைப்பது
சாத்தியமோ?

நெஞ்சுக்குள் உன்னை
பொத்தி வைத்திருந்து
என் காதலை
மறைப்பதும் சாத்தியமோ?

குகையிலிட்ட
விளக்கானால்
வெளிச்ச விலாசம்
வெளியே தெரியாது!

குன்றிலிட்ட விளக்கு
ஊருக்கே தெரியும்!

நம் காதலும்
குன்றிலிட்ட விளக்கானது!

விளக்கை
ஒளித்து வைக்க
தெரியவில்லை!

இப்போது
அந்த விளக்கின்
ஒளியில்தான்
உன்னைத் தேடுகிறேன்!

உன்னைக் காணவில்லை

விளக்கின் சுடர்
வெப்பமாய் சுடுகிறது!

காதலும் ஒரு
சூதாட்டம் என்கிறார்கள்!

உண்மைதானா,
அதனால்தான் இங்கும்
அடிக்கடி இழப்புக்களா?

காமம் கூட
சூதாட்டம் தானே!

ஒன்றை இழந்து
இன்னொன்றைப் பெறும்
சூதாட்டம்!

என்னை இழந்து
உன்னைப் பெற்றேன்!

உன்னைப் பெற
என்னையே
பணயம் வைத்தாடினேன்!

சிலந்தி
தனக்குரிய வலையை
தானே தயாரிக்குமாம்!

என் வலையும்
நானே செய்ததுதான்!

சிலந்தி
சொந்த எச்சிலால்
வலை பின்னுகிறது!

நானோ
நீ தந்த நினைவு
எச்சங்களால்
வலை செய்தேன்!

தன் வலையில்
தானே சிக்கிக் கொள்ளும்
சிலந்திகளும் இல்லாமலில்லை!

என் நிலையும்
அதுவேதான்!

என் வலையே
எனக்கு கண்ணியானது!

என் கண்ணீரே
எனக்கு குருதியுமானது!

நீ என்
பக்கத்திலிருந்த போது
பாகற்காயிலும் தேனூறியது!

நீ இல்லாத
துக்கத்தில் உள்ளபோது
பலாச்சுளையும் கசக்கிறது!

என்னருகில் நீயிருந்தால்
பட்டமரமும் பாலூறும்
உன் பிரிவில் நானிருந்தால்
பாலூறும் மரமும் பட்டுவிடும்!

கறந்த பால்
மடிபுகாது!
வடிந்த கண்ணீர்
விழி புகாது!

ஆனால், ஆனால்
நினைவுகள் மட்டும்
இழக்க இழக்க
மறுபடி மறுபடி
மனதுக்குள்
புகுந்துகொண்டிருக்கும்!

மறப்பதற்கு எதுவுமில்லை
மறக்கக்கூடியதாயும் ஏதுமில்லை!

பசுமரத்தாணியால்
அல்லவா
ஒவ்வொன்றையும்
உள்ளமென்னும்
வெள்ளைத்தாளில்
எழுதிவிட்டு போயிருக்கிறாய்!

பிரிவை விடக்
கொடியது எது?
பிரிவுதான்!

பிரிவுக்கு நிகர்
ஏதுமில்லை!

என் மனக்குளத்தில்
கல்லெறிந்து
குட்டையைக் குழப்புவன
நினைவுகள்!

மஞ்சத்தில் சாய்ந்தாலும்
மார்பில் உன் கனம்!

என் உதடுகளில்
உன். சுவாசம்!

என் தேகமெங்கும்
உன்நினைவுச் சின்னங்கள்!

உன் உதடுகளால்
நான் சுவாசித்த
உயிர்ப்புள்ள
நிமிஷங்களை
உயிரும் மறவாது!

உன் மூச்சுக் காற்று
கலந்த பின்னர்தான்
என் உயிரும்
தன்னை புதுப்பித்துக்கொண்டது!

## இலக்கிய நயம்

இப்போதிருப்பது
உன் உயிர்.
அதனால்தான்
இழந்துவிடாதிருக்கிறேன்!

உன் உயிரை
பத்திரப்படுத்துவதற்காகவே
நான் பத்திரமாகியிருக்கிறேன்!

என்னிடம்
இழப்பதற்கு எதுவுமில்லை
உன் உயிரையும்
உன் நினைவுகளையும் தவிர!

உன்
உயிரை இழப்பதற்கு
எனக்கு உரிமையில்லை!

உன்
நினைவுகளை இழப்பதற்கு
எனக்கு உறுதியில்லை!

உன் உன்னதங்களை
மட்டுமே மீட்டுகிறேன்!

மறந்தும்கூட
உனை இகழ்வதை
என் மனம்
ஒருபோதும் ஏற்காது!

உன்னை
வசை பாட ஆசைதான்!

"இராட்சதா!
பிரிவால் என்னை
பிளக்கிறாயே" என்று
சீறுவதற்கு ஆசைதான்!

ஆனால் நெஞ்சம்
வழி மறிக்கிறது!

கொஞ்சும் குமரா
உன் குறும்புகளையும்
குறைவற்ற அன்பையும்
நெஞ்சம் மறந்தா போகும்?

நெஞ்சம் இயங்குவதே
உன் உயிரால் அல்லவா!"
அதனால் இகழ்வது
பழியல்லவா!
எனவே புகழும் என் நெஞ்சு!

பிரிவுத் துயர் மூட்டத்திலும்
காதலனை நோக மறுக்கும்
காதலியின் நெஞ்சத்தை
திருவள்ளுவரும் காட்டுகிறார்;

**"எள்ளின் இளிவாம் என்று**
**-எண்ணி அவர் திறம்**
**உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு"**

அதிகாரம்: 130, குறள்: 1298.

# சிந்தியா பதில்கள்

**❀அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வீசி தேர்தல் காலத்தில் வாக்குப் பெறுகிறார்களே! இது எம்மிடம் கடன்பட்டது மாதிரித்தானே? இந்தக் கடனை விசுவாசமாக உழைத்து அடைப்பதற்கு முன்வருகிறார்களில்லையே?**

ஏ. ரகுதாஸ், வவுனியா.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான வில்லியம் ஹோல்டர் என்பவர் ஒருவருக்குக் கடன் கொடுத்திருந்தார்.

நீண்ட நாட்களாக கடன் பாக்கி திரும்ப வராது இருந்தமையால், பணத்தைத் தரச் சொல்லி பணிவாகக் கடிதம் எழுதி அனுப்பினார்.

ஒரு வாரத்தில் பதில் வந்தது: "உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் பணிவுடன் கேட்டு எழுதியிருந்த முறை எங்களுக்குப் பிடித்துவிட்டது.

எங்களுக்குக் கடன் கொடுத்தவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளோம்.

1. கண்டிப்பாக உடனே கொடுக்கப்பட வேண்டியவர்கள்.

2. நிதானமாக எப்போது வேண்டுமானாலும் கொடுக்கக் கூடியவர்கள்.

3. பணம் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை.

நீங்கள் மிகவும் கெஞ்சிக் கேட்டதால் உங்களை மூன்றாவது பிரிவிலிருந்து இரண்டாவது பிரிவுக்கு உயர்த்துகிறோம்!" என்று எழுதியிருந்தது. வர்த்தகருக்கு சிரிப்பதாக அழுவதா என்று தெரியவில்லை.

அரசியல்வாதிகள் அந்த வர்த்தகருக்கு வாய்த்த கடன்காரரைவிட உத்தமமானவர்கள். உங்களை மூன்றாவது இடத்திலிருந்து நகர்த்தவே மாட்டார்கள்.

❀❀

**❀ வெற்றி பெறுவதற்கு அடிப்படைத் தேவை என்ன?**

ஆர். காவியா, கொழும்பு-06.

சுய முன்னேற்ற நூல்கள் பல எழுதியவர் நெப்போலியன் ஹில். அவர் சொன்னதைப் படியுங்கள்:

"வீட்டிலிருக்கும் நாய்தான் தன் உடலிலுள்ள பூச்சிகளை நினைத்துக் குரைத்துக் கொண்டிருக்கும். வேட்டை நாய் தன் உடலில் உள்ள பூச்சிகளை நினைத்துக் குரைக்காது. கடமையை மட்டுமே நினைத்துப் பாய்ந்து செல்லும். சிறு பிள்ளைத்தனமானவர்கள்தான், சிறிய குறைகளைச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இல்ட்சியவாதிகள் குறை சொல்லிப் புலம்பாமல், காரியம் ஒன்றையே கருத்தில்கொண்டு முன்னேறுவார்கள்."

காவியா, நீங்கள் இலட்சியவாதியாக முன்னே செல்லுங்கள். வெற்றி தொட்டுவிடும் தூரம்தான்!

❀❀

**❀ இலங்கை அணி அவுஸ்திரேலியாவைச் சாய்த்து விட்டதே?**

கே.எம். கிருஷ்ணன், கொழும்பு-11.

கிரிக்கெட் சூதாட்டம் போன்றது. ஆனாலும் அத் தொடரில் இறுதிப்போட்டி தவிர அனைத்திலும் அவுஸ்திரேலிய அணி வெற்றிகளைக் குவித்து திறமையான அணி என்பதை நிரூபித்திருந்தது. இறுதியாட்டத்தில் இலங்கை அணியும் சிறப்பாகவே விளையாடியது.

❀❀

**❀ 'ஹேராம்' தற்போது வராது என்று கூறப்படுகிறதே?**

கி. ரங்கநாத், வவுனியா.

தீபாவளிக்கு வரும் என்கிறார் கமல்! தமிழகப் பத்திரிகை ஒன்றுக்கு கமல் அளித்த பேட்டியின் சாரம்சத்தை பிசைந்து 'சினி விசிட்'டில் பிரசுரித்துள்ளார்கள் படித்துப் பாருங்கள்.

❀❀

**❀ சிந்தியா எலிக்கு ஏன் வால் இருக்கிறது?**

பி. சரோஜா, கொழும்பு-09.

'கலாட்டா குடும்பம்' நாடகம் பார்த்தீராக்கும்? ஆனாலும் இது பழைய கடிதான். இதோ பதில், "செத்தால் தூக்கிப் போடுவதற்கு!"

❀❀

**★ தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் தேர்தல் பிரசாரத்தில் நடிக நடிகையர் பங்களிப்பு அதிகமாகி வருகிறதே?**

இ. குணசீலன், மட்டக்களப்பு.

சினிமாவில் அரசியல்வாதிகளை புரட்டி எடுத்து ஆவேசப்படுகிறார்கள். தேர்தல் காலத்தில் அதே அரசியல்வாதிகளை புகழ்ந்து பிரசாரத்தில் பிளந்து கட்டுகிறார்களே! இதில் எது நடிப்பு?!

❀❀

**❀ நூதனமான கதையொன்று கூறுங்களேன்?**

வி. கிருஷ்ணராஜ், பதுளை.

நூதனமான கதையோ இல்லையோ, இதில் நூதனமான விஷயம் உள்ளது.

கர்ப்பமாயிருந்த தன் மனைவியை அழைத்துக்கொண்டு ஒருவன் டாக்டரிடம் போனான். டாக்டர் மனைவியைப் பரிசோதித்துவிட்டு, அவளது வயிற்றின்மீது ரப்பர் ஸ்டாம்பால் ஏதோ முத்திரை குத்தி அனுப்பினார்.

கணவன் வீட்டுக்கு வந்ததும் மனைவியின் வயிற்றில் ஏதோ எழுத்துக்கள் இருப்பது போலத் தோன்றவே என்னவென்று ஆராய்ந்தான். ஆனால் எழுத்துக்கள் சிறியதாக இருந்தன. அதனால் ஒரு பூதக் கண்ணாடியை எடுத்துவந்து முத்திரையை உற்றுப் பார்த்தான்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது: "லென்ஸின் உதவியில்லாமல் இந்த எழுத்துக்களை எப்போது படிக்க முடிகிறதோ, அப்போது மீண்டும் மனைவியை என்னிடம் அழைத்து வாருங்கள்!"

❀❀

**❀ அவுஸ்திரேலியாவை வெற்றி கொண்டதை இலங்கை கிரிக்கெட் இரசிகர்கள் கொண்டாடிய ஜோரைப் பார்த்தீரா?**

கி. தர்மலிங்கம், மாத்தளை.

சற்று அதிகமான துள்ளல்தான்! இலங்கை அணி உலக சாம்பியனாக வெற்றி பெற்ற பின்னர் நடந்த போட்டியில் பாகிஸ்தானிடம் இலங்கை அணியும் தோல்வி கண்டதை மறந்து, உலக சாம்பியனை தோற்கடித்து விட்டோம் என்று இம்முறை பூரித்தது கொஞ்சம் உறுத்தலான சமாச்சாரம்.

❀❀



'காதலே சாட்சி' படத்தில் சாந்தினி

**❀ பிரிட்டனில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு பற்றி இலங்கை அரசுக்கு ஏன் இத்தனை அக்கறை?**

பி. சர்வானந்தம், தெகிவளை.

இந்த அக்கறைதான் பிரிட்டிஷ் அரசுக்கே சந்தேகத்தைக் கொடுத்திருப்பதாகக் கேள்வி.

❀❀

**❀ பொதிக்கு ஆதரவு கிடையவே கிடையாது என்று ரணில் கூறிய பின்னரும் "இணக்கப்பாடு செய்யப்போகிறோம்!" என்பவர்களைப் பற்றி உமது அபிப்பிராயம்?**

எஸ். ஏபிரகாம், புத்தளம்.

கலப்படமில்லாத ஏமாற்றுப் பேர்வழிகள். தமிழ் பேசும் மக்களது தொடைகளில் கயிறு திரிப்பதற்கு முயற்சிப்பவர்கள்.

❀❀

**❀ நவீன ஓவியம் என்ற பெயரில் நமக்குப் புரியாமல் வரைவது சரியா?**

ஆர். பிலோமினா, நீர்கொழும்பு.

ஓவியக் கண்காட்சியில் ஓர் ஓவியர் தன்னுடைய ஓவியத்தைக் காட்டி, "இதுதான் என் படைப்புக்களிலேயே சிறப்பானது. இதனை வரையத் தொடங்கும்போது, என்ன வரையப்போகிறோம் என்று தெரியாமலேயே வரையத் தொடங்கினேன்!" என்று கூறினார்.

உடனே கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார் இப்படி:

"வரைந்து முடித்த பின்னர் என்ன என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" ஓவியர் முகம் கோணலாகிவிட்டது.

❀❀

**❀ 'ரோஜாவனம்', 'பூவெல்லாம் கேட்டுப்பார்' இரண்டில் எதில் வாசனை அதிகம்?**

கே. ரவிக்குமார், கொழும்பு-09.

'ரோஜாவன'த்துக்கு அடுத்ததுதான் 'பூவெல்லாம் கேட்டுப்பார்'. இரண்டுமே வாசனையான படங்கள்தான். அதாவது இளமை வாசனை! 'பூவெல்லாம் கேட்டுப்பா'ரில் நடிப்பு வாசனை சரளாவிடம்தான் தூக்கல். மறதிக்கார டாக்டராக ஜமாய்க்கிறார். மனோரமா அளவுக்கு இல்லையானாலும், மனோரமாவின் பின்னர் நடிக்கக்கூடிய, நிலைக்கக்கூடிய நகைச்சுவை நடிகை கோவை சரளாதான்! சமீபத்திய படங்களில் என்னமாய் அசத்தியிருக்கிறார். சரளா சரளம்.

❀❀

**❀ 'சந்திரலேகா' படத்தின் இடையே திடீரென்று 'சம்சாரம் அது மின்சாரம்' படம் வந்து போனதே பார்த்தீரா?**

வி. ரகு, கொழும்பு-06.

சக்தியில் தானே? அறிந்தேன்! தனியார் தொலைக்காட்சிகளும் அரச தொலைக் காட்சிகள்போல பொறுப்பின்றி நடந்து கொள்ளுவது துரதிஷ்டம்.

❀❀

**❀ தனியார் வானொலிகளில் காலைநேர வாள் வீச்சில் மாட்டிக்கொண்டு காயப் பட்டதுண்டா?**

பி. மணிவண்ணன், கொழும்பு-06.

'சக்தி' வானொலி காலையில் பெரும்பாலும் பிரயோசனமாகப் போவதால் கேட்பதுண்டு! பொது அறிவு, குறள் என்று மூளைக்கு வேலையும், தமிழுக்கு இடமும் தருகிறார்கள். பாராட்டலாம்!

❀❀

**❀ புது நடிகைகள் படையெடுக்கிறார்களே நிலைப்பார்களா?**

எம். குமார், கந்தப்பளை.

மலைக்க வைப்பவர்களே நிலைப்பார்கள்.

❀❀

**❀ ஸிம்பாப்வே அணியை பட்டை கிளப்பி விட்டதே இந்திய அணி?**

ஜெ. குருநாதன், வத்தளை.

பழக்கதோசப்படியே மறுநாள் மேற்கிந்திய அணியுடன் வெல்ல வேண்டிய போட்டியை கோட்டையும் விட்டதே தெரியாதா? சிறந்த வீரர்கள் இருந்தும் தரத்தில் அடிக்கடி குறைந்து போவதால் விதி என்று இந்திய அணியின் தலையில் ஆணி கொண்டு அடித்து உறுதியாக எழுதியது யாரப்பா?!

❀❀

(ஸ்போர்ட்ஸ்)

## இந்திய அணிக்கு தலைமை தாங்குகிறார் கங்குலி

கனடாவின் டொரண்டோவில் நடைபெறவுள்ள 'டொரண்டோ கிரிக்கெட் திருவிழா'வில் பங்கேற்கும் இந்திய அணிக்கு அதன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சௌரவ் கங்குலி தலைமை தாங்குகிறார்.

இம்மாதம் 11,12,14ம் திகதிகளில் மேற்கிந்தியத் தீவுகளை எதிர்த்து இந்தியா டொரண்டோவில் விளையாடுகிறது. இந்திய அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கர் முதுகுவலிக்கு சிகிச்சை பெறுவதற்காக அவுஸ்திரேலியா செல்வதால் அவரால் இப்போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

அத்துடன் உதவி கப்டன் அஜய் ஜடேஜா அண்மையில் சிங்கப்பூரில் ஸிம்பாப்வே அணிக்கெதிராக நடந்த போட்டியில் காயமடைந்தார். இதனால் இவரும் டொரண்டோ செல்லமாட்டார்.

இதன் காரணமாகவே கப்டன் பொறுப்பு கங்குலிக்கு வழங்கப்பட்டுள்ளது. உதவி கப்டனாக ராகுல் ட்ராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

டொரண்டோ செல்லும் 15 பேர் கொண்ட இந்திய அணியில் இரு புதிய முகங்கள் இடம்பெறுகின்றனர். ஒருவர் பரோடா துடுப்பாட்டவீரர் ஜேக்கப் மார்டின். மற்றவர் டெல்லியின் மிதவேகப் பந்து வீச்சாளர் அமித் பண்டாரி.



சமீப காலமாக அவ்வளவாகப் பிரகாசிக்காத சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே நீக்கப்பட்டு சகலதுறை ஆட்டக்காரர் ரிஷிகேஷ் கனிட்கர் மறுபடி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 15 பேர் கொண்ட அணி விபரம் வருமாறு:

சௌரவ் கங்குலி (கப்டன்), ராகுல் ட்ராவிட் (உதவி கப்டன்), எம்.எஸ்.கே.பிரசாத் (விக்கெட் கீப்பர்), சடகோபன் ரமேஷ், வினோத் காம்ப்ளி, அமே குரேஷியா, ரொபின் சிங், ரிஷிகேஷ் கனிட்கர், சுனில் ஜோஷி, நிகில் சோப்ரா, தெபஷிஷ் மொஹந்தி, லக்ஷ்மி ரத்தன் சுக்லா, வெங்கடேஷ் பிரசாத், ஜேக்கப் மார்டின், அமித் பண்டாரி.

## கென்யா அணியில் புதுமுகங்கள்

கென்யாவில் நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் ஒருதின கிரிக்கெட் போட்டிகள் இம்மாதம் 25ம் திகதி முதல் ஒக்டோபர் 5ம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் போட்டியை நடத்தும் கென்யா, தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே ஆகிய ஆபிரிக்க நாடுகளும் இந்தியாவும் கலந்துகொள்கிறது.



மோரிஸ் ஒடும்பே

இப்போட்டியில் பங்குகொள்ளும் கென்யா அணியில் 3 புதிய வீரர்கள் அறிமுகமாகிறார்கள். பீட்டர் ஓச்சியங், ஜோஸ்பட் அபாபு, பிரான்ஸிஸ் ஒட்டினோ ஆகிய இளம் வீரர்களான மூவரும் பந்து வீச்சாளர்கள்.

உலகக் கோப்பைப் போட்டிக்குபின் கென்யா கப்டன் ஆஸிப் கரீமும், தீபக் சூடசாமாவும் ஓய்வு பெற்றுவிட்டனர். தற்போது மோரிஸ் ஒடும்பே கப்டனாகவும், ஸ்ரீவ் ரிக்காலோ உதவி கப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பங்களாதேஷில் ஆசிய கோப்பை

அடுத்த ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

16 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன. ரவுண்ட்-ராபின் லீக் முறையில் இப்போட்டிகள் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு இரு அணிகள் தெரிவாகும்.

பங்களாதேஷ் இதற்கு முன் 1988ல் ஆசிய கோப்பைப் போட்டியையும், 1998ல் மினி உலகக் கோப்பைப் போட்டியையும் தனது நாட்டில் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 17

ஆண்டவரால் மனுக்குலத்தை இரட்சிக்கும் பொருட்டு விண்ணுலகிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட திருக்குமாரரான இயேசுபிரான், தன்னைச் சூழ்ந்திருந்த சீடர்களினதும் மக்களினதும் சந்தேகங்களைத் தீர்க்கும் பொருட்டு பல வினாக்களுக்கும் விடை அளித்தார்.

பணியாளர் ஒருவன் அரசரிடம் பட்ட கடனைத் திரும்பக் கொடுக்காமல் ஏமாற்றத் துணிந்தான். ஆனால் அவனுடைய உடைமைகளை விற்றுக் கடனை அடைக்க ஏற்பாடு செய்யுமாறு மன்னர் காவலாளர்களுக்குக் கட்டளை இட்டார். கடன்பட்டவனோ தனது உண்மை நிலையினை எடுத்துக் கூறி மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து, அவனை விடுவித்ததுடன் அவனுடைய சொத்துக்களையும் திருப்பிக் கொடுத்துவிடும்படி ஆணையிட்டார். இக்கதையைக் கூறிய இயேசுபிரான், அவ்வாறு மன்னிப்புப் பெற்ற பணியாளன், தன்னிடம் சிறு தொகை கடன்பட்ட ஒருவனை என்ன செய்தான், என்பதை இவ்வாறு விளக்குகிறார்.

"அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, 'நீ பட்ட கடனைத் திருப்பித் தா' எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.

உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, 'என்னைப் பொறுத்தருள்க; நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்' என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். ஆனால்

விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல், எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்."

இவ்வாறு இயேசுபிரான் கொடுத்த விளக்கத்தைத் தொடர்ந்து மற்றொருவர் இயேசுபிரானிடம், "மணவிலக்குக்கான சான்றிதழைக் கொடுத்து மனைவியை விலக்கி விடலாம் என்று மோசே கூறியிருக்கிறாரே?" என்று வினவினார். இவ்வினாவுக்கும் பொருத்தமான விடையை இயேசுபெருமான் அளித்தார்.

"உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கமுதல் அவ்வாறு இல்லை. பரத்தைமையில் ஈடுபட்டதற்காக அன்றி வேறு எக்காரணத்தையாவது முன்னிட்டுத் தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபசாரம் செய்கிறான் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்!" என்றார்.

இதன் பின்னர் சீடர் ஒருவர், கணவர்-மனைவி தொடர்பில் இத்தகைய சிக்கல்கள் இருக்குமானால், திருமணம் செய்யாது இருப்பதே மேலானது!" என்றார்.

இதற்கு இயேசு பிரான் அளித்த விளக்கம் இவ்வாறு அமைந்தது:

"அருள்கொடை பெற்றவரன்றி வேறு எவரும் இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

இயேசுபிரானிடம் செல்வந்தரான ஓர் இளைஞர் வந்தார். "நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்வதானால், என்னென்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். இதற்கு பதிலளித்த இயேசுபிரான்,

"கொலை செய்யாதே; விபசாரம் செய்யாதே; களவு செய்யாதே; பொய்ச்சான்று சொல்லாதே; தாய் தந்தையை மதித்து நட. மேலும், உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக.

### ஊசியின் காதில் நுழையும் ஒட்டகம்

நிறைவுள்ளவராக விரும்பினால் நீ போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும். செல்வன் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன்: செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது.

புதுப்படைப்பின் நாளில் மானிட மகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது என்னைப் பின்பற்றிய நீங்களும் இஸ்ரயேல் மக்களின் பன்னிரு குலத்தவர்க்கும் நடுவர்களாய்ப் பன்னிரு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் என் பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ,

# விண்ணரசு இவர்களுக்கே உரியது!

அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள். அப்போது தலைவர் அவனை வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?" என்று கேட்டார். அத்தலைவர் சினங்கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும் வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்!" என்று கூறினார்.



கலிலேயாவிலிருந்து யோர்தான் நதிக்கு அப்பாலிருந்த யூதேயா என்ற ஊருக்கு இயேசுபிரான் சென்றார். இயேசு தங்கள் ஊருக்கு வருகிறார் என்பதை முன்கூட்டியே அறிந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அயலூர்களிலிருந்தெல்லாம் அங்கு வந்து கூடிநின்றனர்.

இயேசுபிரான் எங்கு சென்றாலும் அவருடன் கூடவே பரிசேயர்களும் சென்றனர். இவர்களில் பெரும்பாலானோர், அவருடைய அருளுரையைக் கேட்டு நன்நெறியைக் கடைப்பிடிக்கக் கருதாமல், குதர்க்கமான கேள்விகளைக் கேட்டு இயேசுவிடம் குறைகளைக் கண்டு கொள்ளவே நாட்டம் கொண்டிருந்தனர்.

அங்கு தீர்க்க முடியாது என்று மருத்துவர்களால் கைவிடப்பட்ட பல நோயாளிகளைக் குணமாக்கினார். அவர்கள் இயேசுபிரானைக் கண்கண்ட தெய்வமாகக் கருதி வணங்கி, நன்றி செலுத்தினர். இக்காட்சிகளைக் கண்ட பரிசேயர்களுக்கு மென்மேலும் பொறாமை பொங்கியது. கேள்விகள் மூலமே இயேசுபிரானை மடக்கி விடலாம் என அவர்கள் துணிந்தனர். அவர்களில் ஒருவன், "ஒரு கணவன் தன் மனைவியை எக்காரணத்தைக் கொண்டும் விலக்கி வைப்பது முறையா?" என்று கேட்டான்.

இதற்கு இயேசு பிரான்:

"படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் 'ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' என்று நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா?" என்று கேட்டார்.

மேலும் அவர்,

"இதனால் கணவன் தன் தாய் தந்தையை

சிலர் பிறவியிலேயே மண உறவு கொள்ள முடியாதவராய் இருக்கின்றனர். வேறு சிலர் மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர் ஏற்றுக்கொள்ளட்டும்!" என்றார்.

**இராஜகுமாரன்**

### சிறுபிள்ளைகள்

இயேசுபெருமான், தன்னைக் காணவரும் மக்கள் கூட்டத்துடன் சேர்ந்துவரும் குழந்தைகளைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுடன் தானும் ஒரு சிறு குழந்தை போலாகி விடுவார். அவர்கள் பேசும் மழலை மொழிகளைக் கேட்டு இன்புறுவார். அவர்களுக்கு நல்லாசி கூறுவார். பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுடன் வந்து, அவர்களைத் தொட்டு ஆசி வழங்கும்படி வேண்டுவார்கள். அன்றொரு நாள் பலபெற்றார் தங்கள் குழந்தைகளுடன் வந்து இயேசுபிரானிடம் ஆசி வழங்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறு அனேகமானோர் திரண்டு வருவதைக் கண்ட சீடர்கள், இவர்கள் தங்கள் குருவுக்குத் தொந்தரவு தருகிறார்களே என்ற எண்ணத்தில், அவர்களை இயேசுபிரான் அருகே வரவிடாமல் தடுத்தனர். இதனைக் கண்ணுற்ற இயேசுபிரான்,

"சிறு பிள்ளைகள் என்னிடம் வருவதைத் தடை செய்யாதீர்கள்! ஏனெனில் விண்ணரசு இவர்களுக்கே உரியது!" என்று கூறி, சிறுவர்களைத் தம்மிடம் அழைத்து, அணைத்து நல்லாசிகளை வழங்கினார்.

பிள்ளைகளையோ, நில புலன்களையோ விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப் பேறாக அடைவர்.

ஆனால் முதன்மையானோர் பலர் கடைசியாவர். கடைசியானோர் பலர் முதன்மையாவர்.

### திராட்சைத் தோட்ட வேலையாள்கள்

விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார். அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள் களுடன் ஒத்துக்கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்றபொழுது சந்தை வெளியில் வேறு சிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார். அவர்களிடம், 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்; நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்.' என்றார். அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே சென்று அப்படியே செய்தார். ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்ற வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடம், 'நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் அவரைப் பார்த்து, 'எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை' என்றார்கள். அவர் அவர்களிடம், 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்' என்றார். மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம், 'வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி முதலில் வந்தவர்வரை அவர்களுக்குரிய கூலி கொடும்' என்றார். எனவே ஐந்து மணியளவில் வந்தவர்கள் ஒரு தெனாரியம் வீதம் பெற்றுக்கொண்டனர். அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார் கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம்தான் பெற்றார்கள். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டபோது அந்த நிலக்கிழா ருக்கு எதிராக முணுமுணுத்து, 'கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணிநேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே' என்றார்கள். அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, 'தோழரே நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ள வில்லையா? உமக்குரியதைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக்கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?' என்றார். இவ்வாறு கடைசியானோர் முதன்மையானவர். முதன்மையானோர் கடைசியாவர்!" என்று இயேசு கூறினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 14 விடை:** ☛ **கோதுமை**

**பரிசு பெறுவோர்:**

| | |
|---|---|
| 1. **விமலநாதன் சரண்யா,** பளுவெவ, பலாகல. | 3. **மு.தி. நாயகர்,** இராஜபுரம், கரடியனாறு. |
| 2. **செல்வி அ. ஜெயசித்ரா,** இந்தகல மேற்பிரிவு, நமுனுகுல. | 4. **ரி. யோகேஸ்வரி,** தமிழ் வித்தியாலயம், ஆசிரியர் விடுதி, கெங்கல்ல. |

5. **செல்வி எம். கவிதா,** 102/2, டிக்கோயா வீதி, ஹட்டன்.

**திருமறை (பு.ஆ) 17** வினா :- **விண்ணரசு யாருக்கு உரியதென இயேசு கூறினார்?**

செப்டெம்பர் 18 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை பு.ஆ.17 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# அடுத்து வருவது விளையாட்டுச் செய்திகள்.

**வாசிப்பவர் வர்ணா அனுசரணை-அரசியல்வாதிகள்**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்று சுருக்கமாகவும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்று எந்தக் காலத்திலேயோ சூட்டிய நீளமான பெயரை இன்றும் காரண காரியமின்றி பயன்படுத்தி வருவதுமான குழுவின் உறுப்பினர்கள் வவுனியாவில் பொலிசாரால் பந்தாடப்பட்டனர்.


மற்றொரு ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் தாக்குதல் களத்தை வேடிக்கை பார்க்கச் சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் அருகே இரண்டு கைக்குண்டுகள் திடீரென்று தோன்றின. இச் சம்பவங்கள் தொடர்பாக சக தமிழ்க் கட்சிகள் ஜனநாயக உணர்வுடன் மௌனம் அனுஷ்டித்து வருகின்றன.

அவுஸ்திரேலிய அணியை இலங்கை அணி வெளுத்து வாங்கியது. ரசிகர்களுக்கு சந்தோசம். கரகோஷம் செய்தனர். யாருமே கண்டனம் தெரிவிக்கவில்லை.

# தேர்தல் திருவிழாவும் வாக்கு வேட்டையும்

இந்திய தேர்தலை முன்னிட்டு தமிழகப் பத்திரிகைகளில் வெளியான கருத்துப்படங்களை உருவித் தருகிறேன். பார்த்துக் கொள்ளுங்கள்.











Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331





உலக அழகி ஐஸ்வர்யா ராய் அக்ஷய் கன்னா இருவரும் நிஜத்தில் காதலர்கள். 'ஐம்பது கிலோ தாஜ்மஹாலை' கட்டியாளப் போகும் கண்ணாளர் அக்ஷய் கன்னாதான்.

'தால்' படத்தில் இவர்கள் நிழல் காதலர்கள். ஐஸ்வர்யாவை காதலித்து விட்டு பிரியும் காதலனாக நடிக்கிறார் அக்ஷய். பின்னர் மறுபடி இணைகிறார்கள்.

ஐஸ்வர்யா ராய்க்கு இதில் இன்னொரு காதலர் அனில்கபூர். படம் முழுக்க படு இளமையாக வந்து கலக்குகிறார்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


← 'தால்' படம்தான் தமிழில் 'தாளம்' என்று மொழிமாற்றி வந்துள்ளது. படப்பிடிப்பு கண்ணுக்கு விருந்து. காதுக்கு விருந்து: ஏ.ஆர். ரகுமான். அக்ஷய் கன்னாவும், ஐஸ்வர்யாவும் திருமணம் செய்து கொள்ளப் போவதாக செய்திகள் வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இடைக்காலத்தில் ஊடலும் இருந்ததாம். 'தால்' படத்தில் பின்னர் ஊடல் கூடலில் முடிந்துவிட்டது.

## என்ன இது?



## வேகம்




→ நத்தைகளுக்கிடையில் ஓட்டப் (ஊருதல்) போட்டி நடத்தப்படுவதாகக் கூறினால் நம்புவதற்கே தயக்கமாக இருக்கிறதல்லவா? ஆனால் நடந்துதான் இருக்கிறது இந்த அபூர்வமான போட்டி.

பிரிட்டனிலுள்ள நோர்ஃபோக் மாநிலத்தில் உள்ள கொங்காம் என்ற இடத்தில் வருடா வருடம் நத்தை ஓட்டப் போட்டி நடைபெற்று வருகிறது. அண்மையில் அங்கு நடைபெற்ற போட்டியில் 'ஆர்ச்சி' என்ற பெயருடைய நத்தையார் வெற்றிபெற்று உலக சாதனையை நிலைநாட்டி சாதனையாளர் பட்டியலிலும் இடம் பெற்றுவிட்டார்.

சுமார் 13 சென்டிமீட்டர் (13 அங்குலம்) தூரத்தை ஆர்ச்சியார் ஊர்ந்து முடிக்க 2 நிமிடம் 20 நொடி எடுத்திருக்கிறார். ஆர்ச்சி நத்தையாருக்கு வேகமாக ஊர்வதற்கு பயிற்சி அளித்தவர் கார்ல் பான்ஹாம்.

## சந்தை




↑ படத்தில் சுவையான கேக் போல நாவூற வைக்கும் இது நச்சுக்காளான். முரசு 285 இல் இதனைப் பற்றி விளக்கியிருந்தோம்.

தற்போது இக் காளான்களுக்கு பயங்கர கிராக்கி ஏற்பட்டுள்ளது. நச்சு மருந்துகள், கிருமி நாசினிகள் தயாரிக்க இதனை கடத்துகிறார்கள். இதற்கு மவுசு இருப்பதை அறிந்ததும் கொலம்பியாவில் ஏராளமாக பயிரிடுகிறார்களாம்.

நச்சுக் காளான் ஒன்று இவ்வாறு பெருமளவில் பயிரிடப்படுவதும், மவுசு பெற்றிருப்பதும் உலக சாதனைதானே.

## வாபஸ்



↑ இலங்கையிலும் குறிப்பாகக் கொழும்பில் சூப்பர் மார்க்கெட்டுகள் பல உள்ளன. உலகெங்கும் சூப்பர் மார்க்கெட்டுகள் பெரியளவில் இருக்கின்றன.

நமக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே கூரையின்கீழ் பெறக்கூடிய இடமே சூப்பர் மார்க்கெட்.

உலகிலேயே மிகப் பிரமாண்டமான சூப்பர் மார்க்கெட் எங்குள்ளது தெரியுமா? அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ளது. 'மக்கீஸ் ஷொப்பிங் சென்டர்' என்று அழைக்கப்படும் அதன் தோற்றப் பொலிவைப் பாருங்கள்.

புறத்தோற்றமே இப்படி என்றால் உள்ளே போகப் போக எப்படியிருக்கும்! 1 இலட்சத்து 90 ஆயிரத்தி 500 சதுர மீட்டர் பரப்பளவில், பதினொரு அடுக்கு மாடிகளாகக் கட்டப்பட்டுள்ளது.

8 ஆயிரம் வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய தரிப்பிடமும் உண்டு. ஏ முதல் இசட் வரையான சகல பொருட்களையும் வாங்கிக்கொண்டு வீடு திரும்பலாம்.

← கார் ஓட்டப் போட்டிகளும் அபாயகரமானவைதான். அதி வேகமாகச் செலுத்தக்கூடிய விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட கார்களை ஓட்டுவதில் சாதனை புரிபவர்கள் சிலர். வேதனைக்குட்படுபவர்கள் பலர். இந்தப் போட்டிகளைக் கண்டுகளிக்கப் பல்லாயிரக்கணக்கில் பார்வையாளர்கள் கூடுவார்கள்.

இவ்வருடம் கோடைகாலத்தில் 'கனடியன் கிறான் பிறி' மோட்டார் போட்டி நடைபெற்றது. ஜார்லோ துருலியின் புரொஸ்ட் பேஜோ கார், கனவேகத்தில் ஓடிவந்து, முதலாவது வளைவைத் தாண்டும்போது, அவருக்கு முன்னால் ஓடிய ஒருவரின் கார் பழுதடைந்து பாதையில் தடுமாறியது. அந்த வண்டியுடன் மோதாமலிருப்பதற்காக துருலி முயற்சித்தபோது, அதன் பின் வலது சக்கரம் கழன்று விட்டது. இதனால் கட்டுப்பாட்டினை இழந்தது.

பின்புறம் வேகமாக ஓடிக்கொண்டு வந்த வண்டிகள் இவ்வண்டிமீது மோதாமலிருக்க, அவசரமாக நிறுத்தப்பட்டிருந்த கிரேனின் உதவியுடன் துருலியின் கார் துரிதவேகத்தில் மேலே உயர்த்தி அப்புறப்படுத்தப்பட்டது.

## 4வது பிறந்த நாள் வாழ்த்து

24 ++ 09 ++ 1999



### கிஷாந்தி-நிஷாந்தி

தெஹிவளையில் வசிக்கும் ராசயோகம்-மலர்விழி தம்பதியினரின் அருமைக் கண்மணிகள் கிஷாந்தி-நிஷாந்தி இரட்டையர்கள் தமது நான்காவது பிறந்த தினத்தை தமதில்லத்தில் கொண்டாடுகிறார்கள். உறவினர்கள் நண்பர்கள், அயலவர்கள் யாவரும் இரு கண்மணிகளும் தமிழும் சுவையும் போல வாழ்வாங்கு வாழ வசந்த வாழ்த்துக்களை வழங்குகிறார்கள்.